# கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை

## கைத்தறி மற்றும் துணிநூல்

கொள்கை விளக்கக் குறிப்பு
2024 – 2025

மானியக் கோரிக்கை எண். 17


**ஆர். காந்தி**
கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2024



அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.

# கொள்கை விளக்கக் குறிப்பு 2024-2025


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | கைத்தறித் துறை | 1 – 167 |
| 2. | துணிநூல் துறை | 168 – 248 |

# கைத்தறித் துறை
# அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| | முன்னுரை | 1 |
| 1. | கைத்தறித் தொழில் | 3 |
| 2. | விசைத்தறித் தொழில் | 15 |
| 3. | கைத்தறித் துறை | 22 |
| 4. | உற்பத்தி மற்றும் சந்தைப் படுத்துதலுக்கான ஆதரவுத் திட்டங்கள் | 31 |
| 5. | உள்கட்டமைப்புக்கான ஆதரவுத் திட்டங்கள் | 61 |
| 6. | நல்வாழ்வுக்கான ஆதரவுத் திட்டங்கள். | 91 |
| 7. | சட்டப்பூர்வ மற்றும் அமலாக்க நடவடிக்கைக்கான ஆதரவுத் திட்டங்கள் | 111 |
| 8. | ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் ஆவணப்படுத்துதல் | 121 |

| வ. எண் | | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|---|
| 9. | | துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள நிறுவனங்கள் | 124 |
| | 9.1 | தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்), சென்னை | 124 |
| | 9.2 | தமிழ்நாடு சரிகை ஆலை, காஞ்சிபுரம் | 146 |
| | 9.3 | தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, ஈரோடு | 150 |
| | 9.4 | தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், சென்னை | 155 |
| 10. | | நீடித்த வளர்ச்சி இலக்குகள், 2030 | 159 |
| 11. | | கைத்தறித் துறையின் 2024-2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 164 |

# துணிநூல் துறை
# அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 168 |
| 2. | முன்னேற்றத்தை முன்னிறுத்தும் துணிநூல் துறை | 170 |
| 3. | தமிழ்நாடு – ஜவுளி மையம் | 177 |
| 4. | வளர்ச்சிக்கான ஊக்கம் – சந்தைப்படுத்துதல் | 197 |
| 5. | தொழில்துறை மேம்பாட்டிற்கான உள்கட்டமைப்புத் திட்டங்கள் | 207 |
| 6. | நிலைத்தன்மைக்கான முன்னெடுப்புகள் | 220 |
| 7. | ஜவுளி மேம்பாட்டு நடவடிக்கைகள் | 223 |
| 8. | மனிதவள முன்னெடுப்புகள் | 229 |
| 9. | கூட்டுறவு நூற்பாலைகள் | 231 |
| 10. | துணிநூல் துறையின் முன்னோக்கிய பாதை | 239 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 11. | நீடித்த வளர்ச்சி இலக்குகள் – சிறந்த எதிர்காலத்திற்கான புத்தாக்க முன்னெடுப்புகள் | 242 |
| 12. | துணிநூல் துறையின் 2024–2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு | 245 |

# கைத்தறித் துறை

## முன்னுரை

கைத்தறித் தொழிலானது நமது கலாச்சாரத்துடன் பிணைந்த வளமான பாரம்பரியத்தைக் கொண்ட தொழிலாகும். நெடிய மற்றும் பராம்பரியம் மிக்க கைவினைத் திறனின் நுணுக்கங்களை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வதன் மூலம் கைத்தறித் தொழில் இன்றளவும் தனித்தன்மையினைக் கொண்டு விளங்குகிறது. நம் நாட்டில் கைத்தறித் தொழிலின் தோற்றத்தினை கி.மு.3000 ஆண்டு தொன்மையான சிந்து சமவெளி நாகரிக காலத்திலிருந்ததனை சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பழந்தமிழர்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர் என்பதை தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டம் கீழடி அகழாய்வில் கிடைக்கப்பெற்ற தொல்லியல் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

தமிழின் மூத்த இலக்கண நூலான தொல்காப்பியத்தில் நெசவின் பழமைக் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. சங்கத் தமிழ் நூல்களான புறநானூறு மற்றும் நற்றிணையில் உள்ள குறிப்புகள் மூலம் பழங்கால பெண்கள் அதிகளவில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளதை அறிய முடிகிறது. கீழடி, கொடுமணல், உறையூர் மற்றும் அரிக்கமேடு ஆகிய இடங்களில் அகழாய்வு மேற்கொண்டபோது கண்டறியப்பட்ட சாயத்தொட்டிகள் நெசவுத் தொழிலில் தமிழர்களின் வளமான பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்திற்குச் சாட்சியாக நிற்கிறது. புறநானூற்றில் **"பருத்திப் பெண்டின் பனுவல் அன்ன" (புறம்:125)–இல்** குறிப்பிடப்பட்டுள்ள வரிகள் பழங்காலப் பெண்கள் நெசவு நுட்பங்களைக் கற்றுக்கொண்டதைக் குறிக்கிறது.

கீழடி அகழ்வாராய்ச்சியில் சங்க கால நெசவுத் தொழில் தொடர்பான இலக்கியங்களுடன்

பொருந்தக்கூடிய தொல்பொருள் சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

1. **கைத்தறித் தொழில்**

நெசவுத் தொழிலின் முக்கியத்துவம் கருதி, நமது மாநிலத்தின் தொன்மையான நெசவு பாரம்பரியம் மற்றும் அதன் கலாச்சாரத்தைப் பாதுகாத்தல் மற்றும் மாநிலத்தில் உள்ள அனைத்து கைத்தறி செறிவு பகுதிகளிலுள்ள நெசவாளர்களின் வாழ்வாதாரத்தினை உறுதி செய்தல் என்ற இரட்டை நோக்கத்துடன் கைத்தறித் தொழிலில் உள்ள சவால்களை எதிர்கொள்ள அரசு பல்வேறு முன்னெடுப்புகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாகக் கைத்தறித் தொழிலின் மேம்பாட்டிற்காக உள்கட்டமைப்புத் திட்டங்கள், உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதல் பிரிவுக்கான திட்டங்கள், நெசவாளர்களுக்கான நலத் திட்டங்கள் போன்றவையும், கைத்தறித் தொழிலை பாதுகாக்க கைத்தறி (உற்பத்தி இரக ஒதுக்கீடு) சட்டம், 1985 மற்றும் புவிசார் குறியீடு பொருட்கள் (பதிவு

செய்தல் மற்றும் பாதுகாப்பு) சட்டம், 1999 போன்ற அமலாக்கப் பணிகளும் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பெரும்பாலான நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கைத்தறித் தொழில் சார்ந்ததாகவே உள்ளன. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1983 மற்றும் விதிகள் 1988 ஆகியவற்றின் கீழ், பதிவு செய்யப்பட்ட 1,114 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றில் 2.59 இலட்சம் நெசவாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும்பாலும் கிராமப்புறங்களிலும் சில கூட்டுறவுச் சங்கங்கள் புறநகர்ப் பகுதிகளிலும் இயங்கி வருகின்றன. தமிழ்நாட்டுக் கைத்தறி நெசவாளர்கள் சாதாரண குழி தறி, ஜக்கார்டு மற்றும் டாபியுடன் கூடிய குழி தறி, சட்டத்தறி, ஜக்கார்டு மற்றும் டாபியுடன் கூடிய சட்டத்தறிகளை நெசவுத் தொழிலுக்கு

பயன்படுத்தி வருகிறார்கள். கைத்தறி நெசவாளர்களுக்கானத் திட்டங்கள் மூலம் கைத்தறித் தொழிலின் மேம்பாடு மற்றும் நிலைப்புத் தன்மைக்காக ஒன்றிய மற்றும் மாநில அரசால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2019–2020–ஆம் ஆண்டு, 4–வது அகில இந்திய கைத்தறி கணக்கெடுப்பின்படி, கைத்தறி எண்ணிக்கையில் அசாம் மற்றும் மேற்கு வங்காளத்திற்கு அடுத்தபடியாக கைத்தறித்தொழிலில் தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது. அகில இந்திய அளவில் 27.01 இலட்சம் கைத்தறிகள் மற்றும் 35.22 இலட்சம் நெசவாளர்கள் மற்றும் உப தொழில் புரிவோர் உள்ளனர். அதில் 1.91 இலட்சம் கைத்தறிகள் மற்றும் 2.44 இலட்சம் கைத்தறி நெசவாளர்கள் மற்றும் உப தொழில் புரிவோர் தமிழ்நாட்டில் உள்ளனர். அகில இந்திய அளவில் கைத்தறிகள் மற்றும் உப தொழில்புரிவோர் எண்ணிக்கையில் நமது மாநிலத்தின் கைத்தறித் தொழிலின் பங்கு முறையே 8 மற்றும்

7 விழுக்காடு ஆகும். கூட்டுறவு அமைப்பின்கீழ் 1.18 இலட்சம் நெசவாளர்கள் உள்ளனர். இதில் 60 விழுக்காடு பெண் நெசவாளர்கள் ஆவர்.

## கைத்தறி நெசவு செயல்முறை




தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு வரும் பரந்த எண்ணிக்கையிலான கைத்தறி இரகங்கள், அவற்றின் சிறந்த கைவினைத்திறன் மற்றும் தனித்துவத்திற்காக, உலகளவில் புகழ் பெற்றுள்ளன. தமிழ்நாட்டின் காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள்,

திருபுவனம் பட்டுச் சேலைகள், ஆரணி பட்டுச் சேலைகள், பவானி ஜமுக்காளம், மதுரை சுங்கடிச் சேலைகள், கோயம்புத்தூர் கோரா காட்டன் சேலைகள், பரமக்குடி சேலைகள், சேலம் வெண் பட்டு வேட்டிகள், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் வீட்டு உபயோக துணி இரகங்கள் போன்ற கைத்தறி இரகங்கள் தனித்துவ வேலைப்பாடு மற்றும் நுணுக்கமான வேலைப்பாடுகளுக்கு பெயர் பெற்றதாகும்.

## மண்டல வாரியாக உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

**1. வடக்கு மண்டலம்**

| வ. எண் | சரகம் | மாவட்டம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 1. காஞ்சிபுரம் | 54 |
| | | 2. செங்கல்பட்டு | 20 |
| | | 3. திருவள்ளூர் | 73 |
| 3 | வேலூர் | 4. வேலூர் | 33 |
| | | 5. இராணிப்பேட்டை | 20 |
| | | 6. திருப்பத்தூர் | 2 |
| 4 | திருவண்ணாமலை | 7. திருவண்ணாமலை | 24 |
| 5 | கடலூர் | 8. கடலூர் | 30 |

| | | | |
|---|---|---|---|
| | | 9. விழுப்புரம் | 21 |
| | | 10. கள்ளக்குறிச்சி | 2 |
| | | **மொத்தம்** | **279** |

**2. கிழக்கு மண்டலம்**

| வ. எண் | சரகம் | மாவட்டம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 6 | கும்பகோணம் | 11. தஞ்சாவூர் | 15 |
| | | 12. பெரம்பலூர் | 1 |
| | | 13. அரியலூர் | 32 |
| 7 | திருவாரூர் | 14. நாகப்பட்டினம் | 1 |
| | | 15. திருவாரூர் | 3 |
| | | 16. மயிலாடுதுறை | 2 |
| 8 | திருச்சிராப்பள்ளி | 17. திருச்சிராப்பள்ளி | 21 |
| | | **மொத்தம்** | **75** |

**3. மேற்கு மண்டலம்**

| வ. எண் | சரகம் | மாவட்டம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 9 | கோயம்புத்தூர் | 18. கோயம்புத்தூர் | 61 |
| | | 19. நீலகிரி | 1 |
| 10 | ஈரோடு | 20. ஈரோடு | 190 |
| 11 | திருப்பூர் | 21. திருப்பூர் | 47 |
| 12 | திருச்செங்கோடு | 22. நாமக்கல் | 71 |
| 13 | சேலம் | 23. சேலம் | 60 |
| | | 24. தர்மபுரி | 5 |
| 14 | கரூர் | 25. கரூர் | 43 |
| | | **மொத்தம்** | **478** |

**4. தெற்கு மண்டலம்**

| **வ. எண்** | **சரகம்** | **மாவட்டம்** | **எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 15 | மதுரை | 26. மதுரை | 30 |
| | | 27. தேனி | 8 |
| 16 | திண்டுக்கல் | 28. திண்டுக்கல் | 39 |
| 17 | விருதுநகர் | 29. விருதுநகர் | 51 |
| 18 | பரமக்குடி | 30. இராமநாதபுரம் | 82 |
| | | 31. சிவகங்கை | 1 |
| 19 | திருநெல்வேலி | 32. திருநெல்வேலி | 16 |
| | | 33. தென்காசி | 11 |
| | | 34. தூத்துக்குடி | 9 |
| 20 | நாகர்கோவில் | 35. கன்னியாகுமரி | 35 |
| | | **மொத்தம்** | **282** |

**கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தி மற்றும் விற்பனை**

2023–2024 ஆம் ஆண்டில், கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ.1091.93 கோடி மதிப்பில் கைத்தறித் துணி இரகங்களை உற்பத்தி செய்து ரூ.1241.99 கோடிக்கு விற்பனை செய்துள்ளன.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வெளிச்சந்தை மற்றும் கோ–ஆப்டெக்ஸ் உற்பத்தி திட்டத்திற்குத் தேவையான துணிகளை உற்பத்தி

செய்கின்றன. இது தவிர பள்ளிக் கல்வித் துறையின் இலவச சீருடை வழங்கும் திட்டம் மற்றும் வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் வருவாய் துறைக்கு தேவையான துணிகளையும் உற்பத்தி செய்து வழங்கி வருகின்றன.

**கைத்தறித் தொழிலின் பலம்:**

- நுணுக்கமான முறையில் பல்வேறு விதமான துணி இரகங்களை நெசவு செய்தல்
- வடிவமைப்புச் சார்ந்த பன்முகத்தன்மை
- புதிய வடிவமைப்புகளுக்கு விரைவாக மாறும் தன்மை
- நுணுக்கமான உயர் திறன் கொண்ட நெசவாளர்கள் கிடைத்தல்
- குறைவான தொழில்நுட்பத்தில் கலைநயமிக்க பாரம்பரிய முறையில் உற்பத்தி செய்தல்
- சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில்நுட்பம் மற்றும் செயல்முறை
- விசைத்தறியின் எல்லைக்கு அப்பாற்பட்டு கைத்தறிகளால் தொடர்ந்து உற்பத்தி செய்யக்கூடிய இரகங்கள்

சமீப காலமாக கைத்தறித் தொழிலானது எண்ணிலடங்கா சவால்களைச் சந்தித்து வருகிறது. நெசவு பணிகளுக்கான ஆட்கள் குறைந்து வருவது, தேவையான ஊதியமின்மை, கடினமான வேலைப்பளு மற்றும் அதிகளவிலான உடலுழைப்பு போன்ற சவால்கள் இத்தொழிலில் பரவலாக உள்ளன.

**தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் எதிர்கொள்ளும் பிரச்சனைகள்:**

- வெகுவாகக் குறைந்து வரும் கைத்தறி நெசவாளர்கள்
- விசைத்தறி மற்றும் ஜவுளி ஆலைகளுடன் ஒப்பிடுகையில் குறைந்த உற்பத்தித்திறன்
- தொழில்நுட்ப மேம்பாட்டுக்கான குறைவான வரம்பு
- திறன்மிகு தொழிலாளர்கள் வேறு வேலைக்கு செல்லுதல்

- **வடிவமைப்பு மற்றும் நவநாகரிக போக்குகளில் புதுமைகளைப் பின்பற்ற நெசவாளர்களிடையே மாறுதலுக்கான தயக்கம்**

கைத்தறித் தொழிலின் பாரம்பரியத்தைப் பாதுகாத்து, நெசவாளர்களுக்கு வலுவான கட்டமைப்பினை ஏற்படுத்தி தரவும், நிறுவப்பட்டுள்ள மதிப்பு சங்கிலி இணைப்பு மூலம் நெசவுத் தொழிலின் நிலைத்தன்மையை உறுதிப்படுத்தவும், பின்வரும் பல சீரியத் திட்டங்களை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது:

**வடிவமைப்பு:–** நெசவாளர்களுக்கு உதவும் நோக்கத்தில் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனமானது வடிவமைப்பு நிறுவனங்களுடன் இணைந்து, புதிய வடிவமைப்புகளை வழங்கி வருகிறது. துறையால் தேசிய ஆடை அலங்கார நிறுவனம் மற்றும் தேசிய வடிவமைப்பு நிறுவனம் மூலம் 1000 புதிய வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**மூலப்பொருள் விநியோகம்:–** 6 கூட்டுறவு நூற்பாலைகள் கைத்தறி நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் நூல் வழங்குகின்றன. மேலும், மூலப்பொருள் வழங்கும் திட்டத்தின் கீழ் நூல் கொள்முதல் செய்ய நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 15 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது.

**நெசவு:–** மாநிலம் முழுவதும் 103 குழுமங்களில் 1,114 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு உதவி செய்து வருகிறது. மாநிலம் முழுவதும் முதற்கட்டமாக 10 சிறிய அளவிலான கைத்தறிப் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது.

**சந்தைப்படுத்தல்:–** கோ–ஆப்டெக்ஸ் அதன் விற்பனை நிலையங்கள் மற்றும் மின் வர்த்தக இணையதளம் மூலம் கைத்தறிப் பொருட்களைச் சந்தைப்படுத்துகிறது. இது தவிர, சங்கங்கள் தங்கள் தயாரிப்புகளைத் தமிழ்நாடு முழுவதும் அதன் சொந்த விற்பனை நிலையங்கள் மூலமாகவும், கண்காட்சிகளில் பங்கேற்பதன் மூலமும் விற்பனை செய்து வருகின்றன.

**விற்பனை:–** கோ–ஆப்டெக்ஸ் இந்தியா முழுவதும் உள்ள 150 விற்பனை நிலையங்கள் மூலம் ரூ.215 கோடி மதிப்பிலான கைத்தறிப் பொருட்களை விற்பனை செய்துள்ளது. மேலும், சங்கங்கள் ரூ.969 கோடி மதிப்பிலான கைத்தறி இரகங்களை வெளிச்சந்தை மூலம் விற்பனை செய்துள்ளன.

## கைத்தறி ஏற்றுமதி

இந்தியாவில் கைத்தறியில் நெசவு செய்யப்பட்ட படுக்கை விரிப்புகள், மேஜை விரிப்புகள், கழிப்பறை மற்றும் சமையலறைத் துணி இரகங்கள், துண்டுகள், திரைச்சீலைகள், மெத்தைகள் மற்றும் தரை விரிப்புகள், போன்றவை அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, இத்தாலி, பிரான்ஸ், ஜப்பான், சவுதி அரேபியா, ஆஸ்திரேலியா, நெதர்லாந்து, ஐக்கிய அரபு அமீரகம்

போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

2022−2023 ஆம் ஆண்டில், இந்தியாவில் கைத்தறிப் பொருட்களின் ஒட்டுமொத்த ஏற்றுமதி மதிப்பு ரூ.1445.53 கோடி. இந்தியாவின் மொத்த கைத்தறி இரகங்கள் ஏற்றுமதியில் வீட்டு உபயோக துணி இரகங்கள் 60 விழுக்காட்டிற்கும் அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. தரைவிரிப்புகள் மற்றும் மிதியடிகள் ஆகியவற்றின் ஏற்றுமதி மதிப்பு 2022−2023 ஆம் ஆண்டில் ரூ.189.89 கோடியாகும், இது மொத்த ஏற்றுமதி மதிப்பில் 13 விழுக்காடு பங்களிப்பினைக் கொண்டுள்ளது

இந்தியாவின் முக்கிய கைத்தறி ஏற்றுமதி மையங்கள் கரூர், பானிபட், வாரணாசி மற்றும் கண்ணூர் ஆகும். இங்கு கைத்தறி தயாரிப்புகளான படுக்கை விரிப்புகள், மேஜை விரிப்புகள், சமையலறைத் துணிகள், கழிவறைத் துணிகள், தரை விரிப்பான்கள், எம்பிராய்டரி செய்யப்பட்ட இரகங்கள், திரைச்சீலைகள்

போன்றவை ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யப்படுகின்றன.

தமிழ்நாட்டின் முக்கிய ஏற்றுமதி மையங்களான ஈரோடு, கரூர், சேலம் மற்றும் திருச்செங்கோடு ஆகியவற்றில் போர்வைகள், படுக்கை விரிப்புகள் மற்றும் வீட்டு அலங்கார இரகங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

## 2. விசைத்தறித் தொழில்

இந்தியாவில் விசைத்தறித் தொழில் நாட்டின் ஜவுளித் தொழிலுக்கு மிகப்பெரிய பங்களிப்பை வழங்கி வருகிறது. இது இந்தியாவின் பொருளாதாரத்திற்கு மிகப்பெரிய பங்களிப்பினை வழங்கி வருவதன் மூலம் இத்துறை முக்கியமான துறைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்தியாவின் மொத்த துணி உற்பத்தியில் சுமார் 58.4 விழுக்காடு விசைத்தறி மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆயத்த ஆடைகள் மற்றும் வீட்டு உபயோகத் துணிகளின் உற்பத்தியானது விசைத்தறி தொழிலையே பெரிதும் சார்ந்துள்ளது.

ஜவுளி மற்றும் ஆடை ஏற்றுமதியில் உலகளவில் ஆறாவது மிகப்பெரிய ஏற்றுமதி நாடாக இந்தியா உள்ளது. இந்தியாவில் உள்ள விசைத்தறிகளில், காடாத் துணிகள், சாயமிடப்பட்டத் துணிகள், பருத்தி மற்றும் செயற்கை இழை கலப்புத் துணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

நம் நாட்டில், முழு ஜவுளி மதிப்பு சங்கிலியில் விசைத்தறி முதன்மையான அங்கம் வகிக்கிறது. ஒன்றிய ஜவுளி அமைச்சகத்தின் 2018–2019 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையின்படி, 27.77 இலட்சம் விசைத்தறிகள் உள்ளன. அவற்றில் 1.50 இலட்சம் (5.40%) நாடா இல்லாத் தறிகளாகும். விசைத்தறித் துறை மொத்த துணி உற்பத்தியில் 60 விழுக்காடு பங்களிப்பதோடு ஏறத்தாழ 44.18 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குகிறது. ஏற்றுமதிக்கானத் துணிகளில் 60 விழுக்காட்டிற்கும் அதிகமானவை விசைத்தறியிலிருந்தே உற்பத்தி செய்யப்படுகின்றன.

## தமிழ்நாட்டில் விசைத்தறித் தொழிலின் பங்கு

விசைத்தறி எண்ணிக்கையில் மகாராஷ்டிரா மாநிலத்திற்கு அடுத்தபடியாக தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது. இந்திய அளவில் 27.77 இலட்சம் விசைத்தறிகளில் 44.18 இலட்சம் தொழிலாளர்கள் பணிபுரியும் நிலையில், மாநிலத்தில் 5.68 இலட்சம் விசைத்தறிகளில் 10.18 இலட்சம் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இதனடிப்படையில் விசைத்தறிகள் மற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் நமது மாநிலத்தின் பங்கு முறையே 20 மற்றும் 23 விழுக்காடு ஆகும்.

தென்மாநிலங்களில் உள்ள விசைத்தறிகளில் தமிழ்நாடு அதிக செறிவு கொண்டு, கடந்த மூன்று பத்தாண்டுகளில் இத்துறை அபரிமிதமாக வளர்ச்சி பெற்றுள்ளது.

தமிழ்நாட்டில் 1) ஈரோடு, 2) கோயம்புத்தூர், 3) திருப்பூர், 4) சேலம், 5) நாமக்கல்,

6) கரூர், 7) திருவள்ளூர், 8) மதுரை, 9) திருநெல்வேலி, 10) வேலூர், 11) கடலூர், 12) காஞ்சிபுரம், 13) திருவண்ணாமலை மற்றும் 14) விருதுநகர் ஆகிய மாவட்டங்கள் விசைத்தறிச் செறிவு மிக்க மாவட்டங்களாகும். தமிழ்நாட்டில் பெருமளவில் சாதாரண விசைத்தறிகளும், குறைந்த எண்ணிக்கையில் நாடா இல்லாத் தறிகளும் உள்ளன.

தமிழ்நாட்டில் 5.68 இலட்சம் விசைத்தறிகள் உள்ளன. இது இந்தியாவிலுள்ள 27.77 இலட்சம் விசைத்தறிகளில் ஐந்தில் ஒரு பங்கு ஆகும். தமிழ்நாட்டில், 237 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் (PWCS) உள்ளன. இவற்றில் 70,288 விசைத்தறிகள் இயங்கி வருகின்றன.

**மண்டல வாரியாக உள்ள விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்**

| வ. எண் | சரகம் | மாவட்டம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| **1.** | **மேற்கு மண்டலம்** | | |
| 1 | ஈரோடு | ஈரோடு | 56 |

| வ. எண் | சரகம் | மாவட்டம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 32 |
| 3 | திருப்பூர் | திருப்பூர் | 25 |
| 4 | சேலம் | சேலம் | 18 |
| 5 | திருச்செங்கோடு | நாமக்கல் | 82 |
| **2.** | **வடக்கு மண்டலம்** | | |
| 6 | திருவள்ளூர் | திருவள்ளூர் | 20 |
| **3.** | **தெற்கு மண்டலம்** | | |
| 7 | மதுரை | மதுரை | 1 |
| | | தேனி | 2 |
| 8 | திருநெல்வேலி | தென்காசி | 1 |
| | | **மொத்தம்** | **237** |

விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பள்ளிக் குழந்தைகளுக்கு சீருடை வழங்கும் திட்டம் மற்றும் வேட்டி சேலை வழங்கும் திட்டத்துக்கானத் துணிகளை அதிகளவில் உற்பத்தி செய்து வழங்கி வருகின்றன.

2023–2024 ஆம் ஆண்டில், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ.789.15 கோடி

மதிப்பிலான 1931 இலட்சம் மீட்டர் துணிகளை உற்பத்தி செய்து, ரூ.809.70 கோடி மதிப்பிலான 1938.85 இலட்சம் மீட்டர் துணிகளை விற்பனை செய்துள்ளன.

**தமிழ்நாட்டில் விசைத்தறித் தொழில் எதிர்கொள்ளும் பிரச்சனைகள்:**

- வழக்கொழிந்த தொழில்நுட்பம் மற்றும் விசைத்தறி அலகுகள் சிறிய அளவில் தனித்தனியே பிரிந்து செயல்படுதல்
- கடன் பெறுவதில் சிரமம் மற்றும் சந்தைப்படுத்துதலில் உள்ள போட்டி
- குறைவான தொழில்நுட்பத் திறன் கொண்ட மனித வளம் மற்றும் தரம் குறித்தான குறைவான உணர்வு
- உலகமயமாக்கப்பட்ட ஜவுளி வர்த்தகம் மற்றும் இறக்குமதி ஊடுருவலால் அச்சுறுத்தல்

விசைத்தறித் தொழிலில் உள்ள சவால்களை எதிர்கொள்வதற்கும், இத்தொழிலை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்கும் மதிப்புக் கூட்டப்பட்ட துணிகளுக்கான வளர்ந்து வரும் தேவையை முழுவதுமாக உணர்ந்து கொள்வதற்கும், தமிழ்நாடு அரசு கீழ்க்கண்ட பகுதிகளில் தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

1. சாதாரண மற்றும் நாடாத் தறிகளை ரேப்பியர் மற்றும் நாடா இல்லாத் தானியங்கி தறிகளாக நவீனமயமாக்கி மேம்படுத்துதல்
2. தடிமனான பருத்தி நூலின் பயன்பாட்டிலிருந்து செயற்கை இழை மற்றும் நுண்ணிய பருத்தி நூல் பயன்பாட்டிற்கு மாற்றுதல்
3. காடாத் துணிகள் உற்பத்தியில் இருந்து மதிப்பு கூட்டப்பட்ட துணிகளுக்கு மாற்றுதல்
4. மேம்படுத்தப்பட்ட உயர் தொழில்நுட்ப விசைத்தறிப் பூங்காக்களை நிறுவுதல்

5. மாநிலத்திற்குள் மதிப்புக் கூட்டப்பட்ட துணிகளை உற்பத்தி செய்தல்
6. மின்வணிக தளத்தினை உருவாக்கி நேரடி ஏற்றுமதிக்கு வசதி செய்து தருதல்
7. நெசவுக்கு முந்தைய மற்றும் பிந்தைய பணிகளை மேற்கொள்ள தற்போதுள்ள குழுமங்களில் பொது வசதி மையங்கள் ஏற்படுத்தி தருதல்
8. திறன் வளர்த்தலை மேம்படுத்துவதன் மூலம் தொழிலாளர்களின் திறமையினை அதிகரித்தல்

## 3. கைத்தறித் துறை

1956 ஆம் ஆண்டு கூட்டுறவுத் துறையிலிருந்து கைத்தறி மற்றும் துணிநூல் துறையானது தனித்துறையாகப் பிரிக்கப்பட்டு, பின்னர், கைத்தறி மற்றும் துணிநூல் துறையில் தனித்தனியே கவனம் செலுத்த ஏதுவாக அக்டோபர் 23, 2021 அன்று கைத்தறி மற்றும் துணிநூல் துறையானது கைத்தறித்

துறை மற்றும் துணிநூல் துறை என இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

கைத்தறி மற்றும் விசைத்தறித் துறைகளின் ஒருமித்த வளர்ச்சியை ஊக்குவித்து, அனைத்து நெசவாளர்கள் மற்றும் அதைச் சார்ந்த தொழிலாளர்களின் நலனை மேம்படுத்துவதே கைத்தறித் துறையின் முக்கிய குறிக்கோளாகும்.

தமிழ்நாட்டில் உள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், இத்தொழிலுக்குத் தொடர்புடைய இதர கூட்டுறவு நிறுவனங்களுக்கும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983 மற்றும் விதிகள் 1988– இன்படி "செயற்பதிவாளராக" செயல்பட கைத்தறி ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**துறையின் நோக்கங்கள்**

மறுவரையறை செய்யப்பட்ட துறையின் நோக்கங்கள் பின்வருமாறு:

- **உள்கட்டமைப்புத் திட்டங்கள்:–** அதிகரித்து வரும் வடிவமைப்பு மற்றும் இரக மாற்றங்களுக்கான தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு உயர்மதிப்புக் கூட்டல் மற்றும் புதுமையான உற்பத்திகளுக்கு ஏற்ற உபகரணங்களுடன் கூடிய தறிகளின் வடிவமைப்பு செயல்திறனை மேம்படுத்துதல்

- கைத்தறித் தொழிலைக் குடிசை தொழிலிருந்து பெருந்தொழில் நிலைக்கு முன்னேற்றுதல்

- **உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதல் திட்டங்கள்:–** வணிகச் சின்னம் மற்றும் திறன்மிகு சந்தைப்படுத்துதல் உத்திகள் மூலம் பரந்த சந்தை நிலவரத்தை ஆராய்ந்து, முக்கிய சந்தைத் திறனை வசப்படுத்திக் கொள்ள நிறுவன வள திட்டமிடல் மென்பொருளின் (ERP) கீழ் மின் வணிகத் தளத்தை உருவாக்குதல்

- கைத்தறித் தொழிலில் உள்ள நெசவாளர்களைத் தக்க வைத்து இத்தொழிலை நம்பியுள்ள நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வாழ்வாதாரம் வழங்குதல்

- இரக மாற்றத்துடன் சந்தைப்படுத்தக்கூடிய இரகங்களை உற்பத்தி செய்வதற்கான திறன்களை மேம்படுத்துதல் மற்றும் உலகம் முழுவதும் மாறிவரும் புதிய இரகங்களுக்கான தேவைகளுக்கு ஏற்ப வடிவமைப்பு மாற்றங்களைத் தொடர்ந்து வழங்குதல்

- **நல்வாழ்வு ஆதரவுத் திட்டங்கள்:–** நெசவுத் தொழிலில் திறனைத் தக்கவைத்துக் கொள்வதற்காக நெசவாளர்களுக்கு மேம்பட்ட பணிச் சூழலை உருவாக்குதல் மற்றும் நியாயமான கூலியினை வழங்குவதோடு பாரம்பரிய கைநெசவுமுறை அழிந்து போகாமல்

பாதுகாக்க இளம் திறன்மிக்கத் தொழிலாளர்களை உருவாக்குதல்

- **சட்டப்பூர்வ / அமலாக்க ஆதரவுத் திட்டங்கள்:–** கைத்தறியில் மட்டுமே உற்பத்தி செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இரகங்கள் குறித்து வாடிக்கையாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி அதன் மூலம் இத்தொழிலை பாதுகாத்தல் மற்றும் கைத்தறியில் தானியங்கி விசைத்தறிகளின் ஊடுருவல்களைத் தடுத்து நெசவு பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தினை நமது எதிர்காலச் சந்ததியினருக்குக் கொண்டு செல்லுதல்

மேற்கூறிய நோக்கங்களை நிறைவேற்றும் வகையில், பின்வரும் இனங்களில் முன்னுதாரணத் திட்டங்களை ஏற்படுத்த தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது:

- வடிவமைப்புகளை மேம்படுத்த கைத்தறி நெசவாளர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல்
- நெசவாளர்களுக்குத் தொடர் வேலை வாய்ப்பினை வழங்குவதற்கு ஏதுவான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்
- புதிய சந்தை வழிகளை கண்டறிய தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் தேசிய வடிவமைப்பு நிறுவனத்துடன் இணைந்து புதிய வடிவமைப்புகளை உருவாக்குதல்
- நெசவுத் தொழிலை இளைஞர்கள் வருவாய் ஈட்டும் தொழிலாக மேற்கொள்வதை ஊக்கப்படுத்தும் விதமாக தொடர் நெசவுப் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல்
- சர்வதேச கண்காட்சிகளில் மட்டுமின்றி ஒருங்கிணைந்த வளாகம் மற்றும் கைத்தறி

அருங்காட்சியகத்திலும் கைத்தறி இரகங்களை காட்சிப்படுத்தி அதிக அளவில் பிரபலப்படுத்துதல்

- பாரம்பரிய வடிவமைப்பு முதல் சமகால வடிவமைப்பு வரை வாடிக்கையாளர்களின் விருப்பங்களுக்கு ஏற்பவும், கையால் நெய்யப்பட்ட அசல் கைத்தறி இரகங்களின் தேவைகளுக்கு ஏற்றவாறும் உற்பத்தியை ஊக்குவித்தல்


**நிருவாக அமைப்பு**

தமிழ்நாடு அரசின் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் கைத்தறித் துறை செயல்படுகிறது. மாநிலத்தில் உள்ள 38 மாவட்டங்கள் 20 சரகங்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு சரகமும் அருகில் உள்ள சில மாவட்டங்களை உள்ளடக்கி கைத்தறித் துணை இயக்குநர்கள் / உதவி இயக்குநர்கள் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது.

மேலும், கைத்தறிக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட இரகங்களை விசைத்தறியில் உற்பத்தி செய்வதைத் தடுக்கவும், சட்ட விதிமீறல்களைக் கண்காணிக்கவும் கைத்தறி (இரக உற்பத்தி ஒதுக்கீடு) சட்டம், 1985–இன்கீழ் சென்னை, சேலம், திருச்செங்கோடு, ஈரோடு, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய 6 இடங்களில் அமலாக்கப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு அவை துணை இயக்குநர் (அமலாக்கம்) / உதவி அமலாக்க அலுவலர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன. மேலும், இவ்வலுவலகங்கள் புவிசார் குறியீடுகள் (பதிவு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 1999–இன்கீழ் பதிவு செய்யப்பட்ட கைத்தறி இரகங்களின் மீதான விதிமீறல்களையும் கண்காணித்து வருகின்றன.

கைத்தறித் துறையின் நிருவாக கட்டமைப்பு வரைபடம் பின்வருமாறு:

# கைத்தறித் துறையின் நிருவாகக் கட்டமைப்பு



**கைத்தறி துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் நிறுவனங்கள்:**

1) தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்)
2) தமிழ்நாடு சரிகை ஆலை நிறுவனம், காஞ்சிபுரம்
3) தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, ஈரோடு
4) தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், சென்னை
5) 1,114 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்
6) 237 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

**4. உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதலுக்கான ஆதரவுத் திட்டங்கள்**

**4.1. மாநில அரசின் நிதியுதவித் திட்டங்கள்**

**அ) வேட்டி சேலை வழங்கும் திட்டம்**

தமிழ்நாடு அரசு, 1983 ஆம் ஆண்டில் வேட்டி சேலை வழங்கும் திட்டத்தை முன்னோடித் திட்டங்களில் ஒன்றாக அறிமுகப்படுத்தி செயல்படுத்தி

வருகிறது. தமிழ்நாட்டில் ஏறத்தாழ 2,664 கைத்தறி நெசவாளர்கள், 11,124 பெடல் தறி நெசவாளர்கள் மற்றும் 41,983 விசைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர் வேலைவாய்ப்பு வழங்குதல் மற்றும் ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் பண்டிகையின் போது தமிழ்நாட்டின் நகர்ப்புறம் மற்றும் கிராமப்புற ஏழை மக்களின் துணித் தேவையினைப் பூர்த்தி செய்யும் நோக்கில் சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்குதல் ஆகிய இரட்டை நோக்கங்களை அடிப்படையாக கொண்டு இத்திட்டம் தமிழ்நாடு அரசால் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2023–2024 ஆம் ஆண்டில் பொங்கல் 2024 பண்டிகைக்கு 1.77 கோடி சேலைகள் மற்றும் 1.77 கோடி வேட்டிகளை வழங்குவதற்கான ஆணையினை அரசு வெளியிட்டதுடன் திட்டத்தைச் செயல்படுத்த முன்பணமாக ரூ.449.47 கோடி விடுவித்து வழங்கியது.

வருவாய் நிருவாக ஆணையரகம் வழங்கிய தேவை பட்டியலின் அடிப்படையில், கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உற்பத்தி இலக்கு நிர்ணயம் செய்து வழங்கப்பட்டது. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ–ஆப்டெக்ஸ்), தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் மற்றும் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் ஆகியவை இந்தத் திட்டத்திற்கான முகமை நிறுவனங்களாக நியமிக்கப்பட்டுள்ளன. கைத்தறித் துறையால் வகுக்கப்பட்ட செயல் திட்ட அட்டவணைப்படி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் சேலைகள் மற்றும் வேட்டிகளைத் திட்ட காலத்திற்குள் உற்பத்தி செய்து, 31.12.2023–க்கு முன்னதாக வருவாய் துறையின் 317 வட்டங்களுக்கும் அனுப்பப்பட்டன. வட்டங்களுக்கு இரகங்களை கொண்டு செல்வதற்காக ஈடுபடுத்தப்பட்ட வாகனங்கள் புவியிடங்காட்டி (GPS) மூலம்

கண்காணிக்கப்பட்டதுடன், இத்திட்டத்தின்கீழ் வேட்டி சேலை விநியோகத்தின் முழு முன்னேற்றத்தையும் கண்காணிக்க கைபேசி செயலியும் உருவாக்கப்பட்டது.

**ஆ. வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் கைத்தறி மற்றும் பெடல்தறி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் தொடர் வேலைவாய்ப்பு வழங்குதல்**

வேட்டி சேலை வழங்கும் திட்டத்தில் ஈடுபட்டு வரும் நெசவாளர்களுக்குத் தொடர் வேலைவாய்ப்பினை வழங்கும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும், ஜனவரி முதல் ஜுன் மாதம் வரை கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உற்பத்தித் திட்டம் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2024 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு வேட்டி சேலைகளை வழங்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கீழ்க்கண்டவாறு உற்பத்தித் திட்டம் வழங்கப்பட்டுள்ளது:

| வ. எண் | இரகம் | தறிகளின் எண்ணிக்கை | உற்பத்தி திட்டம் | |
|---|---|---|---|---|
| | | | சேலை | வேட்டி |
| 1 | கைத்தறிச் சேலை | 834 | 41450 | -- |
| 2 | கைத்தறி வேட்டி | 1509 | -- | 89280 |
| 3 | பெடல்தறிச் சேலை | 9200 | 1336600 | -- |
| 4 | பெடல்தறி வேட்டி | 2683 | -- | 432556 |
| **மொத்தம்** | | **14226** | **1378050** | **521836** |

## இ. பள்ளிக் குழந்தைகளுக்குச் சீருடை வழங்கும் திட்டம்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்குச் சீருடை வழங்கும் திட்டத்தை அரசு ஆண்டுதோறும் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 1ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் சத்துணவுத் திட்டத்தின் கீழுள்ள மாணாக்கர்கள் பயன்பெறுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் மாணாக்கர்களுக்கு 4 இணை சீருடைகள் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வருகின்றன.

2023–2024 ஆம் கல்வியாண்டில் ரூ.408.63 கோடி மதிப்பிலான 534.84 இலட்சம் மீட்டர் சீருடைத் துணி இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டுத் தைக்கும் பணிக்காக அவற்றை சமூக நலத்துறைக்கு வழங்கப்பட்டு, பள்ளி கல்வித்துறையின் மூலம் பள்ளிக் குழந்தைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

சீருடைத் துணி உற்பத்தி விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | தறி இரகம் | தறிகளின் எண்ணிக்கை | சீருடை துணியின் அளவு (இலட்சம் மீட்டரில்) | மதிப்பு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | கைத்தறி | 541 | 7.02 | 8.16 |
| 2 | பெடல்தறி | 7051 | 109.66 | 79.27 |
| 3 | விசைத்தறி | 4841 | 418.16 | 321.20 |
| **மொத்தம்** | | **12433** | **534.84** | **408.63** |

2023–2024 ஆம் கல்வியாண்டில், இத்திட்டத்தின்கீழ் 41,35,479 மாணாக்கர்கள் (மாணவர்கள்–20,57,931 + மாணவிகள்–20,77,548) பயனடைந்துள்ளனர்.

2024–2025 ஆம் கல்வியாண்டுக்குச் சீருடை வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தும் வகையில், 475.95 இலட்சம் மீட்டர் சீருடைத் துணி உற்பத்தி செய்ய அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டு, முன்பணமாக ரூ.100 கோடி விடுவிக்கப்பட்டதன் அடிப்படையில் துணி உற்பத்திக்குத் தேவையான நூல் இரகங்களைத் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 ஆகியவற்றைப் பின்பற்றி கொள்முதல் செய்து தற்போது உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் முந்தைய ஆண்டு விநியோகத்தின் அடிப்படையில் 2024–2025 கல்வியாண்டிற்கான உத்தேச சீருடைத் தேவை பின்வருமாறு:

**சீருடைத் துணி உற்பத்தி திட்டம், கல்வியாண்டு 2024 – 2025**

| துறையின் பெயர் | உத்தேச துணி தேவை (இலட்சம் மீட்டரில்) | மாணாக்கர்களின் உத்தேச எண்ணிக்கை |
|---|---|---|
| சமூக நலத்துறை ( I முதல் VIII – ஆம் வகுப்பு) | 475.95 | 36,56,925 |

## கட்டுப்பாட்டு அறை

வேட்டி சேலை வழங்கும் திட்டம் மற்றும் சீருடை வழங்கும் திட்டத்தினைக் கண்காணிப்பதற்காக, 24x7 கட்டுப்பாட்டு அறை நிறுவப்பட்டு, நூல் கொள்முதல் முதல் பொருட்கள் விநியோகம் வரை அனைத்து நடவடிக்கைகளும் கண்காணிக்கப்படுகிறது.

## கைபேசி செயலி

வேட்டி சேலை வழங்கும் திட்டம் (https://dsdhandlooms.org) மற்றும் சீருடை வழங்கும் திட்டம் (https://uniform.dsdhandlooms.org) ஆகியவற்றின் அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணிக்கப் பிரத்தியேக கைபேசி செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

**ஈ. கைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம்**

கைத்தறி நெசவாளர்களின் நிதிச் சுமையைக் குறைக்கவும், அவர்களின் பணிச்சூழலை மேம்படச் செய்யவும், கைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்கும் திட்டம் அரசால் 2006–2007ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் இரண்டு மாதங்களுக்கு 200 அலகுகள் வரை வழங்கப்பட்டு வந்த விலையில்லா மின்சாரம் 03.03.2023 முதல் 300 அலகுகளாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

2021–2022 ஆம் ஆண்டு முதல் 2023–2024 ஆம் ஆண்டு வரை ரூ.25.51 கோடி செலவில் கைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

2023–2024 ஆம் ஆண்டில் 75,364 கைத்தறி நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் ரூ.12.48 கோடி மானியத்தொகை அரசால் விடுவித்து வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு 2024–2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.14.72 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உ. விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மற்றும் மானியத்துடன் கூடிய மின்சாரம்**

விசைத்தறித் தொழிலின் வளர்ச்சியினை ஊக்கப்படுத்தவும், விசைத்தறி நெசவாளர்கள் பயன் பெறும் வகையிலும், விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மற்றும் மானியத்துடன் கூடிய மின்சாரம் வழங்கும் திட்டம் 2006–2007ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இரண்டு மாதங்களுக்கு 750 அலகுகள் வரை வழங்கப்பட்டு வந்த விலையில்லா மின்சாரம் 03.03.2023 முதல் 1000 அலகுகளாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், 1000 அலகுகளுக்கு

மேல் பயன்படுத்தும் மின்கட்டணத்திற்கு மானியம் வழங்கப்படுகிறது.

| அலகு | ஓர் அலகிற்கான மின் கட்டணம் | ஓர் அலகிற்கு அரசு வழங்கும் மானியம் | ஓர் அலகிற்கு நெசவாளர்கள் செலுத்தும் மின் கட்டணம் |
|---|---|---|---|
| | (ரூபாயில்) | | |
| 1-500 | 6.50 | 6.50 | இலவசம் |
| 501-750 | 7.50 | 7.50 | இலவசம் |
| 751-1000 | 7.50 | 7.50 | இலவசம் |
| 1001-1500 | 7.50 | 3.35 | 4.15 |
| 1500 அலகுகளுக்கு மேல் | 7.50 | 2.20 | 5.30 |

2021-2022 ஆம் ஆண்டு முதல் 2023-2024 ஆம் ஆண்டு வரை ரூ.1241.78 கோடி செலவில் விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டில் 1,62,799 விசைத்தறி நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் ரூ.496.39 கோடி மானியத்தொகை அரசால் விடுவித்து வழங்கப்பட்டுள்ளது. 2024-2025 ஆம் ஆண்டில்

இத்திட்டம் தொடர ரூ.563.18 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஊ. தள்ளுபடி மானியத் திட்டம்**

கைத்தறித் துணி விற்பனையை ஊக்குவிக்கவும், தனியார் சந்தைகளின் போட்டியினைச் சமாளிப்பதற்காகவும் தள்ளுபடி மானியத் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. நெசவாளர்களுக்குத் தொடர்ச்சியான வேலைவாய்ப்பை உறுதி செய்வதை முதன்மை இலக்காகக் கொண்டு, கைத்தறிப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்த கைத்தறி இரகங்களை வெளிச்சந்தையில் போட்டியிடத் தக்க வகையில் தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு (கோ–ஆப்டெக்ஸ்) உதவுவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் ஆண்டு முழுவதும் கைத்தறித் துணி விற்பனையில் 20 விழுக்காடு தள்ளுபடி வழங்க அனுமதிக்கப்படுகின்றன. இந்த தள்ளுபடியானது பருத்தி இரகங்களுக்கு ஒரு உருப்படிக்கு 20 விழுக்காடு அல்லது ரூ.100/– மற்றும் பட்டு இரகங்களுக்கு ஒரு உருப்படிக்கு 20 விழுக்காடு அல்லது ரூ.200/– என்ற உச்சவரம்புக்கு உட்பட்டு, இதில் எது குறைவோ அத்தொகையினை தள்ளுபடி மானியமாக வழங்குகின்றன.

பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15 முதல் ஜனவரி 31 வரை 139 நாட்களுக்கு கூடுதலாக 10 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி, அதாவது பருத்தி இரகங்களுக்கு ஒரு உருப்படிக்கு 30 விழுக்காடு அல்லது ரூ.150/– மற்றும் பட்டு இரகங்களுக்கு ஒரு உருப்படிக்கு 30 விழுக்காடு

அல்லது ரூ.300/- இதில் எது குறைவோ அத்தொகை தள்ளுபடி மானியமாக வழங்கப்படுகிறது.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிலுவையில் உள்ள தள்ளுபடி மானியக் கோரிக்கைகளை தீர்வு செய்வதற்காக, 2021-2022 ஆம் ஆண்டுக்கு ரூ.160.11 கோடி, 2022-2023 ஆம் ஆண்டுக்கு ரூ.100.00 கோடி, 2023-2024 ஆம் ஆண்டுக்கு ரூ.50.00 கோடி கூடுதல் நிதியுதவி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதன் மூலம் 850-க்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் பயனடைந்துள்ளன.

2023-2024 ஆம் ஆண்டில், ரூ.250.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 852 தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸிற்கு தள்ளுபடி மானியத் தொகை விடுவித்து வழங்கப்பட்டுள்ளது.

2024-2025 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் தள்ளுபடி மானியத் திட்டத்தை

செயல்படுத்துவதற்காக ரூ.250.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஏ. வட்டி மானியத் திட்டம்**

நபார்டு வங்கியின் மறுநிதியுதவித் திட்டத்தின்கீழ் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் (DCCB) மூலம் தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பெறும் நடைமுறை மூலதனத்திற்கான வட்டி மானியம் வழங்கும் திட்டம் 1956 ஆம் ஆண்டு அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டமானது, 2002ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டு, 2008ஆம் ஆண்டில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் வசூலிக்கும் வட்டி விகிதத்தில் 6 விழுக்காடு வட்டி மானியம் தொடக்க நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது.

2023-2024 ஆம் ஆண்டில், தொடக்கக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.14.73 கோடி வட்டி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

2024–2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.17.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் இருந்து காசுக்கடன் உதவியைப் பெற இயலாத தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இதே போன்று கைத்தறி ஆதரவுத் திட்டத்தின் கீழ் நடைமுறை மூலதன உதவி வழங்கப்படுகிறது. கைத்தறி ஆதரவுத் திட்டத்தின் கீழ் 434 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.30 கோடி நடைமுறை மூலதன உதவி வழங்கப்பட்டுள்ளது.

## ஏ. நெசவாளர் பயிற்சி மற்றும் தொழில் முனைவோர் திட்டம்

இளம் தலைமுறையினர் நெசவுத் தொழிலில் ஈடுபடுவதை ஊக்குவிப்பதற்காக "நெசவாளர் பயிற்சி மற்றும் தொழில் முனைவோர் திட்டம்" தமிழ்நாடு அரசால் 2023–2024 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், 300 நபர்களுக்குக் கீழ்க்கண்டவாறு 3 கட்டங்களாகப் பயிற்சி அளிக்கப்பட்டது.

| **முதல் கட்டம் 2023ஆம் ஆண்டு அக்டோபர் முதல் நவம்பர் வரை** | | **இரண்டாம் கட்டம் 2023ஆம் ஆண்டு நவம்பர் முதல் டிசம்பர் வரை** | | **மூன்றாம் கட்டம் 2023ஆம் ஆண்டு டிசம்பர் முதல் 2024ஆம் ஆண்டு பிப்ரவரி வரை** | |
|---|---|---|---|---|---|
| காஞ்சிபுரம் | 20 | கும்பகோணம் | 20 | சேலம் | 20 |
| கோயம்புத்தூர் | 20 | நாகர்கோவில் | 20 | ஈரோடு | 20 |
| கடலூர் | 20 | பரமக்குடி | 20 | மதுரை | 20 |
| திண்டுக்கல் | 20 | திருப்பூர் | 20 | திருவண்ணாமலை | 20 |
| ஈரோடு | 20 | விருதுநகர் | 20 | வேலூர் | 20 |
| **மொத்தம்** | **100** | | **100** | | **100** |

இத்திட்டத்தில் பயிற்சி பெற்றவர்கள் நெசவினைத் தாங்களாகவே மேற்கொள்ள தேவையான தறிகள் மற்றும் உபகரணங்கள் வாங்க நெசவாளர் முத்ரா கடன் திட்டத்தின் கீழ் வசதி செய்யப்பட்டு வருகிறது.

**ஐ. வாங்குவோர் விற்போர் சந்திப்பு**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களது அறிவிப்பின்படி, சென்னை, பெங்களூரு, டெல்லி மற்றும் ஹைதராபாத்தில்

"வாங்குவோர்–விற்போர் சந்திப்பு" நடத்த உத்தேசிக்கப்பட்டு, தேசிய ஆடை அலங்கார வடிவமைப்பு நிறுவனம் (NIFT) சென்னை மற்றும் பெங்களூரு மற்றும் தேசிய வடிவமைப்பு நிறுவனம் (NID), அகமதாபாத் ஆகியவற்றின் வடிவமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்ட 1000 புதிய சேலை வடிவமைப்புகள் உட்பட நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்ட தயாரிப்புகள் காட்சிப்படுத்த திட்டம் வகுக்கப்பட்டது.

முதல் வாங்குவோர் விற்போர் சந்திப்பானது சென்னையில் 09.02.2024 அன்று நடைபெற்றது. தமிழ்நாடு முழுவதிலும் இருந்து 282 வாங்குவோர் பங்கேற்றுக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுடன் ரூ.41.00 கோடி மதிப்பில் கைத்தறி இரகங்களைக் கொள்முதல் செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இரண்டாவது வாங்குவோர் விற்போர் சந்திப்பு, 26.02.2024 முதல் 29.02.2024 வரை புது தில்லியில்

உள்ள பிரகதி மைதானத்தில் பாரத் டெக்ஸ் நிகழ்ச்சியின் போது நடத்தப்பட்டது. சென்னை, கைத்தறி ஆணையர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள வணிக மேம்பாட்டு மையம் மூலம் பாரத் டெக்ஸ் நிறுவனத்தில் கலந்து கொண்ட உள்நாட்டு வாங்குவோர் மற்றும் சர்வதேச வாங்குபவர்களில், கைத்தறி இரகங்களைக் கொள்முதல் செய்ய ஆர்வமுள்ள விற்பனையாளர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கான நடவடிக்கை துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## ஓ. விருதுகள்

### 1. மாநில அளவிலான சிறந்த நெசவாளர் மற்றும் சிறந்த வடிவமைப்பாளருக்கான விருது

புதுமையான மற்றும் கவர்ச்சிகரமான புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்தி, சந்தையில் நன்கு விற்பனையாகக் கூடிய பட்டு மற்றும் பருத்தி

இரகங்களை உற்பத்தி செய்து, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்கு கணிசமான பங்களிப்பை வழங்கிய கைத்தறி நெசவாளர்களை ஊக்குவிக்க, "சிறந்த நெசவாளர் விருது" வழங்கும் திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதே போன்று பருத்தி மற்றும் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் புதுமையான மற்றும் சந்தைப்படுத்தக்கூடிய வடிவமைப்புகளை திறம்பட உருவாக்கும் வடிவமைப்பாளர்களைக் கௌரவிக்கும் வகையில் "சிறந்த வடிவமைப்பாளர் விருது" வழங்கும் திட்டமும் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சிறந்த கைத்தறி நெசவாளர் விருது மற்றும் சிறந்த வடிவமைப்பாளர் விருதுகளுக்கான பரிசுத் தொகை விவரம் பின்வருமாறு:

| விவரம் | முதல் பரிசு (ரூ.) | இரண்டாம் பரிசு (ரூ.) | மூன்றாம் பரிசு (ரூ.) | மொத்த பரிசுத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| சிறந்த நெசவாளர் (பட்டு இரகம்) | 500000 | 300000 | 200000 | 1000000 |
| சிறந்த நெசவாளர் (பருத்தி இரகம்) | 500000 | 300000 | 200000 | 1000000 |
| சிறந்த வடிவமைப் பாளர் | 25000 | 10000 | 5000 | 40000 |
| **மொத்தம்** | **1025000** | **610000** | **405000** | **2040000** |

2022-2023 ஆம் ஆண்டில் பருத்தி மற்றும் பட்டு இரகங்களில் சிறந்த கைத்தறி நெசவாளர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட 6 நெசவாளர்கள் 18.04.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ரூ.20.00 இலட்சம் மதிப்பிலான காசோலைகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டனர்.

2022-2023 ஆம் ஆண்டில் சிறந்த வடிவமைப்பாளர் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்ட 3 சிறந்த வடிவமைப்பாளர்களுக்கு 05.04.2023 அன்று

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் சிறந்த வடிவமைப்பாளர் விருதுகள் வழங்கப்பட்டன.

இத்திட்டத்தை 2023–2024 ஆம் ஆண்டில் செயல்படுத்த ரூ.20.40 இலட்சம் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 2024–2025 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**2. மாநில அளவிலான சிறந்த இளம் வடிவமைப்பாளர் விருது**

கைத்தறிக்கும் இளம் தலைமுறையினருக்கும் இடையே பிணைப்பை ஏற்படுத்தவும், நவீன சந்தையின் மாறிவரும் தேவைகளை அறிந்து புதிய வாடிக்கையாளர்களை ஈர்க்கவும், விற்பனையினை மேம்படுத்த கைத்தறியில் புதுமையான வடிவமைப்புகளை அறிமுகப்படுத்தும் நோக்கிலும் "இளம் வடிவமைப்பாளர்களிடமிருந்து மாநில அளவிலான சிறந்த வடிவமைப்புகளை" போட்டியின்

மூலம் தேர்வு செய்யும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள வடிவமைப்பு நிறுவனங்கள் மற்றும் ஜவுளித் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்கள் மற்றும் வடிவமைப்பாளர்கள் இடையே இப்போட்டி நடத்தப்படுகிறது.

போட்டியின் மூலம் தேர்வு செய்யப்படும் முதல் 3 சிறந்த வடிவமைப்புகளுக்கு முதல் பரிசாக ரூ.1,00,000/–, இரண்டாம் பரிசாக ரூ.75,000/– மற்றும் மூன்றாம் பரிசாக ரூ.50,000/– வழங்கப்படுகிறது.

2022–2023 ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான சிறந்த இளம் வடிவமைப்பாளர் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டவர்கள் 18.04.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ரூ.2.25 இலட்சம் மதிப்பிலான காசோலைகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டனர்.

## 3. திறன்மிகு நெசவாளர் விருது

கண்கவர் வடிவமைப்புகளுடன் பட்டு மற்றும் பருத்திச் சேலைகள், வேட்டிகள் மற்றும் கைத்தறி ஏற்றுமதி இரகங்களை உற்பத்தி செய்யும் நெசவாளர்களை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு அரசு ஒவ்வொரு ஆண்டும் 20 பிரிவுகளில் "திறன்மிகு நெசவாளர் விருது" வழங்கி வருகின்றன.

உற்பத்தி செய்யப்பட்ட கைத்தறி இரகங்களின் காட்சித் தோற்றம், வண்ணக் கலவை, வடிவமைப்பின் தனித்தன்மை, கூடுதல் பணி மற்றும் தயாரிப்புகளின் சிறப்பு அம்சங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் மாநில அளவிலான குழுவால் சிறந்த இரகங்கள் தேர்வு செய்யப்படுகின்றன.

20 பிரிவுகளில் 60 திறன்மிகு கைத்தறி நெசவாளர்களுக்கு முதல் பரிசு, இரண்டாம் பரிசு மற்றும் மூன்றாம் பரிசுக்கான பரிசுத்தொகைகள் பின்வருமாறு வழங்கப்படுகிறது:

| | |
|---|---|
| முதல் பரிசு | ரூ.10,000/- |
| இரண்டாம் பரிசு | ரூ.6,000/- |
| மூன்றாம் பரிசு | ரூ.4,000/- |

இத்திட்டத்திற்கான செலவினம் ரூ.4.00 இலட்சம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டம் 2024-2025 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**ஓ. தோடா எம்பிராய்டரி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம்**

நீலகிரி மாவட்டத்தில் வாழும் தோடா பழங்குடியினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், தோடா பழங்குடியினரால் பிரத்தியேகமாக உற்பத்தி செய்யப்படும் தோடா எம்பிராய்டரி பொருட்களுக்கான சந்தையை ஏற்படுத்தித்தரவும் சிறப்பு முயற்சியாக, "தோடா எம்பிராய்டரி உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம்" மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை

அமைச்சர் அவர்களால் 13.05.2023 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

எம்பிராய்டரிக்குத் தேவைப்படும் மூலப் பொருளான காடாத் துணிகள் கோயம்புத்தூர், திருப்பூர், கரூர் மற்றும் அருகிலுள்ள சரகங்களில் உள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்டு கொள்முதல் செய்யப்படுகிறது.

இச்சங்கம் தோடா எம்பிராய்டரி தயாரிப்புகளைப் பல்வேறு சந்தைகளுக்கு எடுத்துச் செல்வதற்கு வழி வகுத்து, தோடர் இனப் பழங்குடியினருக்குத் தொடர் வேலைவாய்ப்பை வழங்கி, ஊதியம் பெறும் அளவை அதிகரிக்க வகை செய்யும்.

**ஔ) 1000 புதிய வடிவமைப்புகளை தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் தேசிய வடிவமைப்பு நிறுவனம் மூலம் உருவாக்குதல்**

கைத்தறி இரகங்கள் உற்பத்தியில் புதுமையினைப் புகுத்தவும், எளிதில்

சந்தைப்படுத்தக்கூடிய இரகங்களை உற்பத்தி செய்யவும் சென்னை மற்றும் பெங்களூரில் உள்ள தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிறுவனம் (NIFT) மற்றும் அகமதாபாத்தில் உள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனம் (NID) ஆகியவற்றுடன் துறையால் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) மேற்கொள்ளப்பட்டது. வடிவமைப்பு மேம்பாட்டு முயற்சியின் ஓர் அங்கமாக கைத்தறி இரகங்களில் சமகால மற்றும் நவநாகரிக வடிவமைப்புகளைப் புகுத்துவதற்காக 1000 புதிய வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

### 4.2. ஒன்றிய அரசின் நிதியுதவித் திட்டங்கள்

### அ) விற்பனை ஊக்குவிப்புத் திட்டம்

விற்பனை ஊக்குவிப்புத் திட்டமானது ஒன்றிய அரசின் தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் (NHDP) ஓர் அங்கமாகும். இத்திட்டத்தின்கீழ் கைத்தறி பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கு ஏற்றச் சூழ்நிலைகளை உருவாக்குவதற்காகக் கைத்தறி

முகமைகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வெளிச்சந்தையில் தங்களை நிலைநிறுத்தி கொள்ள உதவுகிறது. மேலும், உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்தவும், உற்பத்தி பொருட்களின் மீது உயர்ந்து வரும் போட்டிச் சந்தை விலையினை கைத்தறி முகமைகளால் சமாளிக்க இயலும் என்பதே கருத்தாக்கமாகும்.

தொடக்கக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் கடந்த 3 ஆண்டுகளின் சராசரி விற்பனை அளவில் 10 விழுக்காடு விற்பனை ஊக்குவிப்புத் தொகை பெற தகுதி பெறுகின்றன. இத்தொகை 50:50 அடிப்படையில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் சரிசம விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

திட்ட காலமான 5 ஆண்டுகளில் (2021–2022 முதல் 2025–2026 வரை) அதிகபட்சமாக 3 ஆண்டுகளுக்கு விற்பனை ஊக்குவிப்புத் தொகை

வழங்கப்படுகிறது. தகுதியான கைத்தறி முகமைகள் மற்றும் நிதி உதவியின் அளவு விவரம் பின்வருமாறு:

| தகுதியுடைய கைத்தறி நிறுவனங்கள் | அதிக பட்ச ஊக்குவிப்புத் தொகை | நிதி உதவி |
|---|---|---|
| மாநில அளவிலான கைத்தறி நிறுவனங்கள், மாநில அளவிலான தலைமை கூட்டுறவுச் சங்கம் மற்றும் தேசிய அளவிலான கைத்தறி நிறுவனங்கள் | ரூ.100 இலட்சம் (ஒன்றிய அரசு பங்கு) | கடந்த 3 ஆண்டுகளின் சராசரி விற்பனை அளவில் 10 விழுக்காடு |
| தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் (PHWCS) | ரூ.15.00 இலட்சம் (ஒன்றிய அரசு பங்கு) | |

2024-2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் விற்பனை ஊக்குவிப்புத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக ரூ.32.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆ) கைத்தறி சந்தைப்படுத்துதலுக்கான நிதியுதவி**

உள்நாட்டு விற்பனை மற்றும் ஏற்றுமதிக்கான சந்தைப்படுத்துதல் வழிகளை மேம்படுத்தவும், இவ்விரண்டிற்கும் இடையே முழுமையான

ஒருங்கிணைந்த தொடர்பை ஏற்படுத்துவதுமே கைத்தறி சந்தைப்படுத்துதலுக்கான நிதியுதவி திட்டத்தின் நோக்கமாகும்.

தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கண்காட்சிகள் நடத்துவதற்கு வழங்கப்படும் நிதியுதவி விவரம் பின்வருமாறு:–

| | | |
|---|---|---|
| 1. | தேசியக் கைத்தறிக் கண்காட்சி | ரூ.45 இலட்சம் |
| 2. | சிறப்புக் கைத்தறிக் கண்காட்சி | ரூ.30 இலட்சம் |
| 3. | மாவட்டக் கைத்தறிக் கண்காட்சி | ரூ.6 இலட்சம் |

2023–2024 ஆம் ஆண்டில், கோயம்புத்தூர் மற்றும் சேலத்தில் 2 சிறப்புக் கைத்தறிக் கண்காட்சியும், பரமக்குடி மற்றும் கடலூரில் 2 மாவட்ட அளவிலான கைத்தறிக் கண்காட்சியும் நடத்த ஒன்றிய அரசு ஒப்புதல் வழங்கியது. இக்கண்காட்சிகளில் ரூ.6.56 கோடி மதிப்பில் கைத்தறித் தயாரிப்புகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

| வ. எண் | கண்காட்சி | இடம் | நாள் | விற்பனை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | சிறப்புக் கைத்தறிக் கண்காட்சி | சேலம் | 27.10.2023 முதல் 10.11.2023 வரை | 237.44 |
| 2. | | கோயம்புத்தூர் | 28.12.2023 முதல் 11.01.2024 வரை | 344.33 |
| 3. | மாவட்டக் கைத்தறிக் கண்காட்சி | பரமக்குடி (இராமநாதபுரம்) | 03.11.2023 முதல் 09.11.2023 வரை | 27.97 |
| 4. | | கடலூர் | 04.01.2024 முதல் 10.01.2024 வரை | 46.73 |
| **மொத்தம்** | | | | **656.47** |

## 5. உள்கட்டமைப்புக்கான ஆதரவுத் திட்டங்கள்

### 5.1 மாநில அரசின் நிதியுதவித் திட்டங்கள்

#### அ) கைத்தறி ஆதரவுத் திட்டம்

கைத்தறிப் பொருட்கள் அவற்றின் தனித்துவமான மற்றும் பிரத்தியேக வடிவமைப்புகளால் சர்வதேச மற்றும் உள்நாட்டுச் சந்தைகளில் பெரும்

புகழ் பெற்றுள்ளன. கைத்தறிப் பொருட்கள் சுற்றுச்சூழலுக்கு உகந்தது மட்டுமல்ல பூஜ்ஜிய நிலை கரிம உமிழ்வு கொண்டவை.

கைத்தறித் தொழிலில் சந்தைத் தேவையை பூர்த்தி செய்தல், நெசவாளர்களுக்கு நியாயமான ஊதியம் வழங்குதலை உறுதி செய்தல் ஆகியவற்றுக்கு அடிப்படையான உள்கட்டமைப்பு, திறன் மேம்பாடு மற்றும் வடிவமைப்பு ஆகியவற்றில் இடைவெளி உள்ளது. மாநிலத்தில் நெசவுத் தொழிலை நிலைநிறுத்துவதற்கான முயற்சிகளின் ஒரு பகுதியாக, கைத்தறித் தொழிலுக்கான ஆதரவு நடவடிக்கைகளுக்கு நிதி உதவி வழங்கும் விதமாக கைத்தறி ஆதரவுத் திட்டம் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தில், 7 இனங்களின் கீழ் நிதி உதவி வழங்கப்படுகிறது:

| வ. எண் | இனங்கள் | பங்கு(விகிதம்) | |
|---|---|---|---|
| | | அரசு | பயனாளி |
| 1 | தொழில்நுட்ப மேம்பாடு | 90 | 10 |
| 2 | வடிவமைப்பு மேம்பாடு | 100 | – |
| 3 | இரக மாற்றம் | 100 | – |
| 4 | வணிகக்குறியீடு பிரபலப்படுத்துதல் மற்றும் நிலைநிறுத்துதல் | 80 | 20 |
| 5 | சந்தை விரிவாக்கம் | 75 | 25 |
| 6 | நடைமுறை மூலதன உதவி | 100 | – |
| 7 | ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு | 100 | – |

இத்திட்டத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ.29.04 கோடி மதிப்பில் தொழில்நுட்ப மேம்பாடு இனத்தின் கீழ் 30,227 தறிகள் மற்றும் தறி உபகரணங்களும், 434 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.30 கோடி நடைமுறை மூலதன உதவியும் வழங்கப்பட்டுள்ளது.

2018–2019 முதல் 2023–2024 வரையிலான ஆண்டுகளில், கைத்தறி ஆதரவுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ரூ.160 கோடி அரசால்

வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை 2024-2025 ஆம் ஆண்டில் செயல்படுத்த ரூ.20.00 கோடி வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆ) விசைத்தறி மின்னணு விசைப் பலகை நிறுவுதல் மற்றும் வழங்குதல்**

2022-2023ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தொடரின்போது, 50 விழுக்காடு அரசு மானியத்துடன் விசைத்தறியில் 5000 மின்னணு விசைப் பலகைகள் நிறுவப்படும் என்று மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

மேற்கண்ட அறிவிப்பின்படி 5000 மின்னணு விசைப் பலகைகளை நிறுவ 50 விழுக்காடு அரசு மானியமாக ரூ.6.00 கோடி விசைத்தறி பதிவு நிதியில் இருந்து அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. அதன்படி, விசைத்தறிச் செறிவு மிக்க பகுதிகளில் 5000 விசைத்தறிகளில் மின்னணு விசைப் பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன.

மின்னணு விசைப் பலகைகள் உற்பத்தியின் போது நூல்கள் அறுந்து விழுவதை தடுக்கவும், சாதாரண விசைத்தறிகளில் சீராக நிலையான தரத்துடனும் துணிகள் உற்பத்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்தவும் உதவுகின்றன.

**இ) சிறிய அளவிலான கைத்தறிப் பூங்காக்கள்**

வாடிக்கையாளர் மற்றும் வணிகர்களிடையே நிலவும் கைத்தறிப் பொருட்களுக்கான தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு 2023–2024 ஆம் ஆண்டில் "சிறிய அளவிலான கைத்தறிப் பூங்காக்கள்" அமைக்கும் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியது. கைத்தறி இரகங்களைப் பரந்த சந்தைக்குக் கொண்டு சென்று, விற்பனையை அதிகரிக்கவும், அதன் மூலம் தொழிலாளர்களுக்குப் பயனளிக்கும் வகையில் கைத்தறித் தொழிலை மேம்படுத்துவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கைத்தறித் தயாரிப்புகளை தற்போது நிலவி வரும் ஒருசாரார் சார்புச்

சந்தைகளுக்கு அப்பாற்பட்டு சந்தைகளில் பெரிய அளவில் விரும்பத்தக்க வகையில் நிலைநிறுத்துவது என்ற இலக்கை அடைய இத்திட்டம் உதவுகிறது.

தமிழ்நாட்டில் 1) சிறுமுகை (கோயம்புத்தூர்), 2) சென்னிமலை (ஈரோடு), 3) அருப்புக்கோட்டை (விருதுநகர்), 4) ஜெயம்கொண்டம் (பெரம்பலூர்), 5) சின்னாளப்பட்டி (ம) நரிக்கல்பட்டி (திண்டுக்கல்), 6) ஓரிக்கை (காஞ்சிபுரம்), 7) எமனேஸ்வரம் (பரமக்குடி), 8) கரூர், 9) சேலம் மற்றும் 10) குடியாத்தம் (வேலூர்) ஆகிய இடங்களில் ரூ.20.00 கோடி மதிப்பில் 10 சிறிய அளவிலான கைத்தறிப் பூங்காக்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாகக் காஞ்சிபுரத்தில் சிறிய அளவிலான கைத்தறிப் பூங்கா 29.02.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது.

**ஈ) டாக்டர் கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு நினைவு கைத்தறிப் பட்டுப் பூங்கா, ஆரணி**

இளைஞர்களைக் கைத்தறித் தொழிலில் ஈர்ப்பதன் மூலம் 5000 நபர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிடவும், ஒரே இடத்தில் பட்டு உற்பத்தித் தொடர் முழுவதையும் உள்ளடக்கும் வகையிலும், டாக்டர் கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு நினைவு கைத்தறிப் பட்டுப் பூங்கா ஆரணியில் நிறுவப்படும் என 2023–2024 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு அறிவிப்பு வெளியிட்டது.

இப்பூங்காவில் பட்டு நெசவு, பசையிடுதல், முறுக்குதல், தார் சுற்றுதல் மற்றும் பட்டு நூல் சாயமிடுதல் மற்றும் வெளுத்தல் உள்ளிட்ட வசதிகளும், சேமிப்புக் கிடங்கு, பயிற்சி மையம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, விற்பனை மையம் மற்றும் நிருவாகக் கட்டடம் ஆகியவை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

ஆரணி அருகே உள்ள பெரியண்ணநல்லூர் கிராமத்தில் 20.53 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.74 கோடி செலவில் டாக்டர் கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு நினைவு கைத்தறிப் பட்டுப் பூங்கா அமைக்கப்பட உள்ளது. இப்பூங்காவின் மொத்த விற்பனை ஆண்டுக்கு ரூ.90 கோடி முதல் ரூ.100 கோடி வரை மதிப்பிடப்பட்டுள்ளது.

**உ) நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளைக் கணினிமயமாக்கல்**

தேசிய தகவலியல் மையம் மூலமாக ரூ.50.00 இலட்சம் செலவில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் அனைத்து செயல்பாடுகளையும் கணினிமயமாக்க மென்பொருள் உருவாக்கப்பட்டு வருகிறது.

முதற்கட்டமாக, பருத்திச் சங்கங்களுக்கான மென்பொருள் தேசிய தகவலியல் மையத்தால் உருவாக்கப்பட்டு, மென்பொருள் குறித்த பயிற்சி தேசிய தகவலியல் மையம் மூலம் சங்கப்

பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு பருத்திச் சங்கங்களில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தேசிய தகவலியல் மையத்தால் பட்டுச் சங்கங்களுக்கான மென்பொருள் தொகுதி உருவாக்கப்பட்டு வருகிறது.

**உருவாக்கப்பட்டு வரும் தொகுப்பேடுகள்**

- விற்பனைத் தொகுப்பேடு
- கணக்குத் தொகுப்பேடு
- அறிக்கை உருவாக்கம்
- பயனர் ஏற்றுக்கொள்ளும் சோதனை பாதுகாப்பு தணிக்கை இணக்கம்
- தனிப்பயனாக்கம், பயிற்சி மற்றும் தொழில்நுட்ப ஆதரவு

பட்டுச் சங்கங்களுக்கான மென்பொருள் உருவாக்கம் ஜூலை 2024க்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேசிய தகவலியல் மையத்தின் தொழில்நுட்ப வல்லுனர்களால் சங்க ஊழியர்களுக்கு

மேற்கண்ட மென்பொருள் குறித்த பயிற்சியும் அளிக்கப்பட உள்ளது.

**ஊ) நிறுவன வள திட்டமிடல் மென்பொருள் (ERP software) உருவாக்கம், கைத்தறி மற்றும் விசைத்தறிகளுக்குப் புவிக்குறியீடு இடுதல்**

2022-2023 ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தொடரின் போது, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் "அனைத்து கைத்தறி மற்றும் விசைத்தறிகளுக்கும் புவிக்குறியீடு கணக்கெடுப்பு (அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஆயத்தொலைவுகள்) நடத்தப்பட்டுப் புவிக்குறியீடு இடப்படும்" என அறிவிப்பு செய்யப்பட்டது.

இத்துடன், கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் துணிகளுக்குச் சரியான மின்வணிகச் சந்தையினை ஏற்படுத்தி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடன் நிறுவன வள திட்டமிடல் (ERP)

மென்பொருளை உருவாக்கவும், கைத்தறி மற்றும் விசைத்தறி புவிக்குறியீடு கணக்கெடுப்பை மேற்கொள்ளவும் விசைத்தறிப் பதிவு நிதியில் இருந்து ரூ.2.00 கோடியை அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள கைத்தறி, பெடல்தறி மற்றும் விசைத்தறிகளுக்கான புவிக்குறியீடு தொடர்பான கைபேசி செயலி உருவாக்கும் பணி தமிழ்நாடு மின் ஆளுமை முகமையிடம் (TNeGA) ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுவரை 88,179 தறிகள் புவிக்குறியீடு செய்யப்பட்டுள்ளன.

புவிக்குறியீடு கணக்கெடுப்பானது அரசு வழங்கும் திட்டங்களின் பலன்கள் உரிய பயனாளிகளுக்குச் சென்றடைவதை உறுதி செய்யும். மேலும், தறி அமைவிடம், தறி உரிமையாளர் விவரம், தறியில் உற்பத்தி செய்யப்படும் துணி வகைகள், தறி உரிமையாளர் பெற்ற அரசு மானியங்கள் குறித்த தகவல்கள் கணக்கெடுப்பின்போது சேகரிக்கப்படும்.

**எ) புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கை, 2019-இன் கீழ் விசைத்தறித் தொழிலை மேம்படுத்துதல்**

கைத்தறி, விசைத்தறி, நூற்பு மற்றும் பதனிடுதல் உள்ளிட்ட நவீன, துடிப்பான ஒருங்கிணைந்த மற்றும் உலகத் தரம் வாய்ந்த ஜவுளித் தொழிலினை உருவாக்கவும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஏற்றுமதிக்கான செலவு குறைந்த மற்றும் உயர்தர ஜவுளி ஆடைகளை உற்பத்தி செய்யவும், புதுமை, பன்முகத்தன்மை மற்றும் மதிப்பு கூட்டல்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து ஜவுளித் தொழிலை மேம்படுத்தவும் தமிழ்நாடு அரசால் 10 விழுக்காடு கூடுதல் மூலதன மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் புதிய நாடா இல்லாத் தறி கொள்முதலுக்காகத் தறி ஒன்றுக்கு 10 விழுக்காடு கூடுதல் மூலதன மானியம் உச்சவரம்புத் தொகையாக ரூ.4.00 இலட்சமும், நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான இயந்திரங்கள்

கொள்முதலுக்காக இயந்திரம் ஒன்றுக்கு 10 விழுக்காடு கூடுதல் மூலதன மானியம் உச்சவரம்புத் தொகையாக ரூ.30.00 இலட்சமும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2023–2024 ஆம் ஆண்டில் 10 விழுக்காடு கூடுதல் மூலதன மானியத் தொகையாக ரூ.24.52 கோடி தகுதிபெற்ற 46 நிறுவனங்களுக்கு விடுவித்து வழங்கப்பட்டுள்ளது.

**5.2 ஒன்றிய அரசின் நிதியுதவித் திட்டங்கள்**

**அ) குழும வளர்ச்சித் திட்டம்**

அடையாளம் காணப்பட்ட கைத்தறிக் குழுமங்களில் உள்ள கைத்தறி நெசவாளர்களை ஒருங்கிணைந்த, சுய மேலாண்மை மற்றும் போட்டித்திறன் கொண்டவர்களாக மாற்றி, அவர்கள் சமூக மற்றும் பொருளாதாரத்தில் நிலையான வளர்ச்சியை எட்டுவதற்கு உதவிபுரிய தேசிய கைத்தறி மேம்பாட்டுத் திட்டத்தை (NHDP) ஒன்றிய அரசு செயல்படுத்தி வருகிறது.

குழும வளர்ச்சித் திட்டமானது, கூட்டுறவு சார்ந்த மற்றும் சாராத கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காகத் தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் ஒரு திட்டமாகும்.

2022–2023 ஆம் ஆண்டு முதல் 2025–2026 ஆம் ஆண்டு வரையில் தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான திருத்திய வழிகாட்டு நெறிமுறைகளை ஒன்றிய அரசு வெளியிட்டுள்ளது.

ஒரு கைத்தறி குழுமம் அமைக்க ஒன்றிய அரசின் நிதியுதவியாக அதிகபட்சமாக ரூ.2.00 கோடி கீழ்க்கண்ட 4 இனங்களுக்கு வழங்கப்படுகிறது.

| இனம் | | நிதியுதவி (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தறிகள் / உபகரணங்கள், மின் விளக்குகள், தனித் தறிக்கூடம் அமைத்தல், பொது தறிக்கூடம் அமைத்தல், பொது தறிக்கூடத்திற்குச் சோலார் மின் விளக்குகள் பொருத்துதல் போன்றவை | 150.00 |
| 2 | வடிவமைப்பாளர் நியமித்தல் | 15.00 |
| 3 | திட்ட மேலாண்மைச் செலவு | 15.00 |
| 4 | இதர இனங்கள் | 20.00 |
| | **மொத்தம்** | **200.00** |

இத்திட்டத்தின் கீழ் 2021–2022 ஆம் ஆண்டு வரை ரூ.8863.59 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 58 வட்டார அளவிலான குழுமங்கள் அமைக்கப்பட்டு, 39,315 கைத்தறி நெசவாளர்கள் பயனடைந்துள்ளனர்.

2022–2023 மற்றும் 2023–2024 ஆம் ஆண்டுகளுக்கு 4,571 நெசவாளர்கள் பயன் பெறும் வகையில் ஒன்றிய அரசு ரூ.21.60 கோடி திட்ட மதிப்பீட்டில் 18 வட்டார அளவிலான கைத்தறிக் குழுமங்களுக்கு அனுமதி அளித்துள்ளதோடு, முதல் தவணையாக ரூ.7.34 கோடியினை விடுவித்துள்ளது:

| **வ. எண்** | **குழும வளர்ச்சித் திட்டத்தின் பெயர்/மாவட்டம்** | **பயனாளிகள்** | **மொத்த திட்டத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| 1 | எமனேஸ்வரம்–1 குழுமம், இராமநாதபுரம் | 223 | 190.310 |
| 2 | பாரத ரத்னா எம்.ஜி.ஆர் குழுமம், சேலம் | 200 | 130.800 |
| 3 | ஸ்ரீ சௌடேஸ்வரி குழுமம், சேலம் | 346 | 116.790 |
| 4 | அன்னை பவானி குழுமம், ஈரோடு | 354 | 98.00 |
| 5 | கிள்ளியூர் குழுமம், கன்னியாகுமரி | 200 | 111.150 |

| வ. எண் | குழும வளர்ச்சித் திட்டத்தின் பெயர்/மாவட்டம் | பயனாளிகள் | மொத்த திட்டத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 6 | நசியனூர் குழுமம், ஈரோடு | 205 | 92.300 |
| 7 | காஞ்சிபுரம் குழுமம், காஞ்சிபுரம் | 150 | 117.893 |
| 8 | திண்டுக்கல் குழுமம், திண்டுக்கல் | 192 | 76.700 |
| 9 | இராசிபுரம் குழுமம், நாமக்கல் | 261 | 121.820 |
| 10 | கொண்டசமுத்திரம் குழுமம், வேலூர் | 274 | 147.970 |
| 11 | நடுவீரப்பட்டு குழுமம், கடலூர் | 367 | 66.830 |
| 12 | எமனேஸ்வரம்-2 குழுமம், இராமநாதபுரம் | 224 | 188.210 |
| 13 | ட்டி.குன்னாத்தூர் குழுமம், மதுரை | 194 | 78.530 |
| 14 | சேரிப்பாளையம் குழுமம், கோயம்புத்தூர் | 418 | 162.252 |
| 15 | கல்லிடைக்குறிச்சி குழுமம், திருநெல்வேலி | 188 | 90.640 |
| 16 | எலவனூர் குழுமம், கரூர் | 165 | 91.050 |
| 17 | கதிராமங்கலம் குழுமம், கரூர் | 210 | 112.650 |
| 18 | பொன்னூர் குழுமம், திருவண்ணாமலை | 400 | 166.660 |
| **மொத்தம்** | | **4571** | **2160.555** |

இத்திட்டம் தறிக்கு முந்தைய மற்றும் பிந்தைய பணிகளுக்குத் தேவையான உள்ளீடுகளை வழங்குவதோடு தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்தப்பட்ட தறி மற்றும் தறி உபகரணங்களை வழங்குவதன் மூலம் கைத்தறி நெசவாளர்களின் வேலைப்பளுவினை வெகுவாக குறைக்கிறது.

**ஆ) ஒருங்கிணைந்த வளாகம்**

2024–2025 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை உரையின் போது, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் "சென்னையில் 4 இலட்சம் சதுர அடி பரப்பளவில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் நாட்டின் பல்வேறு மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படும் பல்வேறு கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்களைக் காட்சிப்படுத்துவதற்கான கண்காட்சி அரங்குகளை உள்ளடக்கிய ஓர் ஒருங்கிணைந்த

வளாகம் ரூ.227 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்" என அறிவிக்கப்பட்டது.

அதன்படி, சென்னை எழும்பூரில் உள்ள கோ–ஆப்டெக்ஸ் வளாகத்தில் ரூ.227 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த வளாகம் அமைக்கப்படவுள்ளது.

சென்னை எழும்பூரில் உள்ள கோ–ஆப்டெக்ஸ் வளாகத்தில் 4.64 இலட்சம் சதுர அடியில் 8 தளங்கள் மற்றும் 2 கீழ்தளங்களுடன் ஒருங்கிணைந்த வளாகம் அமைக்கப்படும். ஒருங்கிணைந்த வளாகத்தில் 74 – ஒரு மாவட்டம் ஒரு பொருள் (ODOP) அங்காடிகள், ஆக்கப்பூர்வ மற்றும் கலாச்சார கைவினைகளுக்கான வடிவமைப்பு மையம், நிருவாக அலுவலகம் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம், கைத்தறி ஆணையர் அலுவலகம், கைத்தறி அனுபவ மையம் மற்றும் வணிக இடங்கள் போன்றவை அமைக்கப்படவுள்ளன.

இத்திட்டத்திற்கான கட்டுமானப் பணிகள் பொதுப்பணித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த வளாகம் ஒரு மாவட்டம் ஒரு பொருள் (ODOP) முன்முயற்சியின் கீழ் பொருளாதார வலுவூட்டல் மற்றும் கலாச்சார கொண்டாட்டத்தின் முன்னுதாரணமாக இருக்கும். இது கைவினைஞர்கள் மற்றும் நுகர்வோருக்கு இடையிலான புரிதலை வலுப்படுத்துவதையும், மாநிலத்தின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் உள்நாட்டு தயாரிப்புகளைக் காட்சிப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒருங்கிணைந்த வளாகம் உள்ளூர் கைவினைத்திறனை மேம்படுத்துவதற்கும் கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கும் இந்தியாவின் பலதரப்பட்ட கலாச்சாரங்களின் சான்றாக விளங்குவதற்கும் உறுதி பூண்டுள்ளது. இந்த துடிப்பான சந்தையிடமானது புவியியல் எல்லைகளைக் கடந்து, உள்ளூர் தயாரிப்புகளுக்கு விரிந்த பார்வையினை வழங்குகிறது. இது உள்ளூர் மற்றும்

சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு முக்கிய இடமாக அமையும்.

**இ) கலாச்சாரம் மற்றும் படைப்பாற்றல் திறன்மிகு கைவினைப்பொருட்களுக்கான வடிவமைப்பு மற்றும் புத்தாக்கல் மையம் (DICC)**

ஜவுளி மற்றும் ஆடைத் தொழில் உலகின் மிகப்பெரிய தொழில் துறைகளில் ஒன்றாகும். ஜவுளி மற்றும் ஆடைத் தொழில் மனிதகுலத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகும். ஜவுளித் தொழிலானது ஆடை வடிவமைப்பு, உற்பத்தி மற்றும் விநியோகம் ஆகியவற்றில் முதன்மை கவனம் செலுத்துகிறது.

தமிழ்நாட்டின் கைத்தறித் தொழிலானது சிறந்த கைவினைத்திறனுடன் வளமான மற்றும் கலாச்சார பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. நமது மாநிலத்தின் கைத்தறி நெசவு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முந்தையது. உலக அளவில் பிரசித்திப் பெற்ற நுட்பமான வடிவமைப்புகள், உருவங்கள் மற்றும் வண்ணக் கலவையுடன் கூடிய உயர் மதிப்பு மிக்க

கைத்தறிப் பொருட்களை உற்பத்தி செய்து, வாடிக்கையாளர்களின் மாறி வரும் தேவைக்கு ஏற்ப தன்னை தகவமைத்து கொள்வதால் பல நூற்றாண்டுகள் கடந்து அடுத்தடுத்த தலைமுறைக்கு நெசவுத் தொழில்நுட்பத்தைக் கொண்டு செல்வதன் மூலம் இத்தொழிலானது நீடித்து நிலைத்துள்ளது.

விலைமதிப்பற்ற நெசவு மற்றும் கைவினைத் தொழிலின் நுணுக்கங்களைப் பாதுகாத்து அதன் பெருமையினை நிலைநாட்டும் நோக்கத்துடன் நவீன தகவல் தொழில்நுட்பத்துடன் வலை அமைப்பகம் கொண்ட "கலாச்சாரம் மற்றும் படைப்பாற்றல் திறன்மிகு கைவினைப் பொருட்களுக்கான வடிவமைப்பு மற்றும் புத்தாக்கல் மையம்" நிறுவப்படவுள்ளது. இம்மையமானது அலங்கார மற்றும் ஜவுளி வடிவமைப்பாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் உலக அளவில் ஜவுளி மற்றும் அலங்கார நிறுவனங்களின் வணிக முத்திரை சின்னத்திற்கான சர்வதேச ஒருங்கிணைப்பு தளமாகச் செயல்பட்டு,

எதிர்கால ஜவுளி மற்றும் நாகரிக போக்குகளை ஊகிக்கவும், கணிக்கவும், மாறிவரும் சந்தைத் தேவைக்கு ஏற்ப புதிய வடிவமைப்புகள் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட நெசவுகளை அறிமுகப்படுத்தவும் அவர்களுக்கு ஒரு சிறந்த ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பு தளத்தை வழங்கும்.

**ஈ) தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைவினை அருங்காட்சியகம்**

நெசவுத் தொழிலின் பாரம்பரியம் மற்றும் அதன் மரபின் மதிப்பினை பாதுகாக்கவும், கைத்தறி நெசவாளர்களின் திறமை மற்றும் கைத்தறி இரகங்களின் சிறப்பு ஆகியவற்றை எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துச் செல்லும் விதமாகவும் மகாபலிபுரத்தில் உள்ள நகர்புறக் கண்காட்சித் திடலில் (Urban Haat) 1.83 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.30.74 கோடி திட்ட மதிப்பீட்டில் "கைத்தறி மற்றும் கைவினை அருங்காட்சியகம்" அமைக்க அரசால் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையானது கட்டடக் கலை ஆலோசனை நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யக்கோரி ஒன்றிய அரசின் கலாச்சார அமைச்சகத்துக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், அருங்காட்சியம் அமைக்க கைத்தறி ஆதரவுத் திட்டத்தின் கீழ் ரூ.20 கோடி தமிழ்நாடு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உ) பேரறிஞர் அண்ணா கைத்தறிப் பட்டுப் பூங்கா, காஞ்சிபுரம்**

பட்டுக் கைத்தறி இரகங்களின் உற்பத்தியை மேம்படுத்தவும், உயர்மட்ட உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த கைத்தறிப் பணிகளை மேற்கொள்ளவும், பேரறிஞர் அண்ணா கைத்தறிப் பட்டுப் பூங்கா 2010ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் நிறுவப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டம், கீழ்கதிர்பூர் கிராமத்தில் 75 ஏக்கர் பரப்பளவில் ரூ.82.56 கோடி திட்ட மதிப்பீட்டில் இப்பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

இப்பட்டுப் பூங்காவிற்காக நிலம் கொள்முதல் செய்தல், நிலத்தைப் பண்படுத்துதல், ஆழ்துளை கிணறுகள் அமைத்தல், அணுகுச் சாலைகள் அமைத்தல், தொழிற்சாலைக் கட்டடங்கள், ஆலோசனைக் கட்டணம் மற்றும் இதர முன்பணிகளுக்காக இதுவரை ரூ.49.02 கோடி செலவிடப்பட்டுள்ளது.

பேரறிஞர் அண்ணா கைத்தறிப் பட்டுப் பூங்காவின் முக்கிய சிறப்பம்சங்கள் பின்வருமாறு:

- கைத்தறி நெசவாளர்கள், வடிவமைப்பாளர்கள், சாய தொழிலாளர்கள் மற்றும் கைத்தறி மதிப்புச் சங்கிலியில் உள்ள பிற தொழிலாளர்கள் என நேரடியாக மற்றும் மறைமுகமாக 18,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தல்

- பூங்காவின் உத்தேச முதலீடு ரூ.120 கோடி
- எதிர்பார்க்கப்படும் ஆண்டு விற்பனை ரூ.50 கோடி
- திட்டமிடப்பட்டுள்ள 24 கைத்தறி நெசவுக் கூடங்களில் 11 கைத்தறி நெசவுக் கூடங்களின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன
- தற்போது 8 கைத்தறி நெசவுக் கூடங்களில் 523 கைத்தறிகள் இயங்கி வருகின்றன. இதன் மூலம் 600 நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது
- 3 கைத்தறி நெசவுக் கூடங்களில் கைத்தறிகளை நிறுவும் பணி நடைபெற்று வருகிறது
- பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன
- சாலை, தண்ணீர், மின்சாரம், சுற்றுச்சுவர் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் நிறைவடைந்துள்ளன

**ஊ) நெசவாளர் முத்ரா திட்டம்**

2016-2017 ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நெசவாளர்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் சலுகைக் கடன் வழங்குவதற்காக நெசவாளர் முத்ரா திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 2021-2022 முதல் 2025-2026 வரையிலான காலத்திற்கு வழங்கப்படும் விளிம்பு தொகை விவரம் பின்வருமாறு:

1. கைத்தறி நெசவாளர் / நெசவு தொழில் முனைவோருக்கு வழங்கப்படும் கடன் தொகையில் 20 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.25,000/- மானியம்

2. குறைந்தபட்சம் 100 நெசவாளர்கள் / தொழிலாளர்கள் பணிபுரியும் கைத்தறி அமைப்புகள் / நிறுவனங்களுக்கு அதிகபட்சமாக ரூ.20.00 இலட்சம் வரையில்

கடன் தொகை மற்றும் மானியத் தொகையாக ரூ.2.00 இலட்சம்

நெசவாளர் முத்ரா திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட 2016–2017 ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை நெசவாளர்களுக்கு முத்ரா கடன் வழங்குவதில் தமிழ்நாடு தொடர்ந்து முதலிடம் வகித்து வருகிறது.

2021–2022 மற்றும் 2022–2023 ஆம் ஆண்டுகளில், நெசவாளர்களுக்கு ரூ.132.40 கோடி மதிப்பில் 27,010 முத்ரா கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

2023–2024 ஆம் ஆண்டில், நெசவாளர்களுக்கு ரூ.59.27 கோடி மதிப்பில் 10,445 முத்ரா கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

**எ) சமர்த் திட்டம்**

சமர்த் திட்டம், ஜவுளித் துறையின் திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. ரூ.196.14 இலட்சம் மதிப்பீட்டில் கைத்தறித் துறையின் கட்டுப்பாட்டில்

செயல்படும் காஞ்சிபுரம், ஈரோடு, கும்பகோணம், மற்றும் பரமக்குடியில் உள்ள 4 பயிற்சி நிறுவனங்கள் மூலம் 1,400 பயனாளிகளுக்கு "கைத்தறி நெசவு" பயிற்சி அளிக்க ஒன்றிய அரசின் ஒப்புதல் பெறப்பட்டது.

இருப்பினும், ஒன்றிய அரசின் ஜவுளி அமைச்சகம், தற்போது பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கையை 1400–லிருந்து 607 ஆகக் குறைத்துள்ளது. ஒன்றிய அரசு ரூ.58.84 இலட்சத்தை முதல் தவணையாக விடுவித்து ரூ.39.23 இலட்சத்தினை பயன்படுத்த அனுமதி அளித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ், இதுவரை 505 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள நெசவாளர்களுக்கான பயிற்சி நடைபெற்று வருகிறது.

| வ. எண் | பயிற்சி மையத்தின் பெயர் | பயிற்சியாளர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | திருத்தப் பட்ட இலக்கு | பயிற்சி பெற்றோர் | பயிற்சியில் உள்ளோர் |
| 1. | காஞ்சிபுரம் | 87 | 43 | 44 |
| 2. | ஈரோடு | 220 | 220 | - |
| 3. | கும்பகோணம் | 150 | 84 | 58 |
| 4. | பரமக்குடி | 150 | 158 | - |
| | **மொத்தம்** | **607** | **505** | **102** |

**ஏ) மூலப்பொருட்கள் விநியோகத் திட்டம்**

ஒன்றிய அரசின் நூல் விநியோகத் திட்டமானது திருத்தப்பட்டு மூலப்பொருட்கள் விநியோகத் திட்டம் என்ற பெயரில் 2021-2022 முதல் 2025-2026 வரையிலான காலத்திற்குச் செயல்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**மூலப்பொருட்கள் விநியோகத் திட்டத்தின் கூறுகள்:**

1. போக்குவரத்து மானியம்:- அனைத்து வகையான நூல் போக்குவரத்துச் செலவினத்தில் மானியமாக அதிகபட்சம் ஒரு மாதத்திற்கு ரூ.15,000/- வரை வழங்கப்படுகிறது

2. நூல் விலை மானியம்:– பருத்தி சிட்டா நூல், உள்நாட்டுப் பட்டு, கம்பளி, சணல் நார் மற்றும் இயற்கை இழைகளின் கலப்பு நூல் கொள்முதலுக்கு அளவு கட்டுப்பாடுகளுடன் 15 விழுக்காடு விலை மானியம் வழங்கப்படுகிறது

ஒரு நெசவாளருக்கு வழங்கப்படும் அதிகபட்ச நூல் கொள்முதல் மானிய விவரம் பின்வருமாறு:

| வ. எண் | நூல் | அளவு |
|---|---|---|
| 1 | பருத்தி நூல்<br>(20s நூல் எண் வரை) | 60 கிலோ/தறி /மாதம் |
| 2 | பருத்தி நூல்<br>(20s முதல் 40s வரை) | 30 கிலோ/தறி /மாதம் |
| 3 | பருத்தி நூல்<br>(40s முதல் 80s வரை) | 20 கிலோ/தறி /மாதம் |
| 4 | பருத்தி நூல்<br>(80sக்கு மேல்) | 15 கிலோ/தறி /மாதம் |
| 5 | உள்நாட்டுப் பட்டு நூல் | 6 கிலோ/தறி /மாதம் |

2023–2024 ஆம் ஆண்டில், 15 விழுக்காடு நூல் மானியத் தொகையாகத் தமிழ்நாட்டிற்கு ரூ.47.95 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

## 6. நல்வாழ்வுக்கான ஆதரவுத் திட்டங்கள்

### 6.1. மாநில அரசின் நிதியுதவித் திட்டங்கள்

### அ) தமிழ்நாடு கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம்

கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கான முதியோர் ஓய்வூதியத் திட்டம் 1997 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பதிவு செய்துள்ள உறுப்பினர்களில் 60 வயது நிரம்பிய உறுப்பினர்கள் முதியோர் ஓய்வூதியம் பெற தகுதியுடையவர்கள் ஆவர்.

01.08.2023 முதல் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் ரூ.1000/-லிருந்து ரூ.1200/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

2023–2024 ஆம் ஆண்டில், 28,108 கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக முதியோர் ஓய்வூதியமாக ரூ.40.13 கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2024–2025ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**ஆ) தமிழ்நாடு கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்**

தமிழ்நாடு கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம் இயற்கை எய்திய கைத்தறி நெசவாளர்களின் குடும்ப நலனுக்காக 1992 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கைத்தறி நெசவாளர் 60 வயதை அடையும் முன் இறக்க நேரிட்டால், நெசவாளர் இறந்த நாளிலிருந்து 10 ஆண்டுகள் அல்லது நெசவாளரின் 60 வயது வரை (காலஞ்சென்ற நெசவாளர் உயிருடன் இருந்திருந்தால்) இதில் எது அதிக நன்மை பயக்குமோ

அவ்வகையில் நெசவாளரின் வாரிசுதாரருக்குக் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

01.08.2023 முதல் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் ரூ.1000/–லிருந்து ரூ.1200/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

2023–2024 ஆம் ஆண்டில் 1,194 கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்களுக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்குவதற்காக ரூ.1.86 கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2024–2025 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**இ) தமிழ்நாடு கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்**

நெசவாளர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தி அவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்கும் வகையில், தமிழ்நாடு அரசால் 1975ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் சேமிப்பு

மற்றும் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள், அவர்கள் ஈட்டும் கூலியில் ஒரு ரூபாய்க்கு எட்டு பைசா தொகையும் மற்றும் அதற்கு இணையான மாநில அரசின் பங்களிப்புத் தொகையும், அரசு கணக்கில் வைப்பீடு செய்யப்படுகிறது. இவ்வைப்பீட்டுத் தொகைக்கு மாநில அரசு 6.5 விழுக்காடு வட்டி வழங்குகிறது.

2023–ஆம் ஆண்டில் சந்தா செலுத்தும் காலத்தை 25 ஆண்டுகளில் இருந்து 20 ஆண்டுகளாக அரசு குறைத்துள்ளது. இத்திட்டத்தில் சேர்ந்து 20 ஆண்டுகள் நிறைவு செய்த நெசவாளர்கள் சேமிப்புத் தொகை முழுவதையும் பெறலாம்.

இத்திட்டத்தின் கீழ் 31.03.2024 வரையில் 49,045 நெசவாளர்கள் உறுப்பினர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

2023-2024 ஆம் ஆண்டில், நெசவாளர்களின் பங்களிப்பிற்கு இணையான மாநில அரசு பங்காக ரூ.10.84 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2022-2023 ஆம் ஆண்டு வரையில் இத்திட்டத்திலுள்ள மொத்த வைப்புத் தொகைக்கு 6.5 விழுக்காடு வட்டியாக ரூ.26.14 கோடி மாநில அரசால் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை 2024-2025 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்த ஏதுவாக மாநில அரசின் பங்களிப்புத் தொகையாக ரூ.12.00 கோடியும், 6.5 விழுக்காடு வட்டித் தொகையாக ரூ.26.50 கோடியும் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஈ) கைத்தறி நெசவாளர்களுக்கு மானியத்துடன் கூடிய வீடு கட்டும் திட்டம்**

வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ.4.00 இலட்சம் மானியத்துடன் கூடிய வீடு கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான நிதியில் குறிப்பிட்ட நிதி பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா 'அனைவருக்கும் வீடு' திட்டத்தின்கீழ் பெறப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு ஆண்டும் கிராமப்புறங்களில் 500 வீடுகளும், நகர்ப்புறங்களில் 500 வீடுகளும் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் கிராமப்புறங்களிலும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் (TNUHDB) மூலம் நகர்ப்புறங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா 'அனைவருக்கும் வீடு' என்ற திட்டத்தின்கீழ் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் வழங்கப்படும் மானியம்

| வ.எண். | மானியத் தொகை | PMAY கிராமப்புறம் | PMAY நகர்ப்புறம் |
|---|---|---|---|
| | | (ரூபாயில்) | |
| 1 | ஒன்றிய அரசின் பங்கு | 79,200/- | 1,50,000/- |
| 2 | தமிழ்நாடு அரசின் பங்கு | 1,72,800/- | 60,000/- |
| | **மொத்த மானியம்** | **2,52,000/-** | **2,10,000/-** |
| 3 | மாநில அரசின் கூடுதல் மானியம் | 1,48,000/- | 1,90,000/- |
| **மொத்த மானியத் தொகை** | | **4,00,000/-** | **4,00,000/-** |

2023-2024 ஆம் ஆண்டில், கூடுதல் மானியத் தொகையாக ரூ.10.74 கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி முதற்கட்டமாக 496 பயனாளிகளுக்குப் பணி ஆணை வழங்கப்பட்டு, 240 பயனாளிகளுக்கு ரூ.5.06 கோடி திட்ட மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது. 31.03.2024 அன்று வரை இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்ற நெசவாளர்களால் 118 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 346 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

இரண்டாம் கட்டமாக, 1790 பயனாளிகள் கண்டறியப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்குப் பரிந்துரைக்கப்பட்டு, 309 பயனாளிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை வாரியத்தால் (TNUHDB) அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**உ) வருடாந்திர சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்துதல்**

கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையுடன் இணைந்து கைத்தறி நெசவாளர்களுக்குச் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என 2023-2024 ஆம் ஆண்டுக்கான சட்டமன்றப் பேரவை கூட்டத்தொடரின்போது மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

மேற்கண்ட அறிவிப்பின் அடிப்படையில், கைத்தறி நெசவாளர்களுக்கு 118 சிறப்பு மருத்துவ

முகாம்கள் நடத்தப்பட்டு 34,873 நெசவாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**ஊ) கல்வி உதவித்தொகை**

1. **டாக்டர் எம்.ஜி.ஆர் கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையின் கீழ் கல்வி உதவித்தொகை வழங்குதல்**

உயர்கல்வி கற்கும் நெசவாளர்களின் வாரிசுகளை ஊக்குவிக்கும் பொருட்டு டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை 1986 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் பத்து மற்றும் பன்னிரண்டாம் வகுப்புகளில் முதல் ஐந்து இடங்களைப் பெறும் 5 மாணவர்கள் மற்றும் 5 மாணவிகளுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

மேலும், பத்து மற்றும் பன்னிரண்டாம் வகுப்பில் பெறப்பட்ட மதிப்பெண்கள் அல்லது பட்டப்படிப்பில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் 40 பாடப்பிரிவுகளில் மாணாக்கர்கள் தங்கள் படிப்பை

முடிக்கும் காலம் வரை ஆண்டொன்றுக்கு ரூ.1,000/- முதல் ரூ.7,500/- வரை கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் மொத்தம் 400 மாணாக்கர்கள் (200 மாணவர்கள் மற்றும் 200 மாணவியர்கள்) உதவித்தொகை பெறுகின்றனர்.

2021-2022 மற்றும் 2022-2023 ஆம் ஆண்டுகளுக்கு 306 மாணாக்கர்களுக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.11,21,500/- வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2024-2025 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**2. தமிழ்நாடு கூட்டுறவுத் துணிநூல் பதனிடும் ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்களின் வாரிசுகளுக்குக் கல்வி உதவித் தொகை வழங்குதல்**

தமிழ்நாடு கூட்டுறவுத் துணிநூல் பதனிடும் ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்களது வாரிசுளை

ஊக்குவிக்கும் பொருட்டு, பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்புகளில் அதிக மதிப்பெண் பெறும் தொழிலாளர்களின் வாரிசுகளுக்குக் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் 2008 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் கல்வி உதவித் தொகை பின்வருமாறு:

| தர வரிசை | உதவித் தொகை (ரூ) | |
|---|---|---|
| | பத்தாம் வகுப்பு | பன்னிரண்டாம் வகுப்பு |
| 1 | 5,000 | 10,000 |
| 2 | 3,000 | 7,500 |
| 3 | 2,000 | 5,000 |

2021-2022 மற்றும் 2022-2023 ஆம் ஆண்டுகளுக்கு 8 மாணாக்கர்களுக்குக் கல்வி உதவித்தொகையாக ரூ.53,000/- வழங்கப்பட்டுள்ளது.

### 3. சேலம், இந்திய கைத்தறித் தொழில்நுட்ப கழகத்தில் பயிலும் மாணாக்கர்களுக்கு உதவித்தொகை

கைத்தறி நெசவாளர்களின் வாரிசுகளை ஊக்குவிக்கும் விதமாக, சேலத்தில் உள்ள இந்திய கைத்தறித் தொழில்நுட்பக் கழகத்தில் (IIHT) கைத்தறி மற்றும் ஜவுளி தொழில்நுட்பத்தில் பட்டயப்படிப்புக்கான (DHTT) விண்ணப்பதாரர்களைத் தேர்ந்தெடுப்பதில் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசு 1977 முதல் சேலம், இந்திய கைத்தறித் தொழில்நுட்பக் கழகத்தில் கைத்தறி மற்றும் ஜவுளி தொழில்நுட்பத்தில் பட்டயப் படிப்பு (DHTT) பயிலும் மாணாக்கர்களுக்கு உதவித்தொகை வழங்கி வருகிறது.

| **ஆண்டு** | **ஒரு மாதத்திற்கான உதவித் தொகை ஒரு மாணாக்கருக்கு** | **ஒன்றிய அரசின் பங்கு 50 விழுக்காடு** | **தமிழ்நாடு அரசின் பங்கு 50 விழுக்காடு** |
|---|---|---|---|
| | **(தொகை ரூ.)** | | |
| முதலாம் ஆண்டு | 2500 | 1250 | 1250 |

| | | | |
|---|---|---|---|
| இரண்டாம் ஆண்டு | 2500 | 1250 | 1250 |
| மூன்றாம் ஆண்டு | 2500 | 1250 | 1250 |

இது தவிர தமிழ்நாடு அரசு ஒதுக்கீட்டின் கீழ் கடக் (கர்நாடகா), வெங்கடகிரி (ஆந்திரப் பிரதேசம்) மற்றும் கண்ணூர் (கேரளா) ஆகிய இடங்களில் உள்ள இந்திய கைத்தறித் தொழில்நுட்ப நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கும் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

கல்வி உதவித்தொகையில் தமிழ்நாடு அரசின் பங்குத் தொகை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவுக் கல்வி நிதியில் இருந்து வழங்கப்படுகிறது.

2023-2024 ஆம் ஆண்டில் சேலம், இந்திய கைத்தறித் தொழில்நுட்ப நிறுவனத்தில் பயிலும் 83 மாணாக்கர்களுக்குக் கல்வி உதவித்தொகையாக ரூ.10,37,500/- மற்றும் கர்நாடகாவின் கடக்கில் உள்ள இந்திய கைத்தறித் தொழில்நுட்ப நிறுவனத்தில் 3 ஆண்டு பட்டயப்படிப்பைப் பயிலும்

10 மாணாக்கர்களுக்குக் கல்வி உதவித்தொகையாக ரூ.1,25,000/- வழங்கப்பட்டுள்ளது.

**ஏ) நல வாரியங்கள்**

**1. தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறிப் பட்டு நெசவுத் தொழிலாளர்கள் நல வாரியம்**

கைத்தறி நெசவாளர்களின் நலனை உறுதி செய்யும் பொருட்டு "தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறிப் பட்டு நெசவுத் தொழிலாளர்கள் நல வாரிய" மானது 2000-2001 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறிப் பட்டு நெசவுத் தொழிலாளர்கள் நல வாரியம் 21.07.2004 முதல் உடலுழைப்பு தொழிலாளர்கள் நல வாரியத்துடன் இணைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இவ்வாரியம் 01.09.2006 முதல் தொழிலாளர் நலத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் தனியாக இயங்கி வருகிறது.

இந்நலவாரியத்தால் நிதியுதவி, கல்வி உதவித்தொகை, இயற்கை மற்றும் விபத்து மரணம் மற்றும் உடல் ஊனத்திற்கான காப்பீட்டுத் தொகை கீழ்க்காணும் விவரங்களின்படி வழங்கப்படுகிறது:

| வ. எண் | இனம் | ஒரு நபருக்கு வழங்கப்படும் நிதி உதவி (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | விபத்து காப்புறுதித் திட்டம் | |
| | அ) விபத்தால் மரணம் | 1,25,000 |
| | ஆ) விபத்தால் ஊனம் (ஊனத்தின் தன்மையை பொருத்து) | 1,00,000 வரை |
| | இ) செயற்கை உறுப்புகள் மற்றும் சக்கர நாற்காலி | |
| 2 | இயற்கை மரணம் | 30,000 |
| 3 | ஈமச்சடங்கு உதவி | 5,000 |
| 4 | கல்வி உதவித் தொகை | |
| | i) 10ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தை | 1,000 |
| | ii) 10ஆம் வகுப்பு தேர்ச்சி | 1,000 |
| | iii) 11ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தை | 1,000 |
| | iv) 12ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தை | 1,500 |
| | v) 12ஆம் வகுப்பு தேர்ச்சி | 1,500 |
| | vi) இளநிலை பட்டப்படிப்பு | 1,500 |

| வ. எண் | இனம் | ஒரு நபருக்கு வழங்கப்படும் நிதி உதவி (ரூபாயில்) |
|---|---|---|
| | vii) இளநிலை பட்டப்படிப்பு (விடுதி) | 1,750 |
| | viii) முதுநிலை பட்டப்படிப்பு | 4,000 |
| | ix) முதுநிலை பட்டப்படிப்பு (விடுதி) | 5,000 |
| | x) தொழில்நுட்பப் படிப்பு (**Professional Degree**) | 4,000 |
| | xi) தொழில்நுட்பப் படிப்பு (விடுதி) | 6,000 |
| | xii) தொழில்நுட்ப மேற்படிப்பு | 6,000 |
| | xiii) தொழில்நுட்ப மேற்படிப்பு (விடுதி) | 8,000 |
| | xiv) ஐடிஐ / பட்டயப்படிப்பு | 1,000 |
| | xv) ஐடிஐ / பட்டயப்படிப்பு (விடுதி) | 1,200 |
| 5 | திருமண உதவி | |
| | அ) ஆண் | 3,000 |
| | ஆ) பெண் | 5,000 |
| 6 | மருத்துவ உதவிகள் | |
| | i)மகப்பேறு உதவி | 6,000 |
| | ii)கருச்சிதைவு | 3,000 |
| | iii) மூக்குக்கண்ணாடி | 500 வரை |
| 7 | ஓய்வூதியம் (மாதம் ஒன்றுக்கு) | 1,200 |

இந்நலவாரியத்தில் 31.03.2024 வரை 1,15,818 நெசவாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் 2023-2024 ஆம் ஆண்டில், 2,296 புதிய நெசவாளர்கள் உறுப்பினர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். 2023-2024ஆம் ஆண்டில் 18,260 பயனாளிகளுக்கு ரூ.30.94 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## 2. தமிழ்நாடு விசைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் நலவாரியம்

விசைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்குப் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்த தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம் 1982-இன்கீழ் "தமிழ்நாடு விசைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் நலவாரியம்" ஜூலை 2009 இல் தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டது.

இந்நலவாரியத்தின் மூலம் விபத்துக் காப்பீட்டுப் பயன், இயற்கை மரணத்திற்கான காப்பீட்டுப் பயன், ஈமச்சடங்கு செலவினத்திற்கான உதவித் தொகை, கல்வி, திருமணம், மகப்பேறு, மூக்குக்கண்ணாடி வாங்குவது மற்றும் ஓய்வூதியப் பயன் போன்றவற்றிற்கான உதவித் தொகைகள் விசைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாரியத்தில் 31.03.2024 வரை 91,776 விசைத்தறி நெசவாளர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் 2023–2024 ஆம் ஆண்டில், 3,467 புதிய நெசவாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். 2023–2024 ஆம் ஆண்டில் ரூ.18.02 கோடி நிதியுதவி 15,854 தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 6.2. ஒன்றிய அரசின் நிதி உதவித் திட்டங்கள்

### அ) கைத்தறி நெசவாளர் ஆயுள் காப்பீட்டுத் திட்டங்கள்

2021–2022 ஆம் ஆண்டில் தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டம், ஒன்றிய அரசால் மீண்டும்

அறிமுகப்படுத்தப்பட்டது. புதிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி, கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக 18 முதல் 50 வயதுக்குட்பட்டோருக்கு "பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா (PMJJBY)" மற்றும் 18 முதல் 70 வயது வரை உள்ளவர்களுக்குப் "பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா (PMSBY)" ஆயுள் காப்பீட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

| திட்டம் | வயது வரம்பு | சந்தா தொகை (ரூபாயில்) | | | பயன்கள் (ரூ.இலட்சத்தில்) | | | | பயனாளிகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | இறப்பு | | ஊனம் | | |
| | | ஒன்றிய அரசு | மாநில அரசு / பயனாளி | மொத்தம் | இயற்கை | விபத்து | நிரந்தரம் | பகுதி | |
| பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா | 18–50 | 198 | 238 | 436 | 2.00 | 2.00 | - | - | 30,292 |
| பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா | 18–70 | 20 | - | 20 | - | 2.00 | 2.00 | 1.00 | 41,588 |

இத்திட்டத்திற்காக 2024-2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.75 இலட்சம் தமிழ்நாடு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆ) கைத்தறி நெசவாளர்களுக்கான மருத்துவ காப்பீட்டுத் திட்டம்**

தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படும் "முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (AB-PMJAY) திட்டத்துடன் தற்போது ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு குடும்பத்திற்கு ஆண்டுக்கு ரூ.5.00 இலட்சம் வரை காப்பீடு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் அனைத்து தகுதியான நெசவாளர்களையும் கொண்டு வருவதற்கு அரசு தொடர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 84,526 கைத்தறி நெசவாளர் குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## 7. சட்டப்பூர்வ மற்றும் அமலாக்க நடவடிக்கைக்கான ஆதரவுத் திட்டங்கள்

### அ) கைத்தறி (உற்பத்தி இரக ஒதுக்கீடு) சட்டம், 1985

கைத்தறியில் மட்டுமே பிரத்தியேகமாக உற்பத்தி மேற்கொள்ள குறிப்பிட்ட கைத்தறி இரகங்களை ஒதுக்கீடு செய்து, கைத்தறித் தொழிலைப் பாதுகாப்பதே இச்சட்டத்தின் நோக்கமாகும். தற்போது, கீழ்க்காணும் 11 இரகங்கள் கைத்தறியில் பிரத்தியேகமாக உற்பத்தி செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| (1) | சேலை | (2) | வேட்டி |
| (3) | துண்டு / கம்சா மற்றும் அங்கவஸ்திரம் | (4) | லுங்கி |
| (5) | ஜடார் மேகலா/ பாநெக் | (6) | ஜமக்காளம்/ டர்ரி (அ) டர்ரட் |
| (7) | டிரஸ் மெட்டீரியல் | (8) | பேரெக் பிளாங்கெட், கம்பல் (அ) கம்பளி |
| (9) | ஷால், லாய், மப்ளர், பங்கி | (10) | உல்லன் ட்வீடு |
| (11) | கேஸ், பெட்ஷீட், பெட் கவர், கவுண்டர்பேன், பர்னிசிங் (டேப்பஸ்டிரி மற்றும் அப்ஹோல்ஸ்டிரி உட்பட) | | |

சென்னை, கைத்தறி ஆணையரகத்தில் செயல்பட்டு வரும் துணை இயக்குநர் (அமலாக்கம்) அலுவலகத்தினைத் தலைமையிடமாகக் கொண்டு, அதன் நிருவாகக் கட்டுப்பாட்டில் சேலம், திருச்செங்கோடு, ஈரோடு, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய 5 இடங்களில் உதவி அமலாக்க அலுவலர் அலுவலகங்கள் தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் 1985–இன்கீழ் 2023–2024 ஆம் ஆண்டில் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விவரம் பின்வருமாறு :

| வ எண் | மண்டலத் தின் பெயர் | 2023–2024 ஆம் ஆண்டுக்கு விசைத்தறிகள் ஆய்வுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு | விசைத்தறிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டவை | 2023–2024 ஆம் ஆண்டில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை | தண்டனை வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை (கடந்த ஆண்டு நிலுவை வழக்குகளும் சேர்த்து) | விழிப்புணர்வு கூட்டங்கள் | கலந்து கொண்டவர்கள் | ஆய்வு மேற்கொள்ளப்பட்ட தனியார் நிறுவனங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஈரோடு | 15500 | 16190 | 17 | 11 | 39 | 1896 | 12 |
| 2 | மதுரை | 11500 | 12932 | 15 | 9 | 46 | 1286 | 9 |
| 3 | சேலம் | 14792 | 15020 | 17 | 11 | 47 | 1889 | 8 |
| 4 | திருச்செங் கோடு | 16500 | 17415 | 18 | 16 | 47 | 2485 | 17 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | திருப்பூர் | 15500 | 16297 | 5 | 1 | 37 | 807 | 10 |
| 6 | சென்னை | 2400 | 2421 | 4 | 0 | 31 | 894 | 31 |
| மொத்தம் | | 76192 | 80275 | 76 | 48 | 247 | 9257 | 87 |

**ஆ) புவிசார் குறியீடு பொருட்கள் (பதிவு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 1999–இன்கீழ் கைத்தறி உற்பத்தி இரகங்களைப் பதிவு செய்தல்**

நாடு முழுவதும் 642 பொருட்கள், புவிசார் குறியீடு பொருட்கள் (பதிவு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 1999–இன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் 58 பொருட்கள் தமிழ்நாட்டிலிருந்து பதிவு செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் 1) காஞ்சிபுரம் பட்டுச் சேலை, 2) பவானி ஜமுக்காளம், 3) மதுரை சுங்கடிச் சேலை, 4) சேலம் வெண்பட்டு வேட்டி, 5) ஆரணி பட்டுச் சேலை 6) கோவை கோரா பருத்திச் சேலை, 7) திருபுவனம் பட்டுச் சேலை மற்றும் 8) கண்டாங்கிச் சேலை ஆகியன புவிசார் குறியீடு பொருட்கள் (பதிவு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 1999–இன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2023–2024 ஆம் ஆண்டில், நெகமம் பருத்திச் சேலைகள் மற்றும் திருநெல்வேலி செடிபுட்டாச் சேலைகளுக்குப் புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது.

இச்சட்டத்தினால் குறிப்பிட்ட பகுதியில் உற்பத்தி செய்யப்படும் சிறப்புப் பொருட்களுக்குச் சட்டப்பூர்வ பாதுகாப்பு வழங்க இயலுவதோடு, புவிசார் குறியீடு சட்டத்தில் பதிவு செய்யப்பட்ட பொருட்களை அங்கீகரிக்கப்படாத மற்றும் தவறாகப் பயன்படுத்துவோரிடமிருந்து உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்களை பாதுகாக்க உதவுகிறது.

புவிசார் குறியீடு சட்டத்தின் கீழ் பொருட்களைப் பதிவு செய்வது, அத்தகைய பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிப்பது மட்டுமல்லாமல், மற்ற நாடுகளில் அவற்றின் பயன்பாடு மற்றும் விற்பனையைப் பாதுகாக்கிறது.

## இ) கைத்தறி மற்றும் பட்டு உற்பத்தி இரகங்களை மேம்படுத்துவதற்கான முத்திரைச் சான்றிதழ்கள்

இத்திட்டத்தின்கீழ் கைத்தறி மற்றும் பட்டு உற்பத்தி இரகங்களின் நம்பகத்தன்மையினை உறுதி செய்வதற்கும் பிரத்தியேக அடையாளத்தை வழங்குவதற்காகவும் கைத்தறி முத்திரை, பட்டு முத்திரை மற்றும் இந்திய கைத்தறி வணிகச் சின்னம் போன்றவை ஒன்றிய அரசால் ஊக்கப்படுத்தப்படுகிறது.

### 1. கைத்தறி முத்திரை

கைத்தறித் தயாரிப்புகளுக்கு தனிப்பட்ட அடையாளத்தை உருவாக்கவும் உள்நாடு மற்றும் சர்வதேச சந்தைகளில் அதன் சந்தைப்படுத்துதலை மேம்படுத்தவும், "கைத்தறி முத்திரைத் திட்டம்" 28.06.2006 அன்று ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

தமிழ்நாட்டில் கைத்தறி முத்திரைத் திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட 8,717 நிறுவனங்கள் / தனிநபர்களுக்கு தற்போது வரை 3.92 கோடி கைத்தறி முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன.

## 2. பட்டு முத்திரை

உள்நாடு மற்றும் சர்வதேச சந்தையில் தூய்மையான மற்றும் இயற்கையான பட்டு உற்பத்தி இரகங்களை மேம்படுத்துவதற்காக "பட்டு முத்திரைத் திட்டம்" 17.04.2004 அன்று ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

தமிழ்நாட்டில் பட்டு முத்திரைத் திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட 1,310 நிறுவனங்கள் / தனிநபர்களுக்கு தற்போது வரை 11.50 இலட்சம் பட்டு முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**3. இந்திய கைத்தறி வணிகச் சின்னம்**

கைத்தறி இரகங்களின் தரத்தை அங்கீகரிக்க, மூலப்பொருட்கள், பதனிடுதல், நெசவு, வடிவமைப்பு மற்றும் இதர புதிய வடிவமைப்புகளில் சுற்றுச்சூழல் பாதிக்காத நேர்த்தியான கைத்தறி இரக உற்பத்தியை உறுதி செய்யும் நோக்கத்தில் "இந்திய கைத்தறி" வணிகச் சின்னம், 7 ஆகஸ்ட் 2015 அன்று, முதல் தேசிய கைத்தறித் தினவிழாவின்போது ஒன்றிய அரசால் வெளியிடப்பட்டது.

தமிழ்நாட்டில் 178 நிறுவனங்கள் / தனிநபர்கள் "இந்திய கைத்தறி" வணிகச் சின்னத்தின் கீழ் பதிவு செய்துள்ளனர்.

**ஈ) கைத்தறி இரகங்கள் பிரபலப்படுத்தும் திட்டம்**

2023-2024 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தொடரின்போது மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் "தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் பயிலும்

மாணவ, மாணவிகளிடையே தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் கைத்தறி இரகங்களின் தனித்தன்மை, கலை நுணுக்கம், பாரம்பரியம் மற்றும் அதன் வளமான மரபு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி விற்பனையினை அதிகரிக்க கைத்தறி இரகங்களைப் பிரபலப்படுத்தும் திட்டம் நடத்தப்படும்" என அறிவிக்கப்பட்டது.

அதன்படி, கோ–ஆப்டெக்ஸின் மண்டல மேலாளர்கள் / பணியாளர்கள் அனைத்து சரக துணை இயக்குநர்கள் மற்றும் உதவி இயக்குநர்கள் பங்கேற்புடன் 302 கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணாக்கர்களிடையே விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு ரூ.3.72 கோடி மதிப்பில் கைத்தறி இரகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**உ) ஒன்பதாவது தேசிய கைத்தறித் தின விழா கொண்டாட்டம்**

கைத்தறித் துறையால் மாநில மற்றும் மாவட்ட அளவில் ஒன்பதாவது தேசிய கைத்தறித் தினம் 07.08.2023 அன்று கொண்டாடப்பட்டது. மாநில அளவிலான தேசிய கைத்தறித் தின விழா கொண்டாட்டம் சென்னை எழும்பூரில் உள்ள கோ–ஆப்டெக்ஸ் வளாகத்தில் நடைபெற்றது. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் தலைமையில், மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு பெருமாநகர சென்னை மேயர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் கைத்தறி நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் பின்வரும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

1. முதியோர் ஓய்வூதிய ஆணை 20 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது
2. முத்ரா கடன் ஆணை 20 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது
3. நெசவாளர் பயிற்சி மற்றும் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் 20 பயனாளிகளுக்குப் பதிவுச்சான்று வழங்கப்பட்டது
4. தேசிய வடிவமைப்பு நிறுவனம் (NID) மற்றும் தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப (NIFT) நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட 1000 புதிய வடிவமைப்பு உற்பத்திகளை அறிமுகப்படுத்த ஆடை அலங்கார அணிவகுப்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டது
5. தேசிய தகவலியல் மையத்தால் (NIC) உருவாக்கப்பட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் (பருத்தி)

கணினிமயமாக்கலுக்கான மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டது

6. ஆறுதல் பரிசாக ரூ.10,000/- வீதம் 22 சிறந்த இளம் வடிவமைப்பாளர்களுக்கு வழங்கப்பட்டது

7. சென்னை எழும்பூர், கோ-ஆப்டெக்ஸ் வளாகத்தில் கைத்தறி உப பொருட்கள் விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டது

8. எம்பிராய்டரி, துணி அச்சிடுதல், சிக்கன்காரி எம்பிராய்டரி, ஆரி எம்பிராய்டரி பயிற்சி மையங்கள் திறந்து வைக்கப்பட்டன

## 8. ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் ஆவணப்படுத்துதல்

### அ) தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்கக் கைத்தறி இரகங்களை மின்னணுமயமாக்கல்

பாரம்பரிய கைத்தறி இரகங்களை உற்பத்தி செய்வதிலும், அதனைச் சந்தைப்படுத்துவதிலும் தமிழ்நாடு நாட்டிலேயே முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

தமிழ்நாட்டின் அனைத்து பாரம்பரிய கைத்தறி இரகங்களின் உற்பத்தி செயல்முறையைப் பாதுகாக்க, முதற்கட்டமாக ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் புவிசார் குறியீடு பொருட்கள் (பதிவு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 1999–இன்கீழ் பதிவு செய்யப்பட்ட 10 கைத்தறி இரகங்கள் உட்பட தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க 53 கைத்தறி இரகங்களை மின்னணுமயமாக்க தமிழ்நாடு அரசால் முடிவு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

**ஆ) நெசவாளர் குறைதீர்க்கும் மையம்**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் கைத்தறி ஆணையரகத்தில் நெசவாளர் குறை தீர்க்கும் மையம் 23.03.2022 அன்று துவக்கி வைக்கப்பட்டது. தேசிய தகவலியல் மையத்தின் (NIC) மூலம் நெசவாளர் குறை தீர்க்கும் மையத்திற்கெனப் பிரத்தியேகமாக மனுக்கள் செயலாக்க முகப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இதனை https://gdp.tn.gov.in/dhl என்ற இணையதள

முகவரி மூலம் அணுகலாம். நெசவாளர்கள் தங்களது குறைகளை 1800 599 7637 என்ற இலவச எண்ணில் தொடர்பு கொண்டும் தெரிவிக்கலாம்.

கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்கள் தங்கள் இடத்திலிருந்து எந்த நேரத்திலும் இந்த இணையதளம் மற்றும் கட்டணமில்லா எண் மூலம் தங்கள் குறைகளைத் தெரிவிக்கலாம். நெசவாளர்களின் குறைகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வு காணப்படுகின்றன.

**இ) கைத்தறித் துறைக்கான தனி இணையதளம்**

அரசின் திட்டங்கள் மற்றும் சேவைகள் பற்றிய தகவல்கள் நெசவாளர்களுக்கு எளிதில் சென்றடைய வேண்டும். அதன்படி, இத்துறையின் திட்டங்கள், சேவைகள் மற்றும் அதன் நிருவாக கட்டமைப்புகள் நெசவாளர்களுக்கு எந்த நேரத்திலும் எங்கும் அணுகக்கூடியதாக இருக்கும் வகையில் கைத்தறித் துறையின் பிரத்தியேக இணையதளம்

https://tnhandlooms.tn.gov.in, 09.02.2024 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

## 9. துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள நிறுவனங்கள்

### 9.1 தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், (கோ–ஆப்டெக்ஸ்), சென்னை

தமிழ்நாட்டின் அனைத்து இல்லங்களிலும் பிரபலமாக விளங்கும் "கோ–ஆப்டெக்ஸ்", தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட் என்பதின் வணிக முத்திரைப் பெயராகும். கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் முதன்மை மாநில தலைமைக் கூட்டுறவு நிறுவனமாக 1935ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு தமிழ்நாடு முழுவதும் உள்ள கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காகவும், கைத்தறித் தொழிலினை மேம்படுத்துவதிலும், சிறந்த பங்களிப்பினை அளித்து வருகின்றது.

இந்தியாவின் மிகப் பெரிய மாநிலத் தலைமைக் கைத்தறிக் கூட்டுறவுச் சங்கமான கோ–ஆப்டெக்ஸ், தமிழ்நாடு முழுவதும் பரவியுள்ள நெசவாளர்கள் மற்றும் கைவினைக் கலைஞர்களின் ஈடுபாட்டுடன் 1114 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உற்பத்திச் செய்யப்படும் சிறந்த தயாரிப்புகளை "கோ–ஆப்டெக்ஸ்" என்ற வணிக முத்திரை மூலம் வணிகப்படுத்தும் முன்னணி நிறுவனமாகச் செயல்பட்டு வருகின்றது. பட்டு மற்றும் பருத்தி இரக வகைகளின் பாரம்பரிய மற்றும் நாகரிக சமகால வடிவமைப்புகளைக் கொண்டு சிறந்த கைத்தறி இரகங்களை வணிகப்படுத்தும் பெயராக கோ–ஆப்டெக்ஸ் மாறியுள்ளது.

பல்லாண்டுகளாக கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் என்ற பெயர் நாடு முழுவதும் புகழ் பெற்ற துணி வகைகளை விற்பனைச் செய்வதில் முக்கிய பெயர் பெற்று நிலைபெற்றுள்ளது. ஜெர்மனி, ஸ்பெயின், இத்தாலி, பிரான்ஸ், பெல்ஜியம், துபாய் மற்றும்

நெதர்லாந்து ஆகிய நாடுகளில் அதன் உலகளாவிய வணிகத்தை நிறுவ முயற்சித்து வருகிறது. கோ–ஆப்டெக்ஸின் வணிக சின்னமான, பலவண்ண வண்ணத்துப்பூச்சி, அதன் வாடிக்கையாளர்களுக்குத் தரமான மற்றும் நியாயமான வர்த்தக நடைமுறைக்கு ஒரு நம்பிக்கைக்குரிய அடையாளமாக மாறியுள்ளது. தமிழ்நாட்டின் வரலாற்று பாரம்பரியமிக்க கைத்தறி நெசவுத் தொழிலினை கோ–ஆப்டெக்ஸ் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. சிறப்பான கைத்தறி இரகங்களை உற்பத்தி செய்யும் தனித்திறன் கொண்ட நெசவாளர்களால் மட்டுமே இது சாத்தியமாகிறது. இன்று, கோ–ஆப்டெக்ஸ், தமிழ்நாடு நெசவாளர்களுக்குத் தொடர் வேலை வாய்ப்பை வழங்குவதன் மூலம் ஒரு சிறந்த சமூக நோக்குடன் தமிழ்நாட்டின் மிக உயர்ந்த கைத்தறிப் பராம்பரியத்தை பிரதிபலிக்கிறது.

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம், தீபாவளி, பொங்கல் போன்ற முக்கியப் பண்டிகைக் காலங்களில் புதிய

வடிவமைப்பு இரகங்களை வெளியிட்டு வாடிக்கையாளர்களின் மனங்களை எப்போதும் கவர்ந்து வருகிறது. கோ–ஆப்டெக்ஸின் அனைத்து கைத்தறித் தயாரிப்புகளும் அகில இந்திய அளவில் முக்கிய நகரங்கள் மற்றும் ஊர்களில் உள்ள சந்தை மையங்களில் அமைந்துள்ள 150 விற்பனை நிலையங்களின் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கோ–ஆப்டெக்ஸ், இளைய தலைமுறை வாடிக்கையாளர்களுக்குத் தேவையான வடிவமைப்புகளை உருவாக்கி அவர்களது தேவைகளை நிறைவேற்றுவதுடன், தேசிய ஆடை அலங்காரத் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் தேசிய வடிமைப்பு நிறுவனங்களைச் சேர்ந்த வடிவமைப்பாளர்களால் வடிவமைக்கப்பட்ட பாரம்பரிய பட்டு மற்றும் பருத்தி இரகங்களில் புதுமையான கருப்பொருள்கள் கொண்ட வடிவமைப்புகள் மற்றும் வண்ணங்களுடன் பல மதிப்பு கூட்டப்பட்ட இரகங்களை அறிமுகப்படுத்தி வருகிறது.

**1) கோ–ஆப்டெக்ஸின் நோக்கங்கள்**

கடந்த 90 ஆண்டுகளாகச் செயல்பட்டு வரும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் கீழ்க்காணும் நோக்கங்களை வரையறுத்துள்ளது:

1. கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர் வேலை வாய்ப்புகளை உருவாக்கி வழங்குதல்
2. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சந்தை ஆதரவிற்கு உறுதுணையாக இருந்து, கைத்தறி இரகங்களைப் பிரபலப்படுத்துதல்
3. வாடிக்கையாளர்களின் மாறிவரும் இரசனைக்கேற்ப பாரம்பரியம் மற்றும் புதுமையுடன் கூடிய புதிய இரகங்களை உருவாக்குதல்
4. கைத்தறித் தயாரிப்புகளை அங்கீகரிக்கும் வகையில் பல்வேறு புதுமையான திட்டங்களைச் செயல்படுத்துதல்

## 2) விற்பனை மற்றும் செயல்பாடு

கடந்த 2023–2024 ஆம் ஆண்டில் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் ரூ.215 கோடி மதிப்பிற்குச் சில்லரை விற்பனை செய்துள்ளது. இது முந்தைய 2022–2023 ஆம் ஆண்டு நடைபெற்ற ரூ.201 கோடி மதிப்பிலான விற்பனையை விட ரூ.14 கோடி அதிகமாகும். ஆண்டு முழுவதும் தொடர் கொள்முதல் செய்ததன் மூலமாகவும், புதிய விற்பனை நிலையங்கள் தொடங்கப்பட்டதாலும், விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தி அதன் பொலிவை மேம்படுத்தியதாலும், புதிய வடிவமைப்புகளுடன் கூடிய கைத்தறித் துணிகளை வடிவமைப்பாளர்களைக் கொண்டு புதிய இரகங்களை அறிமுகப்படுத்தியதாலும் கோ–ஆப்டெக்ஸில் உள்ள பணியாளர்களுக்குச் செயல்திறன் மேம்பாடு மற்றும் ஊக்குவித்தல் பயிற்சியளித்தல் மூலமாகவும் இந்த விற்பனையை கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் எட்டியுள்ளது.

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் முகநூல் மற்றும் பல்வேறு சமூக வலைதளங்களைப் பயன்படுத்தி விளம்பரம் செய்ததன் மூலம் முதன்முறையாகக் கைத்தறித் துணிகளை வாங்கும் இளைய தலைமுறை வாடிக்கையாளர்களைப் பெருமளவில் ஈர்த்துள்ளது.

**3) இணையவழி மின் வணிக விற்பனை**

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் www.cooptex.gov.in என்ற வலைதளத்தின் மூலம் வாடிக்கையாளர்கள் இணைய வழி முறையில் வாங்குவதற்கு வழிவகை செய்துள்ளது. இந்தியாவிலேயே முதன் முதலில் தன்னுடைய சொந்த வலைதளத்தில் மின் வணிகத்தை வெற்றிகரமாக செயல்படுத்தும் முதன்மை நெசவாளர் கூட்டுறவுச் சங்கமாகக் கோ–ஆப்டெக்ஸ் திகழ்கிறது. மின் வணிக விற்பனை தொடங்கியது முதல் இதுவரை ரூ.8.97 கோடி மதிப்பிற்கு விற்பனை நடைபெற்றுள்ளது.

**4) தேசிய கைத்தறிக் கண்காட்சி 2023**

தேசிய கைத்தறிக் கண்காட்சி 2023 சென்னையிலுள்ள கோ–ஆப்டெக்ஸ் வளாகத்தில் 29.03.2023 முதல் 23.04.2023 வரை நடைபெற்றது. இக்கண்காட்சியில் 115க்கும் மேற்பட்ட விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு தமிழ்நாட்டைச் சேர்ந்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் 10 வெளி மாநிலங்களைச் சேர்ந்த கைத்தறிச் சங்கங்கள் பங்கேற்று ரூ.3.76 கோடி மதிப்பிலான துணி இரகங்களை விற்பனை செய்துள்ளன.

5. **வாடிக்கையாளர்களைக் கவரும் வகையில் செயல்படுத்திவரும் விற்பனை முன்னேற்றத் திட்டங்கள்**

**அ. கோ–ஆப்டெக்ஸ் மாதாந்திர சேமிப்புத் திட்டம்**

மாதாந்திர சேமிப்புத் திட்டம் மக்களின் மனதில் வரவேற்பைப் பெற்ற திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் வாடிக்கையாளர்கள், குறைந்தபட்சம் ரூ.300/– முதல் மாதத் தவணையாகச் செலுத்தலாம்.

வாடிக்கையாளர்கள் 11 தவணைகள் செலுத்திய பிறகு 12வது தவணை தொகையைக் கோ–ஆப்டெக்ஸ் ஊக்கத் தொகையாகச் செலுத்தும். இத்திட்டத்தில் வாடிக்கையாளர்கள் 48 சதவிகிதம் வரை கூடுதல் பலன் பெறுகின்றனர். இத்திட்டம் புதிய வாடிக்கையாளர்களை அதிகரிக்கவும், கோ–ஆப்டெக்ஸிற்கு நிலையான நிதி வரவை மேம்படுத்தும் வகையிலும் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் 2023–2024ஆம் ஆண்டில் ரூ.10.75 கோடி மதிப்பிற்கு விற்பனை நடைபெற்றுள்ளது.

**ஆ, இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம் திட்டம்**

கடந்த 2011–2012 ஆம் ஆண்டில் இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம் என்ற புதுமையானத் திட்டம் கோ–ஆப்டெக்ஸினால் அறிமுகப்படுத்தப்பட்டது. வாடிக்கையாளர்களின் தொடர் ஆதரவின் காரணமாக இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2023–2024 ஆம் ஆண்டில் ரூ.25.82 கோடி மதிப்பிற்கு இத்திட்டத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**இ. கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கைத்தறி இரகங்களைப் பிரபலப்படுத்தும் திட்டம்**

தமிழ்நாட்டில் உள்ள கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவ, மாணவிகளிடையே தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் கைத்தறி இரகங்களின் தனித்தன்மை, கலைநுணுக்கம், பாரம்பரியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அதன் விற்பனையினை ஊக்குவிக்கவும் கைத்தறி இரகங்களைப் பிரபலப்படுத்தும் திட்டம் 2023–2024 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டது. அதன் மூலம் 142 கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் ரூ.245.04 இலட்சம் மதிப்பிலான கைத்தறித் துணிகள் விற்பனைச் செய்யப்பட்டுள்ளன.

## 6. கோ–ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனல்

கோ–ஆப்டெக்ஸ் ஏற்றுமதி பிரிவானது "கோ–ஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல்" என்று அழைக்கப்படுகிறது. இப்பிரிவானது பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு விற்பனையினை அதிகரிக்க செயல்பட்டு வருகிறது. ஜெர்மனி, பெல்ஜியம், ஸ்பெயின், இத்தாலி, பிரான்சு, சுவிட்சர்லாந்து, ஐக்கிய அரபு அமீரகம், நெதர்லாந்து மற்றும் இதர நாடுகளுக்கு கைத்தறி இரகங்களான போர்வைகள், மேஜை விரிப்புகள், சமையலறைத் துணி வகைகள், குளியலறைத் துணி இரகங்கள், கலம்காரி துப்பட்டாக்கள், நாகரிக பைகள், பட்டுச் சேலைகள் போன்றவற்றை கோ–ஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல் ஏற்றுமதி செய்து வருகிறது.

**சர்வதேச கண்காட்சிகளில் கோ–ஆப்டெக்ஸ்**

கைத்தறிப் பொருட்களைச் சர்வதேச சந்தைகளில் பிரபலப்படுத்துவதற்காக 2023–2024 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் சர்வதேச ஜவுளிக்

கண்காட்சிகளில் கோ–ஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல் பங்கேற்றது.

| வ. எண் | கண்காட்சி | காலம் |
|---|---|---|
| 1. | குளோபல் சோர்ஸிங் கண்காட்சி, மெல்பர்ன், ஆஸ்திரேலியா | 21 – 23 நவம்பர் 2023 |
| 2. | சர்வதேச ஆடை மற்றும் ஜவுளிக் கண்காட்சி, துபாய், ஐக்கிய அரபு அமீரகம் | 27 – 29 நவம்பர் 2023 |
| 3. | ஹெய்ம் டெக்ஸ்டைல்ஸ், ஜவுளிக் கண்காட்சி, பிராங்பர்ட், ஜெர்மனி | 9 – 12 ஜனவரி 2024 |
| 4. | பாரத் டெக்ஸ் 2024, புதுதில்லி, இந்தியா | 26 – 29 பிப்ரவரி 2024 |

மேற்கண்ட சர்வதேச கண்காட்சிகளில் பங்கேற்று ஜெர்மனி, ஸ்பெயின், பெல்ஜியம், நெதர்லாந்து ஆகிய நாடுகளில் சுமார் ரூ.100 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை ஆணைகளைப் பெற்று செயல்படுத்தி வருகிறது. மேலும், புதிய வியாபார வாய்ப்பாக ஐக்கிய அரபு அமீரகம் நாட்டிற்குப் பட்டுப்

புடவைகள், லெஹன்கா போன்றவற்றை ஏற்றுமதி செய்ய ஆணைகள் பெறப்பட்டுள்ளன. இது போன்ற சர்வதேச கண்காட்சிகளில் தொடர்ந்து பங்கேற்பதன் மூலம் உலக சந்தையில் கோ–ஆப்டெக்ஸின் எதிர்கால விற்பனை வாய்ப்புகள் உறுதிப்படுத்தப்படுகின்றன.

**7. அரசு திட்டங்களில் கோ–ஆப்டெக்ஸின் பங்கு**

**அ. வேட்டி சேலை வழங்கும் திட்டம், பொங்கல் 2024**

பொங்கல் 2024 வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் மூன்று முகமை நிறுவனங்களில் ஒன்றாக கோ–ஆப்டெக்ஸ் செயல்பட்டு 89.84 இலட்சம் எண்ணிக்கையிலான சேலைகள் மற்றும் 92.53 இலட்சம் எண்ணிக்கையிலான வேட்டிகளை தமிழ்நாட்டிலுள்ள பல வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு விநியோகம் செய்துள்ளது.

**ஆ. பள்ளிச் சீருடைத் துணிகள் வழங்குதல்**

பள்ளிச் சிறார்களுக்கு, சீருடைத் துணி வழங்கும் திட்டத்தின் கீழ் மூன்று முகமை நிறுவனங்களில் ஒன்றாக கோ–ஆப்டெக்ஸ் செயல்பட்டு வருகிறது. மாணவர்கள் கால்சட்டை துணி இரகங்கள் 56.01 இலட்சம் மீட்டர், மாணவிகள் கால்சட்டை துணி இரகங்கள் 91.96 இலட்சம் மீட்டர் மற்றும் சட்டைத் துணி இரகங்கள் 119.31 இலட்சம் மீட்டர் சமூக நலத்துறைக்கு 2023–2024 ஆண்டில் கோ–ஆப்டெக்ஸ் விநியோகம் செய்துள்ளது.

**இ. முதியோர் ஓய்வூதியத் திட்டப் பயனாளிகளுக்கு வேட்டி, சேலைகள் வழங்கும் திட்டம்**

வருவாய் துறையின்கீழ் செயல்படுத்தப்படும் முதியோர் ஓய்வூதியத் திட்டப் பயனாளிகளுக்கு வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் தனி முகமை நிறுவனமாகக் கோ–ஆப்டெக்ஸ் செயல்படுகிறது. தீபாவளி 2023–இல் 25.47 இலட்சம் சேலைகளும், 9.94 இலட்சம் வேட்டிகளும், பொங்கல் 2024–இல்

24.08 இலட்சம் சேலைகளும், 9.34 இலட்சம் வேட்டிகளும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும் விநியோகம் செய்யப்பட்டன.

**8. புதிய வடிவமைப்புகள் / இரகங்கள் அபிவிருத்தி**

**அ. ஆயத்த "ஸ்லிம் ஃபிட்" சட்டைகள்**

கோ–ஆப்டெக்ஸ் விற்பனையை அதிகரிப்பதில் ஆயத்த சட்டைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தனியார் விற்பனை நிலையங்களுடன் ஒப்பிடும் போது கோ–ஆப்டெக்ஸின் ஆயத்த சட்டைகள் வாங்க உகந்த விலை மற்றும் உயர்ந்த தரத்தில் உள்ளதால் வாடிக்கையாளர்களால் பெரிதும் விரும்பப்படுகின்றன.

எனவே, இளைய தலைமுறையினைக் கவரும் வகையில் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் "ஸ்லிம் ஃபிட்" ஆயத்த சட்டைகள் பல்வேறு நூல் மற்றும் நெசவு தரத்தில் அதாவது பருத்தி ஸ்லப் சட்டைகள், பாலியஸ்டர் கலப்பு சாம்ப்ரே துணிகள், பருத்தி

பாலியஸ்டர் சட்டைகள், பருத்தி டுவில் சட்டைகள் என வாடிக்கையாளர்கள் விரும்பும் விலையில் அறிமுகப்படுத்தப்பட்டு இளைய தலைமுறை வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தியுள்ளது. இனிவரும் காலங்களில் ஸ்லிம் ஃபிட் சட்டைகளின் விற்பனை கோ–ஆப்டெக்ஸ் சட்டை விற்பனையினை கணிசமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ஆ. கைத்தறி நாகரிக பைகள்**

கோ–ஆப்டெக்ஸ் வாடிக்கையாளர்களைக் கவரும் வகையிலும், வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், அதன் மூலம் விற்பனையைப் பெருக்கவும், நாடு முழுவதும் உள்ள முக்கிய விற்பனை நிலையங்களில் பல்வேறு வடிவம் மற்றும் அளவுகளில் அச்சிடப்பட்ட நாகரிக பைகளை விற்பனைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

**இ. உதய்பூர் அச்சிட்ட போர்வை இரகங்கள்**

தனித்துவமான பாரம்பரியமிக்க புதிய வடிவமைப்பில் உதய்பூர் அச்சிட்ட போர்வை இரகங்கள் பல்வேறு அளவுகளில் 2023ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சிறந்த வடிவமைப்பு மற்றும் புதிய வண்ணக் கலவைகளினால் இந்த இரக போர்வைகள் வாடிக்கையாளர்களைக் கணிசமாகக் கவர்ந்துள்ளன.

**ஈ. ஆயத்த சல்வார் இரகங்கள்**

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் இளம் தலைமுறையினரைக் கவரும் வகையில் கண்கவரும் வடிவங்கள் மற்றும் வண்ணங்களில் தூய பருத்தி நூல் தரத்தில் ஆயத்த சல்வார் இரகங்களைப் பல்வேறு அளவுகளில் உற்பத்தி செய்து விற்பனைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

**9. கோ–ஆப்டெக்ஸின் புதிய விற்பனை நிலையங்கள்**

கோ–ஆப்டெக்ஸ் விற்பனையை அதிகரிக்கும் வகையில் திருநெல்வேலி மற்றும் ஓசூர் ஆகிய

இடங்களில் ரூ.592 இலட்சம் மதிப்பில் புதிய விற்பனை நிலையங்கள் கட்டப்பட்டு முழுவதும் நவீனமயமாக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 22.08.2023 அன்று துவக்கிவைக்கப்பட்டது.

**கைத்தறி உப பொருட்கள் விற்பனை நிலையம்**

சென்னை எழும்பூரில் உள்ள கோ–ஆப்டெக்ஸ் கைத்தறி வளாகத்தில் கைத்தறி உப பொருட்கள் விற்பனை நிலையம் 07.08.2023 அன்று மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்த விற்பனை நிலையத்தில் கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்த ஸ்டோல்ஸ், துப்பட்டாக்கள், பைகள், வீட்டு உபயோக கைத்தறிப் பொருட்கள் மற்றும் தோடா எம்பராய்டரி பொருட்கள் என கைத்தறி உபபொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

**நவீனப்படுத்தப்பட்ட விற்பனை நிலையங்கள்**

2023–2024ஆம் ஆண்டில் கீழ்க்காணும் மூன்று விற்பனை நிலையங்கள் ரூ.361.94 இலட்சம் மதிப்பில் நவீனப்படுத்தப்பட்டு மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

1. தங்கம் பட்டு மாளிகை, விற்பனை நிலையம், சேலம்.
2. பாலமுருகன் விற்பனை நிலையம், கோயம்புத்தூர்
3. வசந்தம் விற்பனை நிலையம், ஈரோடு

**10. கோ–ஆப்டெக்ஸின் புதிய முயற்சிகள்**

**அ. மெய்நிகர் உடை ஒத்திகை அறை**

சென்னை, எழும்பூரிலுள்ள கோ–ஆப்டெக்ஸ் கைத்தறி விற்பனை வளாகத்தில் மெய்நிகர் உடை ஒத்திகை அறை நிறுவப்பட்டு, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால்

07.08.2023 அன்று திறந்து வைக்கப்பட்டது. இதன் மூலம் வாடிக்கையாளர்கள் விரும்பும் கைத்தறி இரகங்களை தாங்கள் அணிந்தால் எவ்வாறு இருக்கும் என மெய்நிகர் காட்சி மூலம் அறிய வசதி செய்யப்பட்டுள்ளது. இதனால் உடை மாற்றும் அறை அமைப்பதற்கான தேவை குறைந்துள்ளதோடு, துணிகள் சேதமடைவதும் பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது. மெய்நிகர் ஆடை ஒத்திகை அறையின் வாயிலாக குறைந்த நேரத்தில் அதிக எண்ணிக்கையிலான புடவைகளை மகளிர் வாடிக்கையாளர்களுக்குக் காட்சிப்படுத்த இயலும். மேலும், வாடிக்கையாளர்கள் இந்த புகைப்படங்களை சமூக வலைத்தளப் பக்கங்களிலும் பகிரலாம்.

### ஆ. கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் சிறிய மேசைத் தறிகள் நிறுவுதல்

இளைய தலைமுறையினர், மாணவர்கள் கோ–ஆப்டெக்ஸ் வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்குக் கைத்தறி நெசவு குறித்த

அனுபவத்தை வழங்குவதற்காக கோ–ஆப்டெக்ஸின் விற்பனை நிலையங்களில் 20 சிறிய மேசைத் தறிகள் நிறுவப்பட்டுள்ளன. இதன் மூலம் கைத்தறி நெசவில் உள்ள நுணுக்கங்களை நேரடியாக உணர்ந்து விரும்பிய மாதிரிகளை உருவாக்கிக்கொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**இ. கோ–ஆப்டெக்ஸின் பணியாளர்களுக்கு செயல் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல்**

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் தனது விற்பனைப் பிரிவு, நிருவாகப் பிரிவு மற்றும் தொழில்நுட்பப் பிரிவு ஊழியர்களின் செயல்திறனை அதிகரிக்கும் வகையில் செயல்திறன் மற்றும் பணி மேம்பாட்டுப் பயிற்சி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த பயிற்சியில் சந்தைப்படுத்தும் உத்திகள், நிருவாக நடைமுறைகள் மற்றும் ஒவ்வொரு துறைக்கும் தொடர்புடைய பல்வேறு அம்சங்களைக் கொண்டு சென்னை நடேசன் கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தின் மூலம் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டது. இந்தப் பயிற்சி 2024

மார்ச் மாதத்தில் உதகமண்டலம், ஐதராபாத் மற்றும் சென்னையில் ஐந்து குழுக்களாக நடத்தப்பட்டது. இந்தப் பயிற்சியின் மூலம் கோ–ஆப்டெக்ஸ் பணியாளர்களின் செயல்பாடு மேம்படுத்தப்பட்டு நேர்மறை பணி முன்னேற்றத்திற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**ஈ. அனைத்து விற்பனை நிலையங்களிலும் இணையவழி விற்பனை**

வாடிக்கையாளர்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களை மின்வணிகம் மூலம் வாங்குவது சமீப ஆண்டுகளில் மிகவும் அதிகரித்து வருகின்றது. வீட்டிலிருந்தே தேர்வு செய்து வாங்கும் வசதி, ஏராளமான பொருட்களைக் காட்சிப்படுத்துதல் மற்றும் சரியான விலை போன்ற காரணங்களால் மின் வணிக விற்பனை இக்காலத்தில் அதிகரித்து வருகின்றது.

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் தனது விற்பனையை அதிகரிக்க மார்ச் 2024 முதல் இந்தியா முழுவதும் உள்ள தனது 150 விற்பனை நிலையங்கள்

மூலம் மின் வணிக விற்பனையைத் தனது வலைதளமான www.cooptex.gov.in வழியாக தொடங்கியுள்ளது. இந்த முயற்சியின் மூலம் தனது விற்பனை நிலையச் சந்தை வாய்ப்புகளை உயர்த்துவதோடு அல்லாமல் புதிய மின்வணிகச் சந்தை வாய்ப்புகளையும் கொண்டு வந்துள்ளது. கோ–ஆப்டெக்ஸ் இணையதளத்தில் சுமார் 5000 இரகங்கள் விற்பனைக்குக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

**9.2 தமிழ்நாடு சரிகை ஆலை, காஞ்சிபுரம்**

தமிழ்நாடு சரிகை ஆலை, பட்டுக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் சரிகையினை உற்பத்திச் செய்யும் நோக்கத்துடன் 1971 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 1974–ஆம் ஆண்டு முதல் வணிக ரீதியிலான உற்பத்தியை தொடங்கியது. இந்நிறுவனம் ISO 9001:2015 தரச்சான்று பெற்ற மாநில அரசு சார்ந்த ஒரு பொதுத்துறை நிறுவனமாகும். தமிழ்நாடு சரிகை

ஆலையின் ISO 9001:2015 தரச்சான்றுக்கான காலமுறை தணிக்கை அக்டோபர் 2023–இல் நடைபெற்றுள்ளது.

இந்நிறுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் 60 விழுக்காடு சுத்த சரிகையினை உற்பத்தி செய்து நியாயமான விலையில் விற்பனை செய்து வருகிறது. இந்நிறுவனம், காஞ்சிபுரத்தில் நிறுவியுள்ள "ஒளிரும் ஊடுகதிர் பகுப்பாய்வு" கருவி (X-Ray Fluorescence Analyser) மூலம் சரிகை மற்றும் சரிகையைக் கொண்டு தயாரிக்கப்பட்ட துணிகள் போன்றவற்றிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாதவகையில் சரிகையின் தரத்தை ஆய்வு செய்யும் பணியையும் மேற்கொள்கிறது.

இந்நிறுவனம் சரிகை உற்பத்திக்குத் தேவைப்படும் மூலப்பொருட்களான வெள்ளிப் பட்டிழையினையும், தங்கத்தையும் கொள்முதல் செய்து சரிகை உற்பத்தி செய்துவருகிறது.

தமிழ்நாடு சரிகை ஆலை நிறுவனத்தில் அரசு பங்கு முதலீடு ரூ.34.40 இலட்சம் ஆகும். இந்நிறுவனம் ஈட்டிய இலாபத்தில் 2023–2024 வரை ரூ.309.04 இலட்சத்தை ஈவுத்தொகையாக அரசுக்கு செலுத்தியுள்ளது.

**தமிழ்நாடு சரிகை ஆலையின் கடந்த மூன்று ஆண்டுகள் செயல்பாடுகள்**

| ஆண்டு | உற்பத்தி | உற்பத்தி மதிப்பு | விற்பனை | விற்பனை மதிப்பு | இலாபம் (வரிக்கு முன்) |
|---|---|---|---|---|---|
| | மார்க்குகளில் | ரூ. இலட்சத்தில் | மார்க்குகளில் | ரூ. இலட்சத்தில் | |
| 2021–2022 | 22,386 | 3490.79 | 24,340 | 4,049 | 177.49 |
| 2022–2023 | 28,995 | 4601.95 | 28,578 | 4,859 | 164.42 |
| 2023–2024 | 22,926 | 4036.69 | 22,028 | 4,124 | 147.00* |

* (உத்தேசமாக)

தங்கமூலாம் பூச்சு பிரிவில் பயன்படுத்தப்படும் இரசாயனங்களுக்கு சூரத் விற்பனையாளர்களை நம்பியிருக்கும் நிலைமையை தவிர்க்கும் பொருட்டு, சரிகையின் தரம் மற்றும் நிறத்தினை மேம்படுத்த சென்னை அண்ணா பல்கலைக்கழக தொழில்நுட்ப

வல்லுநர்கள் துணையுடன் ஆலையிலேயே இரசாயனம் தயாரித்து வணிகரீதியான உபயோகத்திற்கு பயன்படுத்த திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சரிகை ஆலையின் தொழிற்சாலை மற்றும் அலுவலகக் கட்டடமானது கைத்தறி ஆதரவுத் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட ரூ.1.49 கோடியில் புதுப்பிக்கப்பட்டு 29.02.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது.

## 2024–2025 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்

- கோயம்புத்தூர் குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரியால் உருவாக்கப்பட்ட சரிகை இழை உறுதி சோதனை கருவி ரூ.2.00 இலட்சம் செலவில் நிறுவப்படும்
- சரிகை ஒரே சீராக தங்க மூலாம் பூச உதவும் வகையில் தங்க முலாம் பூச்சு தானியங்கி தெளிப்பான் அறிமுகப்படுத்தப்படும்

- இறுதி முறுக்கேற்றும் பிரிவில் உற்பத்தி தொகுப்பின் நீளத்தைத் துல்லியமாக அளவிட, நீள உணர் கருவி அமைக்கப்படும்

## 9.3 தமிழ்நாடு கூட்டுறவுத் துணிநூல் பதனிடும் ஆலை, ஈரோடு

தமிழ்நாடு கூட்டுறவுத் துணிநூல் பதனிடும் ஆலை 06.07.1973–இல் பதிவு செய்யப்பட்டு 05.09.1973 முதல் செயல்பட்டு வருகிறது. இவ்வாலை துணி வெளுத்தல், சாயமிடல், மெருகேற்றல், அச்சிடல் போன்ற பல்வேறு பதனிடும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வாலை மாதம் ஒன்றிற்கு 32 இலட்சம் மீட்டர் துணிகளைப் பதனிடும் திறன் பெற்றுள்ளது. தமிழ்நாடு அரசு சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் வழங்கும் சீருடைத் துணிகளையும் கேரள அரசின் சீருடைத் திட்டத் துணிகளையும் பதனிடும் பணிகளைச் செய்து வருகிறது. மேலும் கோ–ஆப்டெக்ஸ், தேசிய பஞ்சாலைக் கழகம், கோயம்புத்தூர், சிறைச்சாலைத்

துறை, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், கேரள மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், கேரள கைத்தறி வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாட்டின் தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகிய நிறுவனங்களின் துணிகளைப் பதனிடும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

**சாயக்கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம்**

பூஜ்ஜிய கழிவு நீர் வெளியேற்றத்தை (ZLD) அடைவதற்காக ஆலையில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், எதிர் சவ்வூடு பரவல் அமைப்பு மற்றும் கழிவு வெளியேற்ற மேலாண்மை அமைப்பு அமைக்கப்பட்டு, ஒரு நாளைக்கு 5 இலட்சம் லிட்டர் கழிவு நீரினைச் சுத்திகரிக்கும் திறனை பெற்றுள்ளது.

தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் விதிமுறைகளைப் பின்பற்றி, பூஜ்ஜிய கழிவு நீர் வெளியேற்றும் அமைப்பின் வாயிலாக துணிகள் தரத்துடன் பதப்படுத்தப்படுகின்றன. தமிழ்நாடு

மாசுக்கட்டுப்பாடு வாரிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி சூரிய ஆவியாக்கல் முறைக்கு பதிலாக, தற்போது கட்டாய சுழற்சி ஆவியாக்கல் (FCE) மற்றும் கிளர்ந்தெழும் மெல்லிய பட உலர்த்தி (ATFD) ஆகிய இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இவ்வாலை, 2023-2024 ஆம் ஆண்டில் 169.40 இலட்சம் மீட்டர் துணிகளைப் பதனிட்டு ரூ.36.08 கோடி அளவிற்கு வணிகம் மேற்கொண்டு ரூ.7.30 கோடி உத்தேச நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

**ஸ்காட்ச் விருது (SKOTCH Award)**

தமிழ்நாடு கூட்டுறவுத் துணிநூல் பதனிடும் ஆலையானது அதன் உற்பத்தி அலகுகள் மற்றும் தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்தியுள்ளதன் மூலம் நிதி நிலையினை மேம்படுத்தி அதன் முந்தைய ஆண்டுகளின் குவிந்த நட்டத் தொகை ரூ.16.40 கோடியிலிருந்து மீண்டு நிகர லாபம் ஈட்டியுள்ளது. நிதி வளர்ச்சி மற்றும் சமூகப்

பொறுப்புக்கான இம்மாற்றத்திற்காக, தமிழ்நாடு கூட்டுறவுத் துணிநூல் பதனிடும் ஆலையானது 2023 ஆம் ஆண்டில் ஸ்காட்ச் (SKOTCH) விருதில் தங்கம் வென்றது.

**ஸ்டென்டர் இயந்திரத்தை நிறுவுதல்**

ஆலையில் இதற்கு முன்பாக இரண்டு ஸ்டென்டர் இயந்திரங்கள் நிறுவப்பட்டன. ஒரு ஸ்டென்டர் இயந்திரம் காடாத் துணியை வெப்பமாக்கவும் மற்றொரு இயந்திரம் பதப்படுத்தப்பட்டத் துணியின் சீராக்க வேலைகளுக்கும் பயன்படுத்தப்பட்டது. ஒரு நாள் சீராக்கும் திறன் காரணமாக ஒரு நாளைக்கு 80,000 மீட்டர் துணி மட்டுமே பதப்படுத்தப்பட்டது. அதேசமயம் இரண்டு மெர்சரைசர் இயந்திரம் மற்றும் ஜிக்கர் இயந்திரங்களில் ஒரு நாளைக்கு 1,20,000 மீட்டர் துணிகள் பதப்படுத்த இயலுகிறது.

எனவே, தினசரி செயலாக்கத் திறனை 1,20,000 மீட்டராக அதிகரிக்க வேண்டிய தேவை எழுந்ததால்

1600 மிமீ அகல வேலைத் திறன் கொண்ட புதிய ஸ்டென்டர் இயந்திரம் மற்றும் ஊடை நேராக்கி இயந்திரம், ஆலைகளின் சொந்த நிதி ரூ.1,53,40,000/- செலவில் நிறுவப்பட்டு 24.07.2023 முதல் இயக்கப்பட்டு வருகிறது. புதிய ஸ்டெண்டர் இயந்திரத்தை நிறுவியதன் மூலம் ஆலையின் தினசரி உற்பத்தி திறன் 80,000 மீட்டரிலிருந்து 1,20,000 மீட்டராக அதிகரித்து, பதனிடும் கட்டணங்கள் மூலம் வருவாய் அதிகரித்து அதன் மூலம் நிகர இலாபம் அதிகரித்து வருகிறது. புதிதாக நிறுவப்பட்டுள்ள ஸ்டென்டர் இயந்திரம் மின்னணுவினால் தானாக இயங்கும் இயந்திரமாகும். இதன் தானியங்கி உணர்திறன் ஊடை நேராக்கி இறுதியாக கிடைக்கும் ஆடைகளில் ஏற்படும் வளைவு விளைவுகளை ஏற்படுத்துவதில்லை.

**2024-2025 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்**

- ஆலையின் சொந்த நிதியில் இருந்து ரூ.60.00 இலட்சம் மதிப்பில் இயந்திர அரங்குகள்

மற்றும் மேடைகளை நவீனப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

- சீருடைத் திட்டத்தின் கீழ் 201.50 இலட்சம் மீட்டர் துணிகளைப் பதப்படுத்துவதன் மூலம் உத்தேசமாக ரூ.5 கோடி வரை நிகர லாபம் ஈட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

## 9.4 தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், சென்னை

தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் ஒரு மாநில பொதுத் துறை நிறுவனமாகும், இது 1964 ஆம் ஆண்டில் அதன் செயல்பாட்டைத் தொடங்கியது, கூட்டுறவு அமைப்பின் கீழ் இல்லாத நெசவாளர்களுக்கு நியாயமான வட்டி விகிதத்தில் நடைமுறை மூலதன உதவியை வழங்கி, சேவை செய்யும் நோக்கத்துடன் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் தொடங்கப்பட்டது.

தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் பங்கு மூலதனம் பின்வருமாறு:-

(ரூ. இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| அ) பங்கு மூலதனம் | | |
| (i) | அரசு | 267.00 |
| (ii) | உறுப்பினர்கள் | 162.24 |
| மொத்தம் பங்கு மூலதனம் | | 429.24 |
| ஆ) தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட கடன் | | 494.15 |
| மொத்தம் (அ + ஆ) | | 923.39 |

தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகமானது கூடுதல் வருவாய் ஈட்டும் பொருட்டு பின்வரும் திட்டங்களுக்கு முகமை / செயலாக்க நிறுவனமாக நியமனம் செய்யப்பட்டுள்ளது.

1) விருதுநகர் மெகா கைத்தறி குழுமம்

2) திருச்சி மெகா கைத்தறி குழுமம்

3) தேசிய / மாநில அளவிலான கைத்தறிக் கண்காட்சிகளை நடத்துதல்

4) சந்தைப்படுத்துதல் ஊக்கத் திட்டம்

5) கைத்தறி ஆதரவுத் திட்டம்

6) லூம்வேர்ல்டு என்ற வணிக சின்னத்தின் கீழ் கைத்தறிப் பொருட்களை மின்வணிகம் மூலம் சந்தைப்படுத்துதல்

7) வேட்டி சேலை வழங்கும் திட்டம்

8) சீருடைத் துணிகள் விநியோகத் திட்டம்

**லூம்வேர்ல்டு**

பட்டுச் சேலைகள், மென்மையான பட்டுச் சேலைகள், பருத்திச் சேலைகள், கோரா பருத்திச் சேலைகள், பட்டு வேட்டிகள், பருத்தி வேட்டிகள், பருத்தி லுங்கிகள் மற்றும் வீட்டு உபயோகத் துணி வகைகள் உள்ளிட்ட தரமான கைத்தறிப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒரு பொதுவான பெயரை வழங்குவதற்கும், சந்தைப்படுத்துதலை எளிமையாக்கவும் 2000 ஆம் ஆண்டு 'லூம்வேர்ல்டு' தொடங்கப்பட்டது.

தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லூம்வேர்ல்டு அமைப்பினை மின் வணிகம் மூலம் பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் www.loomworld.in என்ற இணைய தளத்தினை 30.12.2015 அன்று தொடங்கியது. லூம்வேர்ல்டின் மின் வணிக

இணையதளம் மூலம் கைத்தறிப் பொருட்கள் விற்பனைச் செய்யப்பட்டு வருகிறது.

2022–2023 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் நிகர இலாபம் ரூ.12.16 இலட்சம் ஆகும். 2023–2024 ஆம் ஆண்டில் உத்தேச நிகர இலாபம் ரூ.15.96 இலட்சமாக உள்ளது.

**2024–2025 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்**

- ஒன்றிய அரசின் மூலப்பொருள் விநியோகத் திட்டத்தின் கீழ் தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூல் கொள்முதல் செய்து வழங்குவதற்கான முகமை நிறுவனமாகச் செயல்பட திட்டமிடப்பட்டுள்ளது.
- ரூ.15 கோடி அளவுக்கு இந்திய இரயில்வே துறையிடமிருந்து துணிகள் விநியோக ஆணைகள் பெற திட்டமிடப்பட்டுள்ளது.
- உறுப்பினர்களிடமிருந்து நிலுவையிலுள்ள கடன்களை வசூலிக்கும் நடவடிக்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

## 10. நீடித்த வளர்ச்சி இலக்குகள், 2030

2015 ஆம் ஆண்டு நீடித்த வளர்ச்சி இலக்குகள் பற்றிய மாநாட்டில் 17 உலகளாவிய இலக்குகள் மற்றும் 169 குறிக்கோள்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

கைத்தறி, கைத்திறன். துணிநூல் மற்றும் கதர்த் துறையின் நீடித்த வளர்ச்சி இலக்குகள்:

பின்வரும் நீடித்த வளர்ச்சி இலக்குகளை தமிழ்நாட்டில் செயல்படுத்த கைத்தறித் துறையுடன் நேரடியாக / மறைமுகமாக இணைக்கப்பட்டுள்ளன.

9.1 பொருளாதார மேம்பாடு மற்றும் மனித நல்வாழ்வை ஆதரிப்பதற்காக, அனைவருக்கும் மலிவான மற்றும் சமமான அணுகலை மையமாகக் கொண்டு, பிராந்திய மற்றும் எல்லைக்குட்பட்ட உள்கட்டமைப்பு உள்ளிட்ட தரம், நம்பகமான, நிலையான மற்றும் நெகிழ்ச்சியான உள்கட்டமைப்பை உருவாக்குதல்

9.b வளரும் நாடுகளில் உள்நாட்டு தொழில்நுட்ப மேம்பாடு, ஆராய்ச்சி மற்றும் புதிய முயற்சிகளை

ஆதரித்தல், தொழிலியல் பரவலாக்கம் மற்றும் பொருட்களின் மதிப்புக் கூட்டல் ஆகியவற்றிற்கு சாதகமான கொள்கைச் சூழலை உறுதி செய்தல்

நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைய துறையால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் பின்வருமாறு:

**இலக்கு எண்.9.1:–**

அ. பேரறிஞர் அண்ணா கைத்தறிப் பட்டுப் பூங்கா காஞ்சிபுரம் மாவட்டம், கீழ்கதிர்பூர் கிராமத்தில் 75 ஏக்கர் பரப்பளவில் ரூ.82.56 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கைத்தறி நெசவாளர்கள், வடிவமைப்பாளர்கள், சாய தொழிலாளர்கள் மற்றும் கைத்தறி மதிப்புச் சங்கிலியில் உள்ள பிற தொழிலாளர்கள் என நேரடியாக மற்றும் மறைமுக 18,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

ஆ. 1) விருதுநகர் மாவட்டம் இராமச்சந்திராபுரம், 2) மதுரை மாவட்டம் ப்பி. தொட்டியப்பட்டி, 3) சிவகங்கை மாவட்டம் காரைக்குடி, 4) விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை, 5) கரூர், 6) அரியலூர் மாவட்டம் உட்கோட்டை மற்றும் 7) தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் ஆகிய பகுதிகளில் கைத்தறி குழும வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சாயச்சாலைகள் நிறுவப்பட்டுள்ளன.

இ. தமிழ்நாட்டில் சிறுமுகை (கோயம்புத்தூர்), சென்னிலை (ஈரோடு), அருப்புக்கோட்டை (விருதுநகர்), ஜெயம்கொண்டம் (பெரம்பலூர்), சின்னாளப்பட்டி (ம) நரிக்கல்பட்டி (திண்டுக்கல்), ஓரிக்கை (காஞ்சிபுரம்), எமனேஸ்வரம் (பரமக்குடி), கரூர், சேலம் மற்றும் குடியாத்தம் (வேலூர்) ஆகிய இடங்களில் ரூ.20.00 கோடி மதிப்பில் 10 சிறிய அளவிலான கைத்தறிப் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகிறது. கைத்தறி இரகங்களை பரந்த சந்தைக்குக் கொண்டு சென்று,

விற்பனையை அதிகரிக்கவும், அதன் மூலம் தொழிலாளர்களுக்குப் பயனளிக்கும் வகையில் கைத்தறித் தொழிலை மேம்படுத்துவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

ஈ. இளைஞர்களைக் கைத்தறித் தொழிலில் ஈர்ப்பதன் மூலம் 5000 நபர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிடவும், ஒரே இடத்தில் பட்டு உற்பத்தி சங்கிலி முழுவதையும் உள்ளடக்கும் வகையிலும், டாக்டர் கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு நினைவு கைத்தறி பட்டுப் பூங்கா ஆரணி அருகே உள்ள பெரியண்ணநல்லூர் கிராமத்தில் 20.53 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.74 கோடி செலவில் அமைக்கப்பட உள்ளது.

இலக்கு எண்.9.b:-

அ. 2018–2019 முதல் 2023–2024 வரையிலான ஆண்டுகளில், கைத்தறி ஆதரவுத் திட்டத்தின் கீழ்

ரூ.29.04 கோடி மதிப்பில் 30,227 தறிகள் மற்றும் தறி உபகரணங்கள் கைத்தறித் தொழிலின் தொழில்நுட்ப மேம்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளது.

ஆ. 2021–2022 முதல் 2023–2024 வரையிலான ஆண்டுகளில், கைத்தறி குழும வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.9.58 கோடி மதிப்பில் 7,066 தறிகள் மற்றும் தறி உபகரணங்கள் கைத்தறித் தொழிலின் தொழில்நுட்ப மேம்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளது.

இ. புதுமை, பன்முகத்தன்மை மற்றும் மதிப்பு கூட்டல்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து ஜவுளித் தொழிலை மேம்படுத்தவும் தமிழ்நாடு அரசால் புதிய நாடா இல்லாத் தறி கொள்முதலுக்காக தறி ஒன்றுக்கு 10 விழுக்காடு கூடுதல் மூலதன மானியம் உச்சவரம்புத் தொகையாக ரூ.4.00 இலட்சமும், நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான இயந்திரங்கள் கொள்முதலுக்காக இயந்திரம் ஒன்றுக்கு 10 விழுக்காடு கூடுதல் மூலதன மானியம் உச்சவரம்புத் தொகையாக

ரூ.30.00 இலட்சமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2023–2024 ஆம் ஆண்டில் 10 விழுக்காடு கூடுதல் மூலதன மானியத் தொகையாக ரூ.24.52 கோடி தகுதிபெற்ற 46 நிறுவனங்களுக்கு விடுவித்து வழங்கப்பட்டுள்ளது.

## 11. கைத்தறித் துறையின் 2024–2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

தமிழ்நாடு அரசால் கைத்தறித் துறைக்கு 2024–2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.1212.58 கோடி பின்வரும் விவரப்படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2024–2025 (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வேட்டி சேலை வழங்கும் திட்டம் | 10579.07 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2024–2025 (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 2 | கைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் | 1472.00 |
| 3 | விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் | 56318.00 |
| 4 | கைத்தறி ஆதரவுத் திட்டம் | 2000.00 |
| 5 | தமிழ்நாட்டின் பாரம்பரிய கைத்தறி இரகங்கள் மின்னணுமயமாக்கி ஆவணப்படுத்துதல் | 29.27 |
| 6 | வட்டி மானியத் திட்டம் | 1700.00 |
| 7 | தள்ளுபடி மானியத் திட்டம் | 25000.00 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2024-2025 (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 8 | மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்தின் கீழ் தமிழ்நாடு கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர்களுக்கு காப்பீட்டுக் கட்டணம் செலுத்துதல் | 75.00 |
| 9 | கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் – பங்குத் தொகைகள் | 1200.00 |
| 10 | முதியோர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியத் திட்டம் | 4300.00 |
| 11 | மாநில அளவிலான சிறந்த நெசவாளர்கள் விருது | 20.40 |
| 12 | சிறந்த ஏற்றுமதியாளர்கள் விருது | 1.00 |
| 13 | புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கை, 2019-இன்கீழ் விசைத்தறியை மேம்படுத்துதல் | 100.00 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2024–2025 (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 14 | ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் விற்பனை ஊக்குவிப்புத் தொகை | 3200.00 |
| 15 | ஈரோடு விசைத்தறி சேவை மையத்திற்கான வாடகை மானியம் | 6.72 |
| 16 | ஒருங்கிணைந்த வளாகம் கட்டுதல் | 11300.00 |
| 17 | அமலாக்கப் பிரிவின் நிருவாக செலவுகள் | 20.72 |
| 18 | சம்பளம் மற்றும் நிருவாகச் செலவுகள் | 3935.52 |
| 19 | இதர இனங்கள் | 0.05 |
| **மொத்தம்** | | **121257.75** |

# துணிநூல் துறை

## 1. முன்னுரை

இந்திய கலாச்சார கட்டமைப்பின் இதயமாக, பாரம்பரியம், புதுமை மற்றும் பொருளாதார ஆற்றல் ஆகியவற்றை ஒன்றிணைத்து நெய்யும் நூலாக ஜவுளி மற்றும் ஆடைத்தொழில் விளங்குகிறது. "தாய்த்தொழில்" எனக் கருதப்படும் இத்தொழில் ஐநூறு ஆண்டுகளுக்கும் மேலாக செழித்து கிராமப்புற வளர்ச்சிக்கும் பெண்களின் முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக இருக்கிறது. நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் ஜவுளித் துறையானது வேலைவாய்ப்பு வழங்குவதில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக இரண்டாவது துறையாக விளங்குகிறது.

உள்நாட்டு ஜவுளி மற்றும் ஆடைத் தொழில், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.3 விழுக்காடு, தொழில்துறை உற்பத்தியில் 13 விழுக்காடு மற்றும் ஏற்றுமதியில் 12 விழுக்காடு அளவிற்கு பங்களிக்கிறது. உலகளவில் ஜவுளி

மற்றும் ஆடை வர்த்தகத்தில் இந்தியா 4 விழுக்காடு பங்கைக் கொண்டுள்ளது. இத்துறையானது ஒரு பொருளாதார சக்தியாகவும் முக்கிய வாழ்வாதாரமாகவும் திகழ்கிறது. காலமற்ற மரபில் ஒவ்வொரு பாவு ஊடை இழையினால் உருவாகும் ஆடை தமிழ்நாட்டின் அடையாளமாக திகழ்வதோடு, பொருளாதாரத்தினை வழிநடத்தும் சக்தியாகவும் உள்ளது.

பாரம்பரிய கைத்தறி முதல் நவீன ஆலைகள் வரை தமிழ்நாட்டின் ஜவுளித் துறையானது பருத்தி, பட்டு, செயற்கை இழைகள், தொழில்நுட்ப ஜவுளிகள், மறுசுழற்சி செய்யப்பட்ட ஜவுளிகள் மற்றும் ஆடை உற்பத்தி ஆகியவற்றை உள்ளடக்கிய துறை ஆகும். ஜவுளித்தொழிலுக்கேற்ற அமைவிடம், திறன்மிகு பணியாளர்கள், ஆதரவான வணிகச்சூழல் மற்றும் தொழில் தொடங்குவதில் தொழில்முனைவோர்களின் ஆர்வம் ஆகிய காரணங்களால் இந்திய ஜவுளித்

தொழிலின் கலங்கரை விளக்கமாக நமது மாநிலம் திகழ்கிறது.

தமிழ்நாட்டில் 2.20 கோடிக்கும் அதிகமான நூற்புக்கதிர்கள், 5.68 இலட்சம் விசைத்தறிகள், 1.91 இலட்சம் கைத்தறிகள் மற்றும் சுமார் 15,000 ஆயத்த ஆடை நிறுவனங்களை தன்னகத்தே கொண்டு நூற்பு, நெசவு, பின்னல் ஆடை ஆகிய தொழில்களில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக விளங்குகிறது. இது ஜவுளி மையமாக மட்டும் இல்லாமல், இந்தியாவின் ஜவுளி மரபுகளை வரையறுக்கும் படைப்பாற்றல் மற்றும் அறிவாற்றல் ஆகியவற்றின் சான்றாகவும் திகழ்கிறது.

**2. முன்னேற்றத்தை முன்னிறுத்தும் துணிநூல் துறை**

மாநிலத்தில் தொழில்நுட்ப ஜவுளித்தொழிலை முன்னேறச் செய்வதை துணிநூல் துறை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. ஜவுளித்தொழில் வளர்ச்சிக்குத் தேவையான கொள்கைகளை உருவாக்குதல், திட்டங்களைச் செயல்படுத்துதல் புதுமைத்திட்டங்கள் மற்றும் கூட்டுமுயற்சிகளுக்கு

ஆதரவளித்தல், தொழில் வளர்ச்சியை ஊக்குவித்தல், நிலைத்தன்மையை மேம்படுத்துதல் ஆகியவை மூலம் ஜவுளித் துறையை சிறந்து விளங்கச் செய்வதோடு, பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கும் துணிநூல் துறை முக்கிய பங்களிக்கிறது.

## 2.1 துணிநூல் துறையின் நோக்கங்கள்

துணிநூல் துறையானது பின்வரும் நோக்கங்களை முன்னிலைப்படுத்தி செயல்பட்டு வருகிறது.

- திறன்மிக்க தொழிலாளர்கள், பொருத்தமான நிலம் மற்றும் சரக்குப் போக்குவரத்து வசதி உள்ளிட்ட ஏராளமான வளங்களைப் பயன்படுத்தி இழை முதல் நாகரிக ஆடை உற்பத்தி வரை, (from Fibre to Fashion), ஜவுளி இயந்திரங்கள் மற்றும் உதிரிபாகங்கள், இவற்றுடன் ஜவுளி மதிப்புத் தொடரில் (Textile Value Chain) நிலையான வளர்ச்சியை எய்துதல்

- தொழில்நுட்ப ஜவுளி உற்பத்தித் திறன்களை மேம்படுத்துதல்

- ஜவுளி மதிப்புத் தொடரில் (Textile Value Chain) குறிப்பாக தொழில்நுட்ப ஜவுளிப் பிரிவில் சிறப்பு கவனம் செலுத்தி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளை ஊக்குவித்தல்

- உள்நாட்டு நுகர்வு மற்றும் ஏற்றுமதி ஜவுளிகளின் தரத்தை உறுதி செய்தல்

- ஜவுளித் துறையில் வெளிநாட்டு முதலீடுகளுக்கான உகந்த மற்றும் விருப்பமான இடமாக நமது மாநிலத்தை உருவாக்குதல்

- சுற்றுச் சூழல் மற்றும் சமூகத்தின் மீதான பாதிப்பு தொடர்பான விதிமுறைகளுக்கு உட்பட்டு நவீன தொழில் நுட்பங்களை (State–of–the–Art) பின்பற்றவும், சிறந்த உற்பத்திக்கான நடைமுறைகளை

(GMP) பின்பற்றுவதற்கான செயலாக்கத்தில் உறுதுணையாகவும் இருத்தல்

- ஆடை வடிவமைப்பாளர்கள், வடிவமைப்பு நிறுவனங்கள் மற்றும் உலகளாவிய வணிக முத்திரை நிறுவனங்கள் (Global brands) போன்றவற்றை ஒருங்கிணைத்து செயல்பட ஊக்குவித்தல்

- ஆடை அலங்கார நிகழ்ச்சிகளை ஆண்டுதோறும் நடத்தி, மாறிவரும் நாகரிகத்திற்கு ஏற்ப ஜவுளிச் சுற்றுலாவிற்கான வாய்ப்புகளை உருவாக்குதல்

- சுற்றுச்சூழலுக்கு ஏற்றவாறு, குறைந்த செலவிலான மற்றும் நிலையான ஜவுளி பதனிடுவதற்கான கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்துதல்

- செயற்கை இழைகள் மற்றும் மறு சுழற்சி ஜவுளிகள் உற்பத்தியில் கூடுதல் கவனம் செலுத்துதல்

## 2.2 துணிநூல் துறையின் அமைப்பு

துணிநூல் துறையானது, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் தமிழ்நாடு அரசின் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையால் நிருவகிக்கப்படுகிறது.

துணிநூல் ஆணையர் துறைத் தலைவராகவும், அவருக்கு உதவியாக கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் தலைமையிடத்தில் பணியாற்றுகின்றனர். மேலும், சேலம், கரூர், திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய நான்கு மண்டல அலுவலகங்களில் துணை இயக்குநர்கள் மற்றும் உதவி இயக்குநர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

துணிநூல் துறையின் கீழ் பின்வரும் கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் இயங்கி வருகின்றன: –


1. ஆண்டிப்பட்டி (தேனி), எட்டயபுரம் (தூத்துக்குடி), ஆரல்வாய்மொழி (கன்னியாகுமரி), ஊத்தங்கரை (கிருஷ்ணகிரி), அறந்தாங்கி (புதுக்கோட்டை) மற்றும் அச்சங்குளம் (இராமநாதபுரம்) ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஆறு கூட்டுறவு நூற்பாலைகள்

2. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், கோயம்புத்தூர்

3. தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம், (டான்ஸ்பின்) சென்னை

பின்வரும் விளக்கப்படம் துறையின் நிருவாகக் கட்டமைப்பினை விளக்குகிறது.

<u>நிருவாக அமைப்பு விளக்கப் படம்</u>



## 3. தமிழ்நாடு – ஜவுளி மையம்

தமிழ்நாட்டில் ஜவுளித்தொழிலானது, துறைசார் மதிப்புத் தொடரின் (Sector Value Chain) மூலப்பொருட்கள், உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துல் உள்ளிட்ட அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கியதாகும்.

தமிழ்நாட்டில் உள்ள கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, கரூர், விருதுநகர் முதலான பல்வேறு ஜவுளி உற்பத்தி குழுமங்கள், ஜவுளித் தொழிலின் பல்வேறு பிரிவுகளான ஆயத்த ஆடை, வீட்டு உபயோக ஜவுளிகள், நூல் மற்றும் துணி போன்றவற்றில் நிபுணத்துவம் பெற்றுள்ளதோடு, மாநிலத்தின் ஜவுளி உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்குகின்றன.

### 3.1. மூலப்பொருட்கள்

தமிழ்நாட்டின் ஜவுளித் தொழில் பல்வேறு இழைகள், மற்றும் நூல் வகைகளைக் கொண்ட

வளமான மற்றும் நுட்பமான மூலப்பொருள் மதிப்புத் தொடரை தன்னகத்தே கொண்டுள்ளது. உள்நாட்டு பருத்தி மற்றும் பட்டின் நேர்த்தியிலிருந்து, இறக்குமதி செய்யப்பட்ட பாலியஸ்டர் மற்றும் நைலானின் நவீன கால கவர்ச்சி வரை, பாரம்பரியம் மற்றும் புத்தாக்கத்தின் இணக்கமான கலவையாக தமிழ்நாட்டின் ஜவுளித் தளம் விளங்குகிறது. ஒவ்வொரு நூலையும் உன்னிப்பாகத் தேர்ந்தெடுத்து படைப்பாற்றலுடன் உள்நாட்டு மற்றும் உலகளாவிய நலன்களை எதிரொலிக்கும் கலைநயம் மிக்க படைப்புகளை தமிழ்நாட்டின் ஜவுளிக் கைவினைஞர்கள் உருவாக்குகிறார்கள்.

### 3.1.1 பருத்தி

தமிழ்நாட்டில் ஜவுளித் தொழிலில் பயன்படுத்தப்படும் முதன்மையான மூலப்பொருள் பருத்தியாகும். தமிழ்நாட்டிற்கு தேவையான 95 விழுக்காடு பருத்தியானது குஜராத், மகாராஷ்டிரா, தெலுங்கானா மற்றும் ஆந்திரப் பிரதேசம் போன்ற பருத்தி விளையும் மாநிலங்களிலிருந்து பெறப்படுகிறது.

தமிழ்நாட்டின் ஜவுளி மதிப்புத் தொடரின் முதுகெலும்பாக விளங்கும் நூற்புத் துறைக்கு கூடுதல் நீளமான நீண்ட இழை (ELS) உயர்தர பருத்தி தேவை மிகவும் இன்றியமையாததாகும்.

### 3.1.2 பட்டு

புகழ்பெற்ற பட்டு நெசவுக் குழுமங்களான காஞ்சிபுரம், தருமபுரி மற்றும் சேலம் போன்ற மாவட்டங்களில் பட்டு உற்பத்தியின் வளமான பாரம்பரியத்தை தமிழ்நாடு கொண்டுள்ளது. மாநிலத்தில் முதன்மை இரகமான மல்பெரி பட்டு வளர்ப்பு நடவடிக்கைகள், ஜவுளி உற்பத்திக்கான பட்டு கிடைத்திட உரிய பங்களிக்கின்றன.

### 3.1.3. மரபுசாரா இழைகள்

பன்னெடுங்காலமாக, பருத்தி, பட்டு, கம்பளி மற்றும் செயற்கை இழைகள் போன்ற மரபுசார் இழைகள் ஜவுளித் தொழிலில் பயன்படுத்தப்படுகின்றன. தொடர் சவாலாக விளங்கும் நுகர்வோரின் கவனத்தை கவர்வதற்கு ஜவுளித்

தொழிலில் புத்தாக்கத்திற்கு முயற்சி செய்வது இன்றியமையாததாகிறது. தற்போதுள்ள இயற்கை இழைகளுக்கு மாற்றாக வாழை, மூங்கில், சணல், ஆளி, தென்னை நார் மற்றும் அன்னாசி போன்ற மரபுசாரா இழைகள் உள்ளன. இந்த இழைகள் சுற்றுச்சூழலுக்கு உகந்த அம்சங்களைக் கொண்டுள்ளதோடு, அணிவதற்கு உகந்ததாகவும் உள்ளது. மேலும், சிறந்த பாதுகாப்பு பண்புகளுடன் கலப்பு இழைகளை உருவாக்க வழக்கமான இழைகளுடன் கலந்திட மிகவும் பொருத்தமானதாகவும் உள்ளது. எனவே, இத்துறையின் வளர்ச்சியில் தமிழ்நாடு அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது.

### 3.1.4 செயற்கை இழைகள்

பாலியஸ்டர், நைலான், அக்ரிலிக் மற்றும் விஸ்கோஸ் போன்ற செயற்கை இழைகள் தமிழ்நாட்டின் ஜவுளித் தொழிலில், குறிப்பாக தொழில்நுட்ப ஜவுளி மற்றும் கலப்பு துணிகளில்

முக்கிய பங்கு வகிக்கின்றன. மாநிலத்தில் உள்ள ஜவுளி உற்பத்தியாளர்களுக்கான செயற்கை இழை தேவைகள் இதர மாநில உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதி மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டின் மூலப்பொருள் ஜவுளி மதிப்பு தொடர் புதிய பரிணாமத்திற்கும் மாற்றத்திற்கும் தயாராக உள்ளது. இது தொழில்நுட்ப முன்னேற்றங்கள், நிலைத்தன்மையின் தேவைகள் மற்றும் மாறிவரும் சந்தைத்தேவைகள் ஆகியவற்றால் இயக்கப்படுகிறது. மூலப்பொருட்கள் கிடைப்பது செயலாக்க நிபுணத்துவம் மற்றும் திறமையான பணியாளர்கள் ஆகியவற்றின் பலத்தை மேம்படுத்துவதன் மூலம், தமிழ்நாட்டின் ஜவுளித் தொழில் அதன் முதன்மை நிலையை நிலைநிறுத்தி, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்க முடியும்.

## 3.2 உற்பத்தி

### 3.2.1 நூற்பு பிரிவு (Spinning)

உலகளாவிய ஜவுளி சந்தையில் இந்தியாவின் நூற்புத் தொழில் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது.

5 கோடிக்கும் அதிகமான நூற்புக்கதிர்களுடன் இரண்டாவது பெரிய நூற்புத் திறன் கொண்டு, நூல் வர்த்தகத்தில் உலகளாவிய அளவில் முதன்மையான நாடாக இந்தியா உள்ளது. இந்தியாவில் நூற்பாலைகள் அதிக அளவில் உள்ள தமிழ்நாடு, மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்கள் ஜவுளித் தொழிலில் பன்னெடுங்கால தொன்மை வாய்ந்த மாநிலங்கள் ஆகும்.

உலக அளவில் 2021 ஆம் ஆண்டில் 22.5 கோடி கதிர்களாக இருந்த நிறுவப்பட்ட நூற்பு கதிர்களின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 22.7 கோடி கதிர்களாக அதிகரித்துள்ளது. நிறுவப்பட்ட திறந்த முனை நூற்பு சுழலிகளின் (Open–end–Rotors) எண்ணிக்கையானது 83 இலட்சத்திலிருந்து 95 இலட்சமாக அதிகரித்துள்ளது.

5 கோடிக்கும் அதிகமான நூற்புக் கதிர்கள் மற்றும் 8.42 இலட்சம் நூற்பு சுழலிகள் ஆகியவற்றுடனும், 25 விழுக்காடு உலகளாவிய பருத்தி நூல் வர்த்தகத்துடனும், சீனாவுக்கு

அடுத்தபடியாக இந்தியா நூற்பு பிரிவில் 2வது இடத்தில் உள்ளது.

இந்தியாவிலுள்ள மொத்த நூற்பாலைகளில் 55 விழுக்காடு நூற்பாலைகள், நிறுவப்பட்ட மொத்த நூற்பு கதிர்களில் 43 விழுக்காடு கதிர்கள், நூற்பு சுழலிகளில் 60 விழுக்காடு சுழலிகள் ஆகியவற்றைக் கொண்டு நூற்புக் கதிர்களின் எண்ணிக்கை, சுழலிகளின் எண்ணிக்கை மற்றும் நூலின் உற்பத்தி ஆகியவற்றில் நாட்டிலேயே தமிழ்நாடு முன்னணியில் உள்ளது.

பருத்தி மற்றும் இதர ஜவுளிக் கழிவுகளை, திறந்த முனை நூற்பு தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி நூலாக மாற்றுவதிலும், ஏற்றுமதிச் சந்தைகளுக்கு ஏற்றவாறு உயர்தர, மதிப்பு கூட்டப்பட்ட வீட்டு உபயோக ஜவுளிப் பொருட்களை உற்பத்தி செய்வதிலும் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. தமிழ்நாட்டில் கரூர் வீட்டு உபயோக ஜவுளிகள் ஏற்றுமதி மையமாக திகழ்வதற்கு, மறுசுழற்சி

செய்யப்பட்ட நூலின் பங்கு இன்றியமையாதது. பருத்திக் கழிவுகள், நுகர்வுக்கு முந்தைய மற்றும் பிந்தைய ஜவுளிக் கழிவுகள் போன்றவற்றிலிருந்து 2எஸ் முதல் 30எஸ் வரையிலான நூல்களை உற்பத்தி செய்வதற்காக 650க்கும் மேற்பட்ட திறந்த முனை நூற்பாலைகள் மாநிலத்தில் உள்ளன.

### 3.2.2 நெசவு மற்றும் பின்னலாடை(Weaving and Knitting)

தமிழ்நாட்டில் பரவலாக உள்ள விசைத்தறித் தொழிலானது உள்நாட்டுத் தேவை மற்றும் ஏற்றுமதிக்கான ஜவுளித்தேவைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குவதோடு, மாநிலத்தின் பொருளாதாரத்தில் முக்கிய காரணியாகவும் உள்ளது. இந்தியாவில் உள்ள 27.77 இலட்சம் விசைத்தறிகளில், தமிழ்நாட்டில் 5.68 இலட்சம் விசைத்தறிகள் உள்ளன. கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம் மற்றும் விருதுநகர் ஆகியவை மாநிலத்தின் முக்கிய விசைத்தறி குழுமங்களாகும்.

தமிழ்நாட்டின் இன்றியமையாத துறையாக திகழும் பின்னலாடை தொழில், அதிக வேலைவாய்ப்பை வழங்குவதோடு, அந்நிய செலாவணியையும் உருவாக்குகிறது.

இந்தியாவிலேயே பின்னலாடைத் தொழிலில் முன்னணியில் உள்ள குழுமங்களில் திருப்பூர் ஒன்றாகும். தமிழ்நாட்டில் உள்ள பின்னலாடை நிறுவனங்கள் ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, கனடா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட அனைத்து நாடுகளுக்கும் பின்னலாடைகளை ஏற்றுமதி செய்து வருகின்றன. 2023–2024 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த பின்னலாடை ஏற்றுமதியில் 55 விழுக்காடு (ரூ.30,690 கோடி) பங்களிப்பை வழங்கி, பின்னலாடை ஏற்றுமதியில் குறிப்பிடத்தக்க மையமாக திருப்பூர் உள்ளது.

| இந்திய பின்னலாடை ஏற்றுமதி (ரூ.கோடியில்) | | | |
|---|---|---|---|
| | 2021–2022 | 2022–2023 | 2023–2024 (உத்தேசமாக) |
| இந்தியா | 60,950 | 61,764 | 55,798 |

| | | | |
|---|---|---|---|
| திருப்பூர் | 33,525 | 34,350 | 30,690 |
| பங்கு (%) | 55.0% | 55.6% | 55.0% |

### 3.2.3 பதனிடுதல் (Processing)

தமிழ்நாட்டின் ஜவுளி பதனிடும் துறையானது, ஜவுளிப் பொருட்களின் மதிப்பு மற்றும் தரத்தை உயர்த்துவதில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. ஜவுளித் தொழிலின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தில் பதனிடுதல் துறையானது இணையற்ற பங்களிப்பை வழங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள ஜவுளி பதனிடும் துறையானது, பாரம்பரிய முறைகள் முதல் அதிநவீன தானியங்கி இயந்திர தொழில்நுட்பங்கள் வரை பரந்த அளவிலான தொழில்நுட்பங்களைக் கொண்டுள்ளது. பதனிடும் ஆலைகள் ஈரோடு, திருப்பூர், கரூர் மற்றும் சேலம் போன்ற மாவட்டங்களில் அதிக அளவில் உள்ளன. பொதுவாக பதனிடும் துறையினை மூன்று பிரிவுகளாக பிரிக்கலாம்.

- உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய பதனிடும் வசதிகளுடன் கூடிய பெரிய ஜவுளி ஆலைகள். (ஹை–டெக் பிரிவு)
- தனித்து இயங்கக்கூடிய நடுத்தர அளவிலான பதனிடும் ஆலைகள் (நடுத்தரம் முதல் மேம்பட்ட தொழில்நுட்பம்)
- சிறிய அளவிலான பதனிடும் ஆலைகள்

### 3.2.4 பொதுக்கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (CETP)

ஜவுளி ஆலைகளில் பூஜ்ஜிய நிலை திரவ வெளியேற்ற (ZLD) அமைப்பு மற்றும் பிற மேம்பட்ட தொழில்நுட்பங்களுடன் கூடிய பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை (CETPs) நிறுவுவதற்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. இந்த முன்முயற்சி சுற்றுச்சூழலை கட்டுப்படுத்துவதையும், பசுமையான மற்றும் சுத்தமான சூழலை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

திருப்பூரில் பூஜ்ஜிய நிலை திரவ வெளியேற்ற (ZLD) அமைப்புகளுடன் கூடிய 18 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை (CETPs) அமைக்க இந்திய அரசும், தமிழ்நாடு அரசும் இணைந்து ரூ.703.29 கோடி நிதியுதவி வழங்கியுள்ளன.

இந்த முதலீடு நிலையான உற்பத்தியை உறுதி செய்வதோடு, சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடைத் தொழிலில் வேலைவாய்ப்பை வழங்குவதன் மூலம் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிக்கிறது.

**3.3 நவ நாகரிகம் (ஆயத்த ஆடைகள்)**

இந்திய பொருளாதாரத்தில் ஆயத்த ஆடைத் தொழிலானது, அந்நியச் செலாவணி ஈட்டுவதிலும், வேலை வாய்ப்பினை உருவாக்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

2019–2020–ஆம் ஆண்டில், 839 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்த, உலகளாவிய ஆயத்த ஆடைச் சந்தை, 2025–ஆம் ஆண்டில் 3 விழுக்காடு

கூட்டு வருடாந்திர வளர்ச்சியடைந்து, (CAGR) 1000 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவை பொறுத்தவரை, உள்ளூர் ஆடை மற்றும் ஆயத்த ஆடைச் சந்தையானது, 2019–2020–ஆம் ஆண்டில் எய்திய 106 பில்லியன் அமெரிக்க டாலர் எனும் அளவிலிருந்து, 2025–2026–ஆம் ஆண்டில் 190 பில்லியன் அமெரிக்க டாலரை எட்டி புதிய உச்சத்தை தொடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆயத்த ஆடை ஏற்றுமதித் துறையில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ள நிலையில், திருப்பூர் இந்த ஏற்றுமதியில் கணிசமான பங்கினைக் கொண்டுள்ளது. ஆடைத் தொழில் தொடர்ந்து புதுப்புது வணிகப்போக்குகளுடன் வளர்ந்து வருகிறது. எதிர்வரும் காலங்களில் இத்துறையில் கீழ்க்காண் புதிய போக்குகள் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- நிலைப்புத்தன்மையுடன் கூடிய நாகரிகப் போக்கு
- தடகள ஆடை (Active wear) ஜவுளிகளில் நாகரிக போக்குகள்

- பொலிவு மற்றும் செயல்பாடு
- மின் வணிக போக்குகள்

### 3.4 சந்தைப்படுத்துதல் (Marketing)

நாட்டின் மொத்த ஜவுளி ஏற்றுமதியில் 20 விழுக்காடு அளவு மற்றும் மொத்த பின்னலாடை ஏற்றுமதியில் 55 விழுக்காடு அளவு பங்களிப்புடன் ஜவுளி மற்றும் ஆடை ஏற்றுமதியில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக விளங்குகிறது. தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் ஜவுளி ஏற்றுமதி முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டின் ஜவுளி ஏற்றுமதியில் ஆயத்த ஆடைகள், வீட்டு உபயோக ஜவுளிகள் முக்கிய பங்கினை வகிக்கின்றன.

தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஜவுளிகள் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், மத்திய கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் உட்பட உலகளவில் பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

### 3.5 தொழில்நுட்ப ஜவுளிகள் (Technical Textiles)

தொழில்நுட்ப ஜவுளிகள் என்பவை குறிப்பிட்ட உயர் செயல்திறன்களுக்காக துல்லியமாக வடிவமைக்கப்பட்டு பயன்படுத்தப்படும் ஜவுளிப் பொருட்களாகும்.

இயற்கை இழைகள், மறுசுழற்சி செய்யப்பட்ட இழைகள், செயற்கை இழைகள், கனிமங்களிலிருந்து பெறப்படும் இழைகள் மற்றும் கூட்டு இழைகள் ஆகியவை தொழில்நுட்ப ஜவுளி பொருட்களில் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வகை தொழில்நுட்ப ஜவுளிகள் நூல் நெசவு, இழை பிணைத்தல் (Non woven) மற்றும் நூல் பின்னல் ஆகிய முறைகளில் தயாரிக்கப்படுகின்றன.

பல வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளில் தொழில்நுட்ப ஜவுளிகள் அதிக பயன்பாட்டில் உள்ள நிலையில் தொழில்நுட்ப ஜவுளிகளின் தொழில்நுட்ப, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் நன்மைகளை

பெரிய அளவில் இந்தியா இன்னும் முழுமையாகப் பயன்படுத்தவில்லை.

**தொழில்நுட்ப ஜவுளித் துறையின் தற்போதைய நிலை**

மேம்பட்ட பொருளாதாரச் சூழல் காரணமாக, சமீப காலங்களில் உலகளவில் தொழில்நுட்ப ஜவுளிகளின் பயன்பாடு அதிகரித்துள்ளது. தொழில்நுட்ப முன்னேற்றங்கள், குறைந்த செலவு மற்றும் குறைவான சுற்றுச்சூழல் பாதிப்பு, நீடித்துழைக்கும் தன்மை மற்றும் எளிமையாக கையாளுதல் போன்ற பண்புகளால் உலக சந்தையில் தொழில்நுட்ப ஜவுளிகளுக்கான தேவை அதிகரித்துள்ளன. தொழில்சார் தொழில்நுட்ப ஜவுளிகள், வாகனம்சார் தொழில்நுட்ப ஜவுளிகள், கட்டுதல்சார் தொழில்நுட்ப ஜவுளிகள் கட்டுமானம்சார் தொழில்நுட்ப ஜவுளிகள் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள்சார் தொழில்நுட்ப ஜவுளிகள் ஆகியவை உலகளவில் தொழில்நுட்ப ஜவுளிகளின் சந்தை மதிப்பில் மூன்றில் இரண்டு பங்கினை கொண்டுள்ளன.

உலகளாவிய தொழில்நுட்ப ஜவுளி சந்தையின் அளவு சமீப ஆண்டுகளில் கணிசமாக வளர்ந்துள்ளது. இது 2022–ஆம் ஆண்டில் 212 பில்லியன் டாலர்களிலிருந்து 2027–ஆம் ஆண்டில் 274 பில்லியன் டாலர்களாக 5.2 விழுக்காடு எனும் கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தில் வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய தொழில்நுட்ப ஜவுளி சந்தை 2021–2022 இல் 19.49 பில்லியன் டாலர் மதிப்பிலான உள்நாட்டு உற்பத்தி மற்றும் 2.46 பில்லியன் டாலர் மதிப்பிலான இறக்குமதிகளுடன், மொத்தம் 21.95 பில்லியன் டாலர் மதிப்புடன் உலகளவில் ஐந்தாவது பெரிய தொழில்நுட்ப ஜவுளி சந்தையாகத் திகழ்கிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில், இந்திய தொழில்நுட்ப ஜவுளி சந்தை ஆண்டிற்கு 8 முதல் 10 விழுக்காடு வரையிலான வளர்ச்சியினை எட்டியுள்ளது. இந்தியாவில் தொழில்நுட்ப ஜவுளி துறையின்

வளர்ச்சியைத் தூண்டும் சில முக்கிய காரணிகள் பின்வருமாறு:

- அதிகரித்து வரும் நுகர்வோர் விழிப்புணர்வு
- இறக்குமதிக்கான மாற்று வாய்ப்புகள்
- வளர்ந்து வரும் இறுதி–பயனர் தொழில்துறைகள்
- தொழில்நுட்பங்களை ஏற்கும் தன்மை
- அரசின் ஆதரவு
- தேவை மற்றும் உற்பத்திக்கிடையே காணப்படும் பெரிய இடைவெளி

**தமிழ்நாட்டின் தொழிற்சூழல்**

தமிழ்நாடு இந்தியாவின் முக்கிய ஜவுளி மையங்களில் ஒன்றாகும். தொழில்நுட்ப ஜவுளித் துறையில் தமிழ்நாடு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. வலுவான உள்கட்டமைப்பு, திறன்மிகு பணியாளர்கள், வளமான ஜவுளிப் பாரம்பரியம், புதுமை

மற்றும் தொழில்துறை முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் சூழல் ஆகியவை தமிழ்நாட்டின் சிறப்பம்சங்களாக உள்ளன.

**வாய்ப்புகள்**

தொழில்நுட்ப ஜவுளித் துறையில் தமிழ்நாட்டின் வாய்ப்புகளை விளக்கும் சில முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

- வலுவான ஜவுளி உற்பத்தித் தளம்
- உள்கட்டமைப்பு மற்றும் தொழிற்சூழல்
- வளர்ந்து வரும் நுகர்வோர் பிரிவு
- தேவைக்கும் வழங்கலுக்கும் இடையே காணப்படும் கணிசமான இடைவெளி

**முக்கிய சவால்கள்**

மாநிலத்தின் தொழில்நுட்ப ஜவுளித் தொழில் வளர்ச்சியடைய பின்வரும் முக்கிய சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது:

- விழிப்புணர்வின்மை
- போதிய சந்தை இணைப்புகளின்மை

- அதிக செயல்திறன் கொண்ட ஜவுளிகளுக்கான சிறப்பு மூலப்பொருட்களின் பற்றாக்குறை
- திறன் வாய்ந்த உற்பத்தி முறை
- புதுமையான களங்களில் முதலீடு செய்வதில் முதலீட்டாளர்களின் உள்ளார்ந்த தயக்கம்

**முன்னோக்கிய பாதை**

தொழில்நுட்ப ஜவுளித் துறையானது, வளர்ந்து வரும் உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்வதற்கும், உலகளவில் போட்டியிடுவதற்கும், உற்பத்தியாளர்களுக்கு ஏராளமான வாய்ப்புகளை வழங்குகிறது. தமிழ்நாடு தொழில்நுட்ப ஜவுளித்தொழிலின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் நிதிச் சலுகைகள் மற்றும் கொள்கை ஆதரவுடன் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்:

- தொழில்நுட்ப அறிவைப் பெறுதல்
- சர்வதேச கூட்டாண்மைகளை உருவாக்குதல்

- ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான ஆதரவு
- பயிற்சி மற்றும் கல்வி
- தரநிலைகளை நடைமுறைப்படுத்துதல்
- நுகர்வினை அதிகரிப்பதற்கான வழிமுறை
- குறிப்பிட்ட தொழில்களில் தொழில்நுட்ப ஜவுளிப் பொருட்களை கட்டாயமாகப் பயன்படுத்துதல்

**4. வளர்ச்சிக்கான ஊக்கம் – சந்தைப்படுத்துதல்**

**4.1 சர்வதேச ஜவுளிக் கண்காட்சிகளில் "தமிழ்நாடு அரங்கம்"**

தமிழ்நாடு ஜவுளித்துறை ஏற்றுமதியில் ரூ.50,000 கோடிக்கு மேல் பங்களிக்கிறது. நமது ஜவுளிப் பொருட்களை உலகளவில் சந்தைப்படுத்த, நமது மாநிலத்தின் ஜவுளிப் பொருட்களை சர்வதேச ஜவுளி வர்த்தகக் கண்காட்சிகளில் காட்சிப்படுத்தி விளம்பரப்படுத்துவது அவசியமாகும். மேலும், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் ஏற்றுமதி சந்தையில் நுழைவதற்கும் வெளிநாடுகளில் புதிய சந்தைகளை

கண்டறியவும் போதிய ஆதரவு வழங்குவது அவசியமாகிறது.

தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஜவுளி இரகங்களின் சர்வதேச சந்தைப்படுத்துதலை ஊக்குவிக்கவும், தமிழ்நாட்டினை ஜவுளி கொள்முதலுக்கான முக்கிய மையமாக உலக அளவில் நிலை நிறுத்தவும், தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும், இரண்டு சர்வதேச ஜவுளிக் கண்காட்சிகளில் 20 அரங்குகளுடன் பிரத்தியேக தமிழ்நாடு காட்சியரங்கினை அமைத்து வருகிறது.

தமிழ்நாடு காட்சியரங்கின் கீழ் பங்கேற்று அரங்குகள் அமைக்க, அரசு பின்வரும் நிதி உதவியை வழங்குகிறது.

| வ. எண் | விவரம் | அதிகபட்ச நிதியுதவி/கண்காட்சியர் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | அரங்க வாடகை (50 விழுக்காடு, அதிகபட்சம் ரூ.2.00 இலட்சம்) | 2.00 |

| வ. எண் | விவரம் | அதிகபட்ச நிதியுதவி/கண்காட்சியர் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 2 | விமானக் கட்டண நிதியுதவி (50 விழுக்காடு எகானமி வகுப்பு பயணக் கட்டணத்தில், அதிகபட்சம் கண்காட்சி ஒன்றுக்கு ரூ.25.00 இலட்சம் மட்டும்) | 1.25 |
| **மொத்தம்** | | **3.25** |

புதுவகை தயாரிப்புகள், புதுமையான உத்திகள் மற்றும் ஜவுளித் தொழிலை முன்னேற்றுவதற்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றைக் கொண்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த தொழில்முனைவோர்களுக்கு இந்த நிதியுதவி பயனளிக்கும்.

தமிழ்நாடு காட்சியரங்கமானது, ஜவுளி ஏற்றுமதியைப் பெருக்கி, தமிழ்நாட்டில் அந்நியச் செலாவணியை மேம்படுத்துவதற்கான புதிய வழிகளைக் கண்டறிந்து, ஏற்றுமதியினை அதிகரித்து அதன் மூலம் ஜவுளித் தொழிலில் அதிக

வேலைவாய்ப்புகள் உருவாக்குதலை உறுதி செய்கிறது.

மேலும், சர்வதேச ஜவுளிக் கண்காட்சிகளில் உள்ள காட்சியரங்கம் அமைப்பதன் மூலம் சர்வதேச ஜவுளித் துறையில் வாடிக்கையாளர்களின் தற்போதைய விருப்பம் மற்றும் சந்தைப்போக்குகளைப் புரிந்துகொள்ள ஏதுவாகிறது. இதற்கென, 2023–2024 ஆம் ஆண்டில் ரூ.1.60 கோடியை அரசு அனுமதித்துள்ளது.

### 4.1.1 குளோபல் சோர்சிங் எக்ஸ்போ, மெல்போர்ன், ஆஸ்திரேலியா

குளோபல் சோர்சிங் எக்ஸ்போ என்பது ஆஸ்திரேலியாவின் மெல்போர்னில் 2023 ஆம் ஆண்டு நவம்பர் 21 முதல் 23 தேதி வரை நடைபெற்ற முக்கிய ஜவுளிக் கண்காட்சிகளில் ஒன்றாகும். இதில் இந்தியாவிலிருந்து 202 பேர் உட்பட 16

நாடுகளில் இருந்து 836 கண்காட்சியாளர்கள் பங்கேற்றனர்.

மேற்காண் கண்காட்சியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 20 கண்காட்சியாளர்களுடன் பிரத்தியேக "தமிழ்நாடு காட்சியரங்கம்" அமைக்கப்பட்டது. இதில் ஆயத்த ஆடைகள், வீட்டு உபயோக ஜவுளிகள் மற்றும் துணி உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டனர்.

கண்காட்சியின் போது சுமார் 300 வர்த்தக பார்வையாளர்கள் தமிழ்நாடு காட்சியரங்கினை பார்வையிட்டனர். மேலும் வணிக பரிவர்த்தனைகளின் அளவும் கணிசமாக இருந்தது.

### 4.1.2 பாரத் டெக்ஸ் 2024, புதுதில்லி

பாரத் டெக்ஸ் 2024, உலகளாவிய அளவில் மிகவும் குறிப்பிடத்தக்க ஜவுளி கண்காட்சிகளில் ஒன்றாகும். இது 2024ஆம் ஆண்டு பிப்ரவரி 26 முதல் 29 வரை புதுதில்லியில் உள்ள பிரகதி மைதானத்தில்,

ஏற்றுமதி மேம்பாட்டு குழுக்களின் கூட்டமைப்பால் நடத்தப்பட்டது.

இக்கண்காட்சியானது 2,00,000 சதுர மீட்டர் பரப்பளவில் 3,000 கண்காட்சியாளர்களைக் கொண்டிருந்தது. இது ஜவுளி மதிப்பு தொடரின் அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கியது.

இக்கண்காட்சியில் 106 சதுர மீட்டர் பரப்பளவில் பிரத்தியேக "தமிழ்நாடு காட்சியரங்கம்" அமைக்கப்பட்டது. இதில் மாநிலத்தின் நிலையான உற்பத்தி நடைமுறைகள், சர்வதேச வணிகர்களை தமிழ்நாட்டிற்கு ஈர்க்கும் காரணிகள், தமிழ்நாட்டின் ஜவுளி மற்றும் கைத்தறி செறிவுப்பகுதிகள் போன்றவை காட்சிப்படுத்தப்பட்டது. மேலும், அரங்கில் கைத்தறி நிறுவப்பட்டு செயல்விளக்கம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு காட்சியரங்கினை ஒட்டி 51 கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன. கண்காட்சியில் ஆயத்த ஆடைகள், வீட்டு உபயோக

ஜவுளிகள், தொழில்நுட்ப ஜவுளிகள், கைத்தறி வகைகள், நூல், துணிகள் மற்றும் மதிப்பு கூட்டல் பொருட்கள் ஆகியவை காட்சிப்படுத்தப்பட்டன.

இங்கிலாந்து, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பல சர்வதேச வணிகர்கள் உட்பட சுமார் 2,600 பேர் தமிழ்நாடு காட்சியரங்கிற்கு வருகை புரிந்தனர். மேலும், கோ–ஆப்டெக்ஸ் உள்ளிட்ட கண்காட்சியாளர்களுக்கும், வருகை புரிந்த சர்வதேச வணிகர்களுக்கும் இடையே வணிக ஒப்பந்தங்கள் தொடர்பாக விவாதங்கள் நடைபெற்றன.

## 4.2 துணிநூல் துறைக்கான பிரத்தியேக இணையதளம்

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் 2022–2023 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தொடரின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, துணிநூல் துறைக்கென பிரத்தியேக இணையதளம் உருவாக்கப்பட்டு, 15.03.2024 அன்று www.tntextiles.tn.gov.in என்ற இணையதள முகவரியில்

பொது பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. ஜவுளி ஆர்வலர்கள் மற்றும் தொழில் முனைவோர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் இந்த இணையதளம் மிக நுணுக்கமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஜவுளித் துறை தொடர்பான தமிழ்நாடு அரசின் திட்டங்கள், கொள்கைகள் மற்றும் அறிவிப்புகள் பற்றிய முக்கிய தகவல்களின் விரிவான களஞ்சியமாக இந்த இணையதளம் பயனர்களை ஈர்க்கும் முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஜவுளித் தொழில் துறையில், எழுச்சிமிக்க மாநிலமாக வழிநடத்தி செல்வதற்கு இந்த இணையதளமானது ஜவுளித்துறைக்கு உரிய தகவல்களை வழங்கி, நம்பகத்தன்மையுடன் கூடிய ஆதாரமாக உள்ளது. ஜவுளித்துறையில் வணிக வளர்ச்சியை முன்னெடுப்பதில் கவனம் செலுத்தி, உரிய தகவல்களை தொடர்ந்து ஜவுளி தொழில் முனைவோர்களுக்கு வழங்குவதை இந்த

இணையதளம் நோக்கமாகக் கொண்டுள்ளது. ஜவுளி மதிப்பு தொடரில் இழை முதல் ஆடை உற்பத்தி வரை சமீபத்திய முன்னேற்றங்கள் பற்றிய தொழில்நுட்ப அறிவுகளை வழங்குவதன் மூலம், அறிவுசார் முடிவுகளை எடுக்கவும், புதுமைகளை புகுத்திடவும், தொழில் நிறுவனங்களுக்கு ஏதுவாகிறது.

மேலும், இந்த இணையதளம் ஜவுளித்துறை சார்ந்த ஆலோசனைகள், சிறந்த நடைமுறைகள் மற்றும் சந்தை நுண்ணறிவு ஆகியவற்றைப் பகிர்வதற்கான இணைப்புப் பாலமாக திகழ்கின்றது. தொழில் முனைவோர்களிடையே ஒத்துழைப்பினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பயனர்களுக்கு தேவையான ஜவுளித்துறை சார்ந்த தகவல்களை அளிப்பதிலும், ஜவுளித்துறையில் தற்போதைய தொழில் நடைமுறைகளைப் பற்றி தனிநபர்கள் தெரிந்து கொள்ளவும், முதலீடு வாய்ப்புகள் பற்றி அறிந்து கொள்ளவும், ஜவுளி வணிக நடவடிக்கைகளை விரிவுபடுத்தவும், இந்த

இணையதளம் எளிமையான அணுகு முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**4.3 ஜவுளித்தொழில் ஊக்குவிப்புப் பிரிவு**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டவாறு சென்னை துணிநூல் ஆணையரகத்தில் "ஜவுளித்தொழில் ஊக்குவிப்புப் பிரிவு" துவங்கப்பட்டுள்ளது.

**இப்பிரிவின் நோக்கங்கள் பின்வருமாறு :**

- ஜவுளித் துறையின் வளர்ச்சிக்கான அரசுத்திட்டங்கள் மற்றும் முன்னெடுப்புகளை தொழில்முனைவோர்களிடையே பரப்புதல்
- ஜவுளி தொழில் முனைவோர்களுக்கு அத்தியாவசிய உதவி மற்றும் வசதிகளை வழங்குதல்
- தொழில்முனைவோர்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களை ஒருங்கிணைத்தல்

- ஜவுளித்தொழில் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை வணிகமயமாக்க ஊக்குவித்தல்

கடந்த ஆண்டில், ஜவுளித்தொழில் ஊக்குவிப்புப் பிரிவு மூலம் சுமார் 35 ஜவுளி தொழில்முனைவோர்களுக்கு தேவையான விவரங்கள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

## 5. தொழில்துறை மேம்பாட்டிற்கான உள்கட்டமைப்புத் திட்டங்கள்

### 5.1 சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள்

இந்தியாவின் முதன்மையான ஜவுளித் தளமாக தமிழ்நாட்டை உயர்த்தவும், வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்குடனும், தமிழ்நாடு அரசு 2015 ஆம் ஆண்டில் "சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள்" திட்டத்தை துவக்கியது.

இத்திட்டத்தின் கீழ் தொழில் முனைவோர்களுக்கு சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள் அமைக்க தகுதியான திட்ட மதிப்பீட்டில்

50 விழுக்காடு, அதிகபட்சமாக ஒரு பூங்காவிற்கு ரூ.2.50 கோடி வரை நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கு 2 ஏக்கர் நிலம் மற்றும் 3 ஜவுளி உற்பத்தி அலகுகளை நிறுவுதல் ஆகியன குறைந்தபட்ச தகுதிகளாகும்.

ஜவுளித் தொழில் முனைவோர்களின் தொடர்ச்சியான கோரிக்கைகளை ஏற்ற தமிழ்நாடு அரசு, ஜூன் 24, 2022 அன்று இத்திட்டத்தின் கீழ் மானியம் பெறுவதற்கான தகுதியான திட்டக் கூறுகளில் தொழிற்சாலைக் கட்டடங்களை சேர்க்கும் வகையில் உரிய திருத்தங்களை மேற்கொண்டு அரசாணை வெளியிட்டது. இதன் தொடர்ச்சியாக இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் 2022 டிசம்பர் 14 அன்று வெளியிடப்பட்டன.

தமிழ்நாடு அரசின் இந்த முனைப்பான நடவடிக்கைகளின் விளைவாக, மாநிலத்தில் சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்களை அமைக்க ஜவுளித்

தொழில் முனைவோர்கள் ஆர்வத்துடன் முன்வந்துள்ளனர். அரசின் இம்முன்னெடுப்பு தொழில் வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கு அரசின் முயற்சிகளின் வெற்றிக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகிறது.

இதுவரை பல்வேறு மாவட்டங்களில் 9 சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, இத்திட்டத்தினை செயல்படுத்திட முதல் தவணையாக ரூ.5.00 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

1. திருப்பதி மினி டெக்ஸ்டைல் பார்க், திருவள்ளூர்
2. பாரத் மினி டெக்ஸ்டைல் பார்க் லிட், தருமபுரி
3. வி.எம்.டி டெக்ஸ்டைல் பார்க் பிரைவேட் லிட், கரூர்
4. கார்த்திகேயா வீவிங் பார்க் பிரைவேட் லிட், திருப்பூர்
5. ஸ்ரீ பிரனவ் டெக்ஸ்டைல் பார்க் பிரைவேட் லிட், கரூர்
6. நாச்சி டெக்ஸ்டைல் எக்ஸ்போர்ட் பிரைவேட் லிட், கரூர்
7. வி.ஜி.வி.எஸ் டெக்ஸ் பார்க் LLP, ஈரோடு
8. ஓயாசிஸ் டெக்ஸ் பார்க் பிரைவேட் லிட், கரூர்
9. லீ குளோப் டெக்ஸ்டைல் பார்க் பிரைவேட் லிட், கரூர்

இத்திட்டம், தொழில் முனைவோர்கள் ஜவுளிக் குழுமத்தில் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட வழிவகுப்பதோடு, தனியார் முதலீடுகளை ஈர்த்து, ஒவ்வொரு பூங்காவிலும் சுமார் 200 நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம், ஜவுளித் தொழிலின் வளர்ச்சிக்கு அடிகோலும். மேலும், இத்திட்ட செயலாக்கத்தின் வாயிலாக அரசுக்கு ஓர் ஆண்டிற்கு ஒரு பூங்காவிற்கு ரூ.50 இலட்சம் முதல் ரூ.100 இலட்சம் வரை வருவாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 5.2 பிரதமரின் மாபெரும் ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலங்கள் மற்றும் ஆடை பூங்காக்கள் (PM–MITRA)

பிரதமரின் மாபெரும் ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலங்கள் மற்றும் ஆடைப் பூங்காக்கள் (MITRAs) திட்டம், ஜவுளிச்செயல்பாடுகளின் அளவை மேம்படுத்துவதோடு, முழு மதிப்புச் தொடரையும் ஒரே இடத்தில் வைப்பதன் மூலம் போக்குவரத்து

செலவுகளைக் குறைப்பதன் வாயிலாக அதிக முதலீட்டை ஈர்த்தல், வேலைவாய்ப்பை உருவாக்குதல், ஏற்றுமதியைப் பெருக்குதல் ஆகியவற்றினை நோக்கமாகக் கொண்டு, இந்திய ஜவுளித் தொழிலை வலுப்படுத்தும் வண்ணம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ரூ.30 கோடி நிருவாக செலவினம் உட்பட 2027–2028 ஆம் ஆண்டு முடிய 7 ஆண்டுகளுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ரூ.4445 கோடி ஆகும்.

இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் சிறப்பு நோக்க முகமை பிரதமரின் மாபெரும் ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலங்கள் மற்றும் ஆடைப் பூங்காக்கள் (MITRAs) திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு மாநில அரசால் அமைக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வ நிறுவனமாக (மாநில அரசின் 51 விழுக்காடு பங்கு மற்றும் மத்திய அரசின் 49 விழுக்காடு பங்குகளுடன்) செயல்படும்.

பிரதமரின் மாபெரும் ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலங்கள் மற்றும் ஆடைப் பூங்காக்கள் (PM MITRA) திட்டத்தின் துவக்க விழா 22.03.2023 அன்று சென்னையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு ஒன்றிய ஜவுளித்துறை அமைச்சர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. விருதுநகர் மாவட்டம், இ.குமாரலிங்கபுரம் கிராமத்தில், 1052 ஏக்கர் நிலப்பரப்பில், இப்பூங்கா அமைக்கப்படவுள்ளது.

**5.3 முத்திரை பதிக்கும் திட்டம் – ஜவுளி நகரம்**

2022–2023 ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தொடரின்போது, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் சென்னைக்கு அருகில் ஜவுளி நகரம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரிப்பது குறித்த அறிவிப்பை வெளியிட்டார். அதன்படி சென்னைக்கு அருகில் ஜவுளி நகரம் உருவாக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 5.3.1 ஜவுளி நகரத்தின் முக்கிய அம்சங்கள்:

**மாபெரும் ஜவுளி விற்பனை மையம்**: மாபெரும் ஜவுளி விற்பனை மையமாக நிலைநிறுத்தப்பட்டுள்ள ஜவுளி நகரமானது, ஜவுளி மதிப்புத் தொடர் முழுமைக்கும் வணிகரிடமிருந்து வணிகர் (B2B) மற்றும் வணிகரிடமிருந்து வாடிக்கையாளர் (B2C) ஆகிய இரு வகை வணிகத்திற்கான வாய்ப்புகளை அதிகரிக்க வழிவகை செய்யும்.

**சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பு:** ஜவுளி மதிப்புத் தொடரில் முன் பகுதி செயல்பாடுகள் மற்றும் பின் தொடர் செயல்பாடுகளை (forward and backward linkages) மேம்படுத்தி ஒட்டுமொத்த ஜவுளி மதிப்புத் தொடரையும் ஒருங்கிணைப்பதன் மூலம் இணக்கமான சுற்றுச்சூழல் அமைப்பை வளர்ப்பதை ஜவுளி நகரம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**கூட்டு முயற்சி வாய்ப்புகள்:** ஜவுளித் தொழிலில் உள்ள அனைத்து தொழில்முனைவோர்களும் தொடர்பு கொள்வதற்கான ஒரு ஆற்றல்மிக்க தளமாக

செயல்படும் ஜவுளி நகரமானது, வளர்ந்து வரும் நாகரிக போக்குகளை கண்டறிந்து, சந்தைத்தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் திறம்பட செயல்படும்.

**கூட்டாற்றல் மற்றும் புதுமை:** கூட்டாற்றல் மற்றும் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதன் மூலம், பல்வேறு ஜவுளித் தொழில் பிரிவுகளில் புதுமை வாய்ந்த மற்றும் செலவு குறைந்த மதிப்பு கூட்டாற்றலை ஜவுளி நகரம் ஊக்குவிக்கும்.

**உலகளவிய வர்த்தக மையம்:** முக்கியத்துவமிக்க இடத்தில் அமைக்கப்படவுள்ள ஜவுளி நகரமானது தேசிய மற்றும் சர்வதேச அளவில் மிகப்பெரிய மற்றும் அனைத்து வசதிகளையுடைய ஜவுளி வர்த்தக மையங்களில் ஒன்றாக அமைந்து தமிழ்நாட்டின் நற்பெயரை மென்மேலும் உயர்த்தும்.

**தொழில்முறை ஆலோசனை மற்றும் வெளிப்படைத்தன்மை**: ஜவுளி நகரம் அமைப்பது தொடர்பாக, ஒரு விரிவான சாத்தியக்கூறு ஆய்வை நடத்த ஒரு தொழில்முறை ஆலோசகர் ஏற்கனவே

நியமிக்கப்பட்டு விரிவான திட்ட அறிக்கையை தயாரிக்கப்பட்டுள்ளது.

ஜவுளி நகரம் அமைப்பதற்கு ஏற்ற நிலம் கண்டறியும் பணி நடைபெற்று வருகிறது.

### 5.4 ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காத் திட்டம் (SITP)

ஜவுளித் தொழில் வளர்ந்து வருவதைக் கருத்தில் கொண்டும், உலகத் தரம் வாய்ந்த ஜவுளித் தொழிற்சாலைகளை அமைப்பதற்கான கட்டமைப்பு வசதிகளை ஓரிடத்தில் உருவாக்கும் பொருட்டும் ஒன்றிய அரசு 2005 ஆம் ஆண்டில் "ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காத் திட்டத்தை" (SITP) தொடங்கியது.

இத்திட்டமானது பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சியின் அடிப்படையில் ரூ.40.00 கோடி உச்சவரம்புக்குட்பட்டு திட்டத்தொகையில் 40 விழுக்காடு ஒன்றிய அரசின் மானியத்தோடு செயல்படுத்தப்படுகிறது. மாநில அரசு ரூ.9.00 கோடி உச்சவரம்பிற்குட்பட்டு 9 விழுக்காடு திட்டத்

தொகையினை மானியமாக வழங்குகிறது. இத்திட்டம் 31.03.2020–க்கு பிறகு நீட்டிக்கப்படவில்லை.

ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டத்தின்கீழ், கீழ்க்கண்ட நான்கு பூங்காக்கள் முழுவதுமாக நிறுவப்பட்டு தற்போது செயல்பட்டு வருகின்றன.

1) உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா, பல்லடம், திருப்பூர்
2) ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, கரூர்
3) மதுரை ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, வாடிப்பட்டி, மதுரை
4) உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா, குமாரப்பாளையம், நாமக்கல்

மேலும், கீழ்க்கண்ட 3 ஜவுளிப் பூங்காக்கள் நிறுவுவதற்கான பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

1) கில்ட் ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா, செங்கப்பள்ளி, திருப்பூர்
2) சைமா பதனிடும் பூங்கா, கடலூர்
3) பல்லவாடா தொழில்நுட்ப ஜவுளிப் பூங்கா, ஈரோடு

## 5.5 சேலம் யார்ன் கலரிங் பூங்கா

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், 2023–2024 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், சேலத்தில் 100 ஏக்கர் நிலப்பரப்பில், 880.00 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதற்கிணங்க, ஜாகீர்அம்மாபாளையத்தில் நிலம் தேர்வு செய்யப்பட்டு, சிறப்பு நோக்கு முகமைக்கு நிலமாற்றம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

## 5.6 நூற்புத் துறைக்கான 6 விழுக்காடு வட்டிமானியத் திட்டம்

மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 2024–2025 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் துணிநூல் துறை சார்ந்த பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்.

"தமிழ்நாட்டை நூற்புத்துறையில் (Spinning sector) முன்னணி மாநிலமாக உருவாக்க நூற்பு துறையில் புதிய தொழில்நுட்பங்களில் முதலீடு செய்வது அவசியமாகும். மேற்படி, இந்த இலக்கை அடைய "அடுத்த 10 ஆண்டுகளில் ரூ.500.00 கோடி மதிப்பீட்டில் நூற்பு துறையில் தொழில்நுட்ப மேம்பாட்டிற்காக 6 விழுக்காடு வட்டி மானியம் என்னும் சிறப்பு திட்டம் அறிமுகப்படுத்தப்படும்".

15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான நூற்பு இயந்திரங்களின் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காக தமிழ்நாட்டில் உள்ள நூற்பாலைகளால் வங்கிகளிடமிருந்து பெறும் கடனுக்கான வட்டித் தொகையில் 6 விழுக்காடு வட்டி மானியமாக எதிர்வரும் 10 ஆண்டு காலத்திற்கு வழங்கிட ரூ.500.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாக அரசு அறிவித்துள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள நூற்பு தொழிற்சாலைகளில் நூல்

உற்பத்தியினை அதிகப்படுத்தவும், நூலின் தரத்தினை மேம்படுத்தவும் முடியும்.

### 5.7 சிறப்பு பருத்தி சாகுபடி இயக்கம்

பருத்தி சாகுபடியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தமிழ்நாட்டில் சிறப்பு பருத்தி சாகுபடி இயக்கத்தினை உருவாக்க அரசு ஒரு குழுவை அமைத்துள்ளது. பருத்தி சாகுபடி வகைகள், இயந்திரமயமாக்கல், விதை வகைகள் போன்ற இனங்கள் குறித்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU), மத்திய பருத்தி ஆராய்ச்சி நிறுவனம் (CICR), தென்னிந்திய பஞ்சாலைக் கழகம்– பருத்தி மேம்பாடு மற்றும் ஆராய்ச்சிக் கழகம் (SIMA–CDRA) மற்றும் வேளாண்மைத்துறை சார்ந்த முக்கிய பிரதிநிதிகளுடன் விவாதங்கள் நடத்தப்பட்டது. இத்திட்டத்தினை செயல்படுத்துவது தொடர்பாக சம்பந்தப்பட்ட துறைகளின் பொறுப்புகள், செயல்படுத்தும் உத்திகள், மற்றும் வழிமுறைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் தமிழ்நாட்டில் பருத்தி உற்பத்தி அதிகரிப்பதோடு, பருத்தி சார் ஜவுளித் தொழில் வளர்ச்சிக்கும் வழி வகுக்கும். முக்கிய சவால்களை எதிர்கொள்வதன் மூலமும், நிலையான நடைமுறைகளை செயல்படுத்துவதன் மூலமும், தமிழ்நாட்டில் பருத்தி சாகுபடிக்கு, சிறப்பு பருத்தி சாகுபடி இயக்கம் ஒரு வலுவான அடித்தளத்தை அமைக்கும்.

## 6. நிலைத்தன்மைக்கான முன்னெடுப்புகள்

### 6.1 பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் கழிவு உப்புக்கள் சுத்திகரித்தல்

தமிழ்நாட்டில் உள்ள பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் சுமார் 1,00,000 மெட்ரிக் டன் கழிவு உப்புக்கள் உள்ளன. இவை உடல்நலம் மற்றும் சுற்றுச்சூழல் அபாயங்களை ஏற்படுத்த வாய்ப்புகள் உள்ளன.

பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் கழிவு உப்புக்கள் சேர்வதை தவிர்க்க உரிய

தொழில்நுட்பம் இல்லாத நிலையில், இதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வது அவசியமாகிறது.

இதற்கு தீர்வு காணும் வகையில், 2022–2023 ஆம் ஆண்டுக்கான மானியக்கோரிக்கையின்போது மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

"தமிழ்நாட்டிலுள்ள ஜவுளி பதனிடும் தொழில் சார்ந்த பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் ஏற்கெனவே சுத்திகரிப்பு செய்த பின்னர் இருப்பாக உள்ள மீதமுள்ள கழிவு உப்புக்களை சுற்றுச்சூழல் பாதிப்பின்றி அகற்றிடத் தேவையான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகள் (Research and Development) ஊக்குவிக்கப்படும்".

மேற்காண் அறிவிப்பின் நோக்கங்கள் பின்வருமாறு.

- கழிவு உப்புக்கள் சேர்வதை தவிர்த்தல்

- ஏற்கனவே உள்ள கழிவு உப்புக்களை பயன்படுத்தக்கூடிய பொருட்களாக மாற்றுதல்
- கழிவுநீர் சுத்திகரிப்பு செலவைக் குறைப்பதற்காக நிலையான செயல்பாட்டு நடைமுறைகளை (SOPs) உருவாக்குதல்

பொதுக்கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் திரட்டப்பட்ட கலப்பு உப்புக்களை அகற்றவும், புதிதாக உப்புக்கள் சேர்வதை தவிர்ப்பதற்கான தொழில்நுட்பத்தினை இறுதி செய்யவும் ஒரு அறிவியல் குழு உருவாக்கப்பட்டது. இக்குழு பல ஆலோசனைகளை நடத்தி, கலப்பு உப்புக்களை ஒழிப்பதற்கான பொருத்தமான தொழில்நுட்பத்தை இறுதி செய்துள்ளது. கூடுதலாக, புதிய கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவுவதற்கும், செலவு குறைந்த செயல்பாடு மற்றும் பராமரிப்பதற்கான நிலையான நடைமுறைகளையும் (SOPs) இக்குழு பரிந்துரைக்கும். இதற்கென, M/s ICFCS Pvt Ltd., எனும் தனியார் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு திருப்பூரிலுள்ள மன்னரை

பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் Build–Own–Operate (BOO) அல்லது Build–Own–Operate–Transfer (BOOT) அடிப்படையில் ஆலை அளவிலான முன்னோடி திட்டத்தினை செயல்படுத்த துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**7. ஜவுளி மேம்பாட்டு நடவடிக்கைகள்**

**7.1 தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு–2024**

தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு (GIM), 2024, ஜனவரி 7 மற்றும் 8 தேதிகளில் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்றது. இம்மாநாடு வணிகத் தலைவர்கள், முதலீட்டாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்களை ஒன்றிணைத்து கூட்டு வாய்ப்புகளை ஊக்குவித்திடவும், அதிக அளவிலான வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீடுகள் வாயிலாக மாநிலத்தின் பொருளாதாரத்தினை மேலும் மேம்படுத்துவதையும் இலக்காக கொண்டுள்ளது.

இம்மாநாட்டில் ஜவுளித் துறைக்கு ரூ.5,000 கோடி மதிப்பிலான முதலீட்டை ஈர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், 67 ஜவுளி தொழில் முனைவோர்கள் மூலம் ரூ.5,041.57 கோடி அளவிலான முதலீடுகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**7.2 தொழில்நுட்ப ஜவுளிகள் குறித்தான கருத்தரங்கம்**

2023–2024 ஆம் ஆண்டிற்கான கைத்தறி மற்றும் துணிநூல் துறைக்கான மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் வெளியிட்ட அறிவிப்பின்படி, ஒன்றிய அரசின் ஜவுளி அமைச்சகத்துடன் இணைந்து தொழில்நுட்ப ஜவுளிகள் குறித்தான கருத்தரங்கம், இந்திய தொழில் கூட்டமைப்பு (CII) மற்றும் தமிழ்நாடு அரசின் துணிநூல் துறை மூலம் 17.11.2023 மற்றும் 18.11.2023 ஆகிய தேதிகளில் கோயம்புத்தூரில் நடத்தப்பட்டது.

அரசு உயர் அலுவலர்கள், வர்த்தக அமைப்புகள், ஜவுளி உற்பத்தி சங்கங்கள், தொழில்நுட்ப ஜவுளி உற்பத்தி நிறுவனங்கள், தொழில்நுட்ப ஜவுளிகளுக்கான சிறப்பு மையங்கள், ஜவுளி ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

கருத்தரங்கில் தொழில்நுட்ப ஜவுளித் துறையின் சமீபத்திய போக்குகள், முன்னேற்றங்கள், புதுமைகள் மற்றும் வாய்ப்புகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இதில் தொழில்நுட்ப ஜவுளிகள்துறை வல்லுநர்கள் பங்கேற்று தங்கள் கருத்துகளை பகிர்ந்து கொண்டனர்.

**7.3 தொழில்நுட்ப ஜவுளிகள் குறித்தான தேசிய பயிலரங்கம்**

தமிழ்நாடு அரசின் துணிநூல் துறை மூலம், கோயம்புத்தூரில் 02.02.2024 மற்றும் 03.02.2024 ஆகிய தேதிகளில், தென்னிந்திய ஜவுளி ஆராய்ச்சிக் கழகம், பிஎஸ்ஜி தொழில்நுட்ப கல்லூரி, இந்தியா

முழுவதிலும் உள்ள தொழில்நுட்ப ஜவுளிகளுக்கான சிறப்பு மையங்கள் மற்றும் தொழில் முனைவோர்களுடன் இணைந்து தொழில்நுட்ப ஜவுளிகள் குறித்தான இரண்டு நாள் பயிலரங்கம் நடத்தப்பட்டது. இதில் இந்தியாவில் தொழில்நுட்ப ஜவுளிக்கான சிறப்பு மையங்களில் அடையாளம் காணப்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் தொழில்நுட்ப ஜவுளிகளுக்குப் பயன்படுத்தப்படும் புதுமையான தயாரிப்புகள் குறித்து விளக்கப்பட்டது.

பயிலரங்கின்போது, மருத்துவ ஜவுளிசார் தொழில்நுட்பம், தொழில்சார் ஜவுளித் தொழில்நுட்பம், புவிசார் ஜவுளித் தொழில்நுட்பம், வேளாண்சார் ஜவுளித் தொழில்நுட்பம், பாதுகாப்புச்சார் ஜவுளித் தொழில்நுட்பம், விளையாட்டுச்சார் ஜவுளித் தொழில்நுட்பம், இழை பிணைத்தல் (Non–woven) மற்றும் கலப்பு இழைகள் போன்ற தொழில்நுட்ப ஜவுளிகள் குறித்தான பல்வேறு பிரிவுகளில் விவாதங்கள் நடத்தப்பட்டன. மேலும் BIS சான்றிதழ்

மற்றும் கழிவுகளை மறுசுழற்சி செய்தல் போன்ற பொதுவான இனங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. இப்பயிலரங்கில் 120–க்கும் மேற்பட்ட தொழில்முனைவோர்கள் கலந்து கொண்டனர்.

## 7.4 தொழில்நுட்ப ஆலோசனைக் குழு

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் "தொழில்நுட்ப ஆலோசனைக் குழு" தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

ஜவுளித் தொழிலின் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார நிலையினை கண்காணித்து, ஜவுளித் தொழிலையும், அதன் கட்டமைப்பையும் மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்குவதே இதன் முதன்மை நோக்கமாகும். இது ஜவுளி கூட்டமைப்புகள், ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங்கள் மற்றும் முக்கிய தொழில் நிறுவனங்கள்

உட்பட பல்வேறு துறைகளின் பிரதிநிதிகளை கொண்டதாகும்.

இக்குழுவின் முதலாவது கூட்டம், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், 22.06.2023 அன்று, கோயம்புத்தூரில் நடைபெற்றது. கூட்டத்தில், தற்போதைய ஜவுளித்துறையின் போக்குகள், தொழில்துறையில் உள்ள சவால்கள் மற்றும் தேவையான அரசு உதவிகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

ஜவுளித்தொழில் நிபுணர்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பரிசீலிக்கப்பட்டு, துணிநூல் துறை மூலம் புதிய ஜவுளிக்கொள்கை உருவாக்கப்பட்டு வருகிறது. இது ஜவுளித்தொழில் தொடர்புடைய சிக்கல்களைத் தீர்க்கவும், இத்தொழில்துறையை முன்னோக்கி நகர்த்தவும் ஏதுவாகும்.

## 8. மனித வள முன்னெடுப்புகள்

### 8.1 ஜவுளித் தொழிலாளர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் (TNSDC) இணைந்து தென்னிந்திய ஜவுளி ஆராய்ச்சி கழகத்தின் (SITRA) மூலம் நூற்பு, நெசவு, பின்னலாடை மற்றும் தொழில்நுட்ப ஜவுளித் துறையில் 8,950 நபர்களுக்குப் பயிற்சி அளிக்க தமிழ்நாடு அரசு முன்மொழிந்துள்ளது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமானது தற்போது, கே.ஜி.டெனிம் லிட், கோயம்புத்தூர், ஏசியன் பேப்ரிக்ஸ் லிட், கரூர், எல்.எஸ்.மில்ஸ், தேனி, திருப்பூர் சாய ஆலைகள் சங்கம் மற்றும் சூர்யா ஸ்பின்னிங் மில், நாமக்கல் ஆகிய ஐந்து பயிற்சி மையங்களுக்கு அனுமதி அளித்துள்ளது.

முதற்கட்டமாக, கோயம்புத்தூரில் உள்ள கே.ஜி.டெனிம் நிறுவனத்தில் 19 நபர்களுக்கு

நாடா இல்லாத் தறிகள் தொடர்பான பயிற்சியானது வழங்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக, தேனியில் உள்ள எல்.எஸ்.மில்லில் நூற்பு (Ring Frame) தொடர்பான பயிற்சியானது வழங்கப்பட்டுள்ளது.

## 8.2 கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை தொழிலாளர்களுக்கான ஓய்வூதியப் பலன்கள்

கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு நிலுவையில் உள்ள பணிக்கொடை வழங்க தமிழ்நாடு அரசு ரூ.5.47 கோடி ஒப்பளித்துள்ளது. அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில் 109 தொழிலாளர்கள் மற்றும் 35 பணியாளர்களுக்கு நிலுவையில் உள்ள பணிக்கொடைத் தொகையை 09.03.2024 அன்று மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

## 9. கூட்டுறவு நூற்பாலைகள்

### 9.1 முன்னேற்றத்தின் தூண்கள் – துறையின் கீழ் செயல்படும் நிறுவனங்கள்

தற்போது, துணிநூல் துறையின் கீழ் ஆறு கூட்டுறவு நூற்பாலைகள், ஆண்டுக்கு, 14,200 மெட்ரிக் டன் உற்பத்தி திறனுடன், கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தடையின்றி நூல் வழங்கும் நோக்கத்துடன், இயங்கி வருகின்றன.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தரமான நூலை நியாயமான விலையில் வழங்குவதற்காக ஆலைகள் ரூ.142.40 கோடியில் நவீனமயமாக்கப்பட்டுள்ளன. ஆலைகளில் நிறுவப்பட்டுள்ள நூற்புக் கதிர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| வ. எண் | நூற்பாலைகளின் பெயர் | நிறுவப்பட்டுள்ள நூற்புக் கதிர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அண்ணா | 24192 |
| 2 | பாரதி | 18144 |
| 3 | கன்னியாகுமரி | 22800 |

| | | |
|---|---|---|
| 4 | புதுக்கோட்டை | 20976 |
| 5 | கிருஷ்ணகிரி | 20160 |
| 6 | இராமநாதபுரம் | 12096 |
| | **மொத்தம்** | 118368 |

கூட்டுறவு நூற்பாலைகள், கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சிட்டா நூலையும், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கோன் நூலையும், அரசின் சீரியத் திட்டங்களான வேட்டி சேலை வழங்கும் திட்டம் மற்றும் பள்ளிச் சீருடைத் திட்டத்திற்கு வழங்கி வருகின்றன. இத்திட்டங்களுக்கான நூல் விநியோக விவரங்கள் பின்வருமாறு:

| **வேட்டி சேலை வழங்கும் திட்டம் – பொங்கல் 2024 (தொடர் வேலைவாய்ப்புத் திட்டம் உட்பட)** | | | |
|---|---|---|---|
| **வ. எண்** | **நூற்பாலைகளின் பெயர்** | **விநியோகிக்கப் பட்ட நூலின் அளவு (மெட்ரிக் டன்னில்)** | **விநியோகிக்கப் பட்ட நூலின் மதிப்பு (ரூ. கோடியில்)** |
| 1 | அண்ணா | 698.03 | 21.647 |
| 2 | பாரதி | 443.49 | 13.815 |
| 3 | கன்னியாகுமரி | 629.49 | 19.701 |
| 4 | புதுக்கோட்டை | 639.73 | 19.956 |

| | | | |
|---|---|---|---|
| 5 | கிருஷ்ணகிரி | 310.16 | 9.698 |
| 6 | இராமநாதபுரம் | 388.71 | 12.018 |
| | **மொத்தம்** | **3109.61** | **96.835** |

| **பள்ளிச் சீருடை வழங்கும் திட்டம் கல்வியாண்டு - 2023–2024** | | | |
|---|---|---|---|
| **வ. எண்** | **நூற்பாலை – களின் பெயர்** | **விநியோகிக்கப் பட்ட நூலின் அளவு (மெட்ரிக் டன்னில்)** | **விநியோகிக்கப் பட்ட நூலின் மதிப்பு (ரூ. கோடியில்)** |
| 1 | அண்ணா | 629.16 | 20.08 |
| 2 | பாரதி | 479.28 | 15.30 |
| 3 | கன்னியாகுமரி | 613.26 | 19.58 |
| 4 | புதுக்கோட்டை | 562.44 | 17.95 |
| 5 | கிருஷ்ணகிரி | 526.80 | 16.82 |
| 6 | இராமநாதபுரம் | 330.12 | 10.54 |
| | **மொத்தம்** | **3141.06** | **100.27** |

| **தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம் மூலம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்ட சிட்டா நூல்** | | | |
|---|---|---|---|
| **வ. எண்** | **நூற்பாலை– களின் பெயர்** | **விநியோகிக்கப் பட்ட நூலின் அளவு (மெட்ரிக் டன்னில்)** | **விநியோகிக்கப் பட்ட நூலின் மதிப்பு (ரூ. கோடியில்)** |
| 1 | அண்ணா | 351.78 | 9.93 |
| 2 | பாரதி | 216.82 | 6.15 |
| 3 | கன்னியாகுமரி | 291.51 | 8.07 |
| 4 | புதுக்கோட்டை | 399.97 | 11.24 |

| தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம் மூலம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்ட சிட்டா நூல் | | | |
|---|---|---|---|
| **வ. எண்** | **நூற்பாலை–களின் பெயர்** | **விநியோகிக்கப் பட்ட நூலின் அளவு (மெட்ரிக் டன்னில்)** | **விநியோகிக்கப் பட்ட நூலின் மதிப்பு (ரூ. கோடியில்)** |
| 5 | கிருஷ்ணகிரி | 242.39 | 8.79 |
| 6 | இராமநாதபுரம் | 181.39 | 5.37 |
| | **மொத்தம்** | **1683.86** | **49.55** |

### 9.1.1 தொழில்நுட்ப மேம்பாட்டின் மூலம் தர முன்னேற்றம்

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க 2022–2023 ஆம் ஆண்டில், ஆறு கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் மொத்தம் ரூ.31.26 கோடி செலவில் 10 ஆட்டோ கோனர் (Autoconer) இயந்திரங்கள், 12096 காம்பாக்ட் ஸ்பின்னிங் சிஸ்டம் (Compact Spinning System) மற்றும் 6 நூல் பதப்படுத்தும் இயந்திரங்கள் (Yarn Conditioning Machine), கொள்முதல் செய்யப்பட்டு நவீனமயமாக்கப்பட்டுள்ளன.

இதனால் கூட்டுறவு நூற்பாலைகள் தொழிலாளர் செலவினங்களை குறைத்து, மேம்பட்ட தரத்துடன் அதிக உற்பத்தியை எட்ட முடியும்.

### 9.1.2 கூட்டுறவு நூற்பாலைகளுக்கு தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கான உள்கட்டமைப்பு

2022−2023 ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சரின் அறிவிப்பிற்கிணங்க, பாரதி, கன்னியாகுமரி மற்றும் புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலைகளில் 11 KVA தனி உயர்மின்னழுத்த மின்பாதைகள் (Dedicated Power Feeder Line) ரூ.1.75 கோடி மதிப்பீட்டில் நிறுவிட அனுமதி வழங்கப்பட்டு, பாரதி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலைகளில் உயர் மின்னழுத்தப் பாதைகள் நிறுவப்பட்டு 11.10.2023 முதல் செயல்பாட்டில் உள்ளன. புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில் தடையின்றி மின்சாரம் வழங்க பிரத்தியேக உயர்மின்னழுத்த

மின்பாதைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 9.2 தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், கோயம்புத்தூர்

கோயம்புத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், 1956 ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டது.

தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின்கீழ் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள குறிச்சியில் 12 ஏர்ஜெட் தானியங்கித் தறிகளுடன் கூடிய உற்பத்தி அலகு இயங்கி வருகிறது. இக்கழகம் பாலியஸ்டர் பருத்தி சூட்டிங் மற்றும் சர்ட்டிங் இரகங்களை உற்பத்தி செய்கிறது. தமிழ்நாடு அரசின் பள்ளிச் சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் டிரில் துணிகள், கேஸ்மென்ட், கட்டமிடப்பட்ட சட்டை, ஆகிய இரகங்களையும் வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் வேட்டிகளையும் விநியோகம் செய்து வருகிறது.

மேலும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் பள்ளிச் சீருடை துணிகள் மற்றும் வேட்டி சேலைகள் கொள்முதல் செய்து விநியோகம் செய்வதற்கான முகமை நிறுவனமாகவும் செயல்பட்டு வருகிறது. மேலும், இந்த நிறுவனம், மாநில போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு காவல் துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் (ICDS), மாநகராட்சிகள் மற்றும் பிற பொதுத்துறை நிறுவனங்களுக்கு சூட்டிங் மற்றும் ஷர்ட்டிங் வகைகளை உற்பத்தி செய்து வழங்கி வருகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் கழகத்தின் நிதிச் செயல்பாடுகள் கீழ்க்கண்டவாறு:

| **ஆண்டு** | **உற்பத்தி (இலட்சம் மீட்டரில்)** | **உற்பத்தி மதிப்பு (ரூ. இலட்சம்)** | **விற்பனை (இலட்சம் மீட்டரில்)** | **விற்பனை மதிப்பு (ரூ. இலட்சம்)** | **நிகர இலாபம் / நட்டம் (ரூ.இலட்சம்)** |
|---|---|---|---|---|---|
| 2022–2023 | 29.16 | 1836.77 | 46.95 | 3453.04 | (+)43.09 |
| 2023–2024 | 27.80 | 1524.03 | 58.55 | 5077.62 | (+)60.03 (உத்தேசமாக) |

## 9.3 தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (TANSPIN)

தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகள் இணையம் (TANSPIN) கூட்டுறவு நூற்பாலைகளுக்கான பருத்தி கொள்முதல் செயல்முறையை ஒழுங்குபடுத்துவதற்காக டிசம்பர் 1994–இல் நிறுவப்பட்டது. இந்தியாவில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டமைப்புகள், இந்திய பருத்திக் கழகங்கள் போன்றவற்றிலிருந்து நியாயமான விலையில் நல்ல தரமான பருத்தியை கொள்முதல் செய்து, தமிழ்நாட்டின் அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் வழங்குவதே இந்த இணையத்தின் முக்கிய நோக்கமாகும். இந்நோக்கத்திற்கென தமிழ்நாடு அரசு டான்ஸ்பின் நிறுவனத்தில் ரூ.25.00 கோடி பங்கு மூலதனத்தையும் ரூ.2.07 கோடி பருத்தி சுழல் நிதியையும் முதலீடு செய்துள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகள் இணையம் (TANSPIN) பருத்தி கொள்முதல் செய்வதற்காக 6 கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் கடனாக ரூ.11.49 கோடியை வழங்கியுள்ளது. இந்த நிறுவனம் 2023-2024ஆம் ஆண்டில் உத்தேசமாக ரூ.117.00 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

## 10. துணிநூல் துறையின் முன்னோக்கிய பாதை

தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு உருவாக்குதல், ஏற்றுமதி வருவாய் மற்றும் தொழில் வளர்ச்சிக்கு ஜவுளித் துறை முக்கிய பங்கு வகிப்பதால் மாநில பொருளாதாரத்தின் அடிநாதமாய் உள்ளது. ஜவுளித் தொழில் தடைகளைத் தாண்டி வாய்ப்புகளைப் பெற்று பல ஆண்டுகளாக நீண்ட வரலாற்றுடன், வளர்ச்சி மற்றும் மாற்றத்தைக் கொண்டுள்ளது. இத்தொழிலில் நிலவும் தற்போதைய நிலைமையை மதிப்பிடுதல், முன்னேற்றத்திற்கு தேவையான அத்தியாவசிய பகுதிகளை அடையாளம் காண்பது, நீண்டகால விரிவாக்கம் மற்றும் போட்டியிடும் தன்மையினை

மேம்படுத்துவதற்கான பாதையை வகுப்பது அவசியமாகிறது.

### 10.1 உள்கட்டமைப்பு மேம்பாடு

தமிழ்நாட்டில் ஜவுளித் தொழிலின் வளர்ச்சி மற்றும் போட்டியிடும் திறனில் உள்கட்டமைப்பு மேம்பாடு முக்கிய பங்கு வகிக்கிறது. ஊரகப் பகுதிகளில் ஜவுளி உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு 2024–2025 ஆம் ஆண்டில் 10 சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள் அமைக்கப்படும்.

### 10.2 சந்தை பரவலாக்கம் மற்றும் ஏற்றுமதி மேம்பாடு

சந்தை பரவலாக்கம் மற்றும் ஏற்றுமதி மேம்பாடு ஆகியவை தமிழ்நாட்டு ஜவுளித் தொழிலின் நீடித்த வளர்ச்சி மற்றும் போட்டியிடும் தன்மைக்கு இன்றியமையாத உத்திகளாகும். அதற்கிணங்க, 2024–2025 ஆம் ஆண்டில் நடைபெறும் இரண்டு சர்வதேச ஜவுளிக் கண்காட்சிகளில்

20 கண்காட்சி அரங்குகள் கொண்ட தமிழ்நாடு அரங்கம் அமைக்கப்படும்.

**10.3 கழிவு மேலாண்மை**

பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் கழிவு உப்புக்களிலிருந்து தொழிற்சாலைகளில் பயன்படுத்தக்கூடிய இரசாயனம் போன்ற துணை பொருட்கள் தயாரிப்புக்குச் சாத்தியமான தொழில்நுட்பங்கள் கண்டறியப்பட்டு அவை செயல்படுத்தப்படும். இதற்கென, M/s ICFCS Pvt Ltd., தனியார் நிறுவனத்துடன் இணைந்து திருப்பூரிலுள்ள மன்னரை பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் Build–Own–Operate (BOO) அல்லது Buld–Own–Operate–Transfer (BOOT) அடிப்படையில் ஆலை அளவிலான முன்னோடித் திட்டத்தினை செயல்படுத்த துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 10.4 திறன் மேம்பாட்டுத் திட்டங்கள்

தமிழ்நாட்டில் ஜவுளித் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களின் திறன்களை மேம்படுத்துவதில் திறன் மேம்பாடு மற்றும் பயிற்சித் திட்டங்கள் முக்கியமானதாகும். ஒட்டுமொத்த ஜவுளி மதிப்புச் தொடரைச் சேர்ந்த ஜவுளித் தொழிலாளர்களின் திறனை மேம்படுத்த புகழ்பெற்ற ஜவுளி நிறுவனங்கள் மூலம் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

இந்தியாவிலேயே ஜவுளித் தொழிலின் மையமாக தமிழ்நாட்டை உருவாக்க அரசு அனைத்து சீரிய முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

## 11. நீடித்த வளர்ச்சி இலக்குகள் – சிறந்த எதிர்காலத்திற்கான புத்தாக்க முன்னெடுப்புகள்

தனிமனித மற்றும் சமூக நல்வாழ்விற்கு மிகவும் முக்கியமாக கருதப்படும் பொருளாதார வளர்ச்சி, சமூக உள்ளடக்கம் மற்றும் சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு

ஆகியவற்றினை எய்துவதற்கு ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அமைப்பானது (UNDP) 17 நீடித்த வளர்ச்சி இலக்குகளை நிர்ணயித்துள்ளது.

தமிழ்நாட்டில் நீடித்த வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்துவதற்காக பல்வேறு குழுக்களுடன் கூடிய செயல்திறன் மிக்க உயர்மட்ட குழுவை தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது.

துணிநூல் துறை நீடித்த வளர்ச்சி இலக்கான (Goal 9 Industry Innovation and Infrastructure) தொழில் மயமாக்கல் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த புதிய முயற்சிகளில் கவனம் செலுத்தி வருகிறது.

துணிநூல் துறையுடன் தொடர்புடைய நீடித்த வளர்ச்சி இலக்குகளின் குறிக்கோள்கள் பின்வரும் திட்டம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 11.1 சிறிய அளவிலான ஜவுளிப் பூங்கா

தனியார் முதலீட்டை ஈர்த்து, புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி, ஜவுளித் துறையின் வளர்ச்சிக்கு, தொழில் முனைவோர்களுக்கான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக, சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காத் திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் ஒரு ஜவுளிப் பூங்காவிற்கு அதிகபட்சமாக ரூ.2.50 கோடிக்கு உட்பட்டு தகுதியான திட்ட மதிப்பில் 50 விழுக்காடு நிதியுதவி வழங்கப்படுகிறது. சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள் குறைந்தபட்சம் 2 ஏக்கர் நிலப்பரப்பில் 3 உற்பத்தி நிறுவனங்களை கொண்டு அமைக்கப்பட வேண்டும். தற்போது 9 சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்களுக்கு தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துள்ளதோடு ரூ.5.00 கோடியினை முதற்கட்டமாக விடுவித்து ஆணையிட்டுள்ளது.

**12. துணிநூல் துறையின் 2024–2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு**

தமிழ்நாடு அரசு 2024–2025 ஆம் நிதி ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் துணிநூல் துறைக்கு பின்வரும் விவரப்படி ரூ.1146.29 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

| வ. எண் | திட்டம் / இனத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2024–2025 (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கூட்டுறவு நூற்பாலைகளுக்கு உதவி | 0.01 |
| 2 | துணித்தொழில் மைய அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்காக்களை ஏற்படுத்துதல் | 0.01 |
| 3 | மாநில ஜவுளி ஆலோசனைக் குழு – அலுவலகச் செலவுகள் | 4.00 |
| 4 | மாநில ஜவுளி ஆலோசனைக் குழு – விருந்தோம்பல் / கேளிக்கை செலவுகள் | 6.00 |

| வ. எண் | திட்டம் / இனத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2024-2025 (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 5 | மாநில ஜவுளி ஆலோசனைக் குழு - அலுவலகச் செலவுகள் அரசு சார்பற்ற உறுப்பினர்களுக்குப் பயணப்படி மற்றும் நாட்படி | 0.01 |
| 6 | புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கை-2019-இன்கீழ் பரந்த, அகலமான துணி அச்சிடும் இயந்திரத்தை வாங்குவதற்கான மூலதன மானியம் | 0.01 |
| 7 | புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கை-2019-இன்கீழ் ஆற்றல் தணிக்கை/ நீர் தணிக்கை/ சுற்றுச்சூழல் இணக்கத்தை நடத்துவதற்கான நிதியுதவி | 0.01 |
| 8 | புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கை-2019-இன்கீழ் தற்போதுள்ள நூற்பாலைகளில் சுழல் அச்சுகளை நவீனமயமாக்கலுக்காக வட்டி மானியங்கள் | 0.01 |

| வ. எண் | திட்டம் / இனத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2024–2025 (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 9 | திருப்பூரில் பூஜ்ஜிய கழிவு வெளியேற்றும் அமைப்பு | 0.01 |
| 10 | நிருவாகச் செலவுகள் (பணியாளர்களின் சம்பளம் மற்றும் இதர படிகள்) | 1136.15 |
| 11 | சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள் அமைத்தல் | 0.01 |
| 12 | துணித்தொழில் மைய அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உயர் தொழில்நுட்ப நெசவுப்பூங்காக்களை ஏற்படுத்துதல் | 0.01 |
| 13 | கூட்டுறவு நூற்பாலைகளுக்கு பங்கு மூலதன உதவி | 0.01 |
| 14 | கூட்டுறவு நிறுவனங்களுக்கு கடன் | 0.01 |
| 15 | செயல்படாத கூட்டுறவு நூற்பாலைகளுக்கு வழிவகை முன்பணம் | 0.01 |
| 16 | கூட்டுறவு நூற்பாலைகளுக்கு கடன்கள் | 0.01 |

| வ. எண் | திட்டம் / இனத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2024–2025 (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 17 | செயல்படும் கூட்டுறவு நூற்பாலைகளுக்கு வழிவகை முன்பணம் | 0.01 |
| | **மொத்தம்** | **1146.29** |

**ஆர்.காந்தி**

**கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்**